ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த

# இருண்ட ஐரோப்பா



கலையரசன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செல்வி. ஸ்ரீ. பெருமாள்

# ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா

கலையரசன்

கீழைக்காற்று வெளியீட்டகம்

சென்னை - 2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா - கலையரசன்

❖ முதற்பதிப்பு : நவம்பர் 2009 ❖ வெளியீடு: கீழைக்காற்று, 10, அவுலியா தெரு, எல்லீசு சாலை, சென்னை - 600002. தொலைபேசி: 044-28412367 ❖ அச்சு: எழில் பிரிண்ட்ஸ், சென்னை - 600024, தொலைபேசி: 9445767603 ❖ நூலாக்க விபரம்: 1/8, டெம்மி, மேப்லித்தோ, 112 பக்கங்கள்.

நூல் பற்றிய விமர்சனங்களுக்கு:

kalaiy26@gmail.com

vinavu@gmail.com

www.vinavu.com

விலை:

ரூ. 50.00



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

எண்ணெய் மணம் வீசும் அங்கோலா, நைஜீரியா... துள்ளிக் குதிக்கும் மீன் வளம் நிரம்பிய மேற்கு ஆப்பிரிக்கக் கடல், வேலையை வேகமாக முடிக்காத காரணத்தால் வெட்டப்பட்ட கறுப்பின மக்களின் கைகளில் ரப்பர்பால் வழியும் காங்கோ, கறுப்புத் தோலை உரித்து எடுக்கும் சூடானின் கட்டித் தங்கங்கள், உலகின் நாவுக்கு சாக்லேட்டின் மூலப்பொருளை வாரிவழங்கும் ஆப்பிரிக்காவின் ஐவரிகோஸ்ட், உலகுக்கே கோப்பியை ஏற்றுமதி செய்துவிட்டு எலும்பும் தோலுமாய் சாவை இறக்குமதி செய்யும் எத்தியோப்பியா... இப்படி ஆப்பிரிக்காவின் இயற்கை வளங்களையும் அவைகளைக் கொள்ளையடித்து ஆப்பிரிக்க மக்களை பட்டினிச் சாவுக்கும், கொலைவெறிக்கும் ஆளாக்கும் இருண்ட ஐரோப்பாவை எளிய முறையில் நமக்கு அறிமுகம் செய்கிறது இந்த நூல்.

இந்நூலாசிரியர் கலையரசன் தற்போது நெதர்லாந்தில் அகதியாக வாழும் ஈழத்தமிழராவார். நெதர்லாந்து கம்யூனிஸ்டு கட்சியில் உறுப்பினராகவும் சர்வதேச இடதுசாரி அமைப்பைச் சேர்ந்தவர்களுடன் நட்புறவும் கொண்டவர்.

இருபதுக்கும் மேற்பட்ட உலக நாடுகளுக்கு பயணம் செய்து, சமூகப் பிரச்சினைகளை நேரில் பார்த்து அவைகளை அரசியல் கண்ணோட்டத்தில் உலகுக்கு அறியத் தரும் சமூக அக்கறையுள்ளவர். குறிப்பாக இந்நூலில் ஐரோப்பாவில் இருந்துதான் உலகம் ஆரம்பிக்கிறது என்ற மாயையை திரைகிழிக்கிறார். இந்நூல் ஏற்கெனவே வினவு இணையதளத்தில் தொடராக வந்து வாசகர்கள் வரவேற்பைப் பெற்றது. புதிய வாசகர்களின் உலக அறிவிற்கும், தேடலுக்கும், முக்கியமாக உலக விசயங்களை அரசியல் ரீதியாக அணுகுவதற்கும் இந்நூல் பெரிதும் உதவும். நூலாக்கும் வாய்ப்பை வழங்கிய தோழர் கலையரசனுக்கும் வினவு இணையதளத்திற்கும் எமது நன்றி!

— பதிப்பகத்தார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

பக்க எண்

முன்னுரை 5

1. ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா 9

2. காங்கோவை விழுங்கிய பெல்ஜியப் பூதம் 15

3. ஐரோப்பிய காட்டுமிராண்டிகள் திருடிய ஆப்பிரிக்க அறிவுடைமை 22

4. நைஜீரியா: எண்ணெய் வளம் தொல்லை இந்த 'வல்லரசில்' 29

5. ஐவரி கோஸ்ட்: சாக்லெட்டின் தாயகம் 39

6. கருப்பர்களுக்கு இனவெறி கற்பித்த வெள்ளையின கணவான்கள் 45

7. அகில ஆப்பிரிக்க ஆட்சிக் கவிழ்ப்பு நிறுவனம் (LTD) 56

8. கருப்பினப் பேரழகியின் கிறிஸ்தவ சாம்ராஜ்யம் 64

9. சிம்பாப்வே: வெள்ளையனே வெளியேறு! 76

10. நைல் நதி: ஆப்பிரிக்காவின் நீளமான இரத்த ஆறு 82

11. லைபரியா: ஐக்கிய அடிமைகளின் குடியரசு 95

12. அங்கோலாவின் அலங்கோலம்: பனிப்போரின் பதிலிப் போர் 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

## ஆப்பிரிக்காவில் எமது வேர்களைத் தேடி...

ஆப்பிரிக்க கண்டம் பற்றிய எமது அறிவு மிகக் குறுகியது. பிரிட்டிஷ் காலனியாதிக்கவாதிகள் கற்பிக்கும் வரை, இந்து மகாசமுத்திரத்திற்கு அப்பால் இருந்த பாரிய நிலப்பரப்பு எமது கண்ணிற்கு புலப்படவில்லை. நாம் கற்றுக் கொண்ட வரலாற்று பாடங்கள் யாவும் பிரிட்டிஷ் கண்ணோட்டத்தில் எழுதப்பட்ட தரவுகள் தாம். அதனால்தான், இன்றும் கூட ஆப்பிரிக்கர்களுக்கும், தமிழருக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இல்லை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். வெள்ளையினத்தவர்களும், சீனர்களும் தனித்தனியே தோன்றிய இனங்களாக கருதிக் கொள்வதைப் போல, திராவிடர் வரலாறும் தனித்துவமாக காட்டிக் கொள்கின்றது. அண்மையில்தான், சமூக விஞ்ஞானிகள் நீண்ட ஆராய்ச்சிக்குப் பின்னர், உலகின் அனைத்து இனங்களும் ஆப்பிரிக்க மூதாதையரைக் கொண்டிருப்பதை நிரூபித்தனர்.

தமிழரின் மூதாதையரை ஆப்பிரிக்காவில் தேடுவதா? சிலருக்கு இது அபத்தமாகப் படலாம். ஐரோப்பாவின் பழமை வாய்ந்த மொழியை பேசும் பாஸ்க் (ஸ்பெயின்) இனத்திற்கும், தமிழருக்கும் தொடர்பிருப்பதாக ஒரு தமிழறிஞர் தேடிக் கண்டுபிடித்து கட்டுரை வரைந்திருந்தார். தமிழர்கள் 'தொலைந்து போன யூத இனக்குழுக்களில் ஒன்று' என்று நிறுவத் துடிக்கும் மேதாவிகளும் இருக்கின்றனர். இவையெல்லாம் பலருக்கு அபத்தமாக தோன்றுவதில்லை. அதற்குக் காரணம், ஒவ்வொரு பின்தங்கிய இனமும் தம்மை விட முன்னேற்றமடைந்த இனத்துக்கு நிகராக வர விரும்புகின்றன. உலகில் ஐரோப்பியர் வகிக்கும் மேலாண்மை, பலருக்கு 'கடவுள் கொடுத்த வரமாகத்' தெரிகின்றது. மேலாண்மை பெற ஐரோப்பியர் செய்த இனப்படுகொலைகள், கொள்ளைகள், பித்தலாட்டங்கள் என்பன பற்றி அறிந்தவர்கள் குறைவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது நாடுகளில் காலனிய காலத்தில் ஆதாயம் பெற்ற வர்க்கம் ஒன்று, பரம்பரை பரம்பரையாக ஏகாதிபத்திய விசுவாசம் காட்டத் தவறுவதில்லை. ஒருவரின் அரசியல் கருத்தமைவு, அவர் சார்ந்த வர்க்க நலன்களில் இருந்தே பிறக்கின்றது. இதனால் வளர்ச்சியடைந்த ஐரோப்பியருக்கும், நாகரீகமடையாத ஆப்பிரிக்கர்களுக்கும் நடுவில் தாம் நிற்பதாக ஒரு கற்பிதத்தை உருவாக்கிக் கொள்கின்றனர். பஞ்சமும், பிணியும் சூழ்ந்த இருண்ட கண்டமான ஆப்பிரிக்காவுடன் தம்மை இனம் காண யார் தான் விரும்புவர்? அதற்கு மாறாக செல்வச் செழிப்பு மிக்க அமெரிக்காவுடன் தம்மை இரண்டறக் கலக்க போட்டி போடுகின்றனர். இந்த தாழ்வுச் சிக்கல் தமிழரை மட்டும் பாதிக்கவில்லை. அமெரிக்கக் கண்ட நாடுகளில் வாழும் ஆப்பிரிக்க வம்சாவழி கருப்பினத்தவரும், பசுபிக் பிராந்திய ஆதிவாசிகளும் தமது வேர்களை ஆப்பிரிக்காவில் தேட விரும்புவதில்லை.

தமிழ் நாட்டில் வாழும் இருளர்கள், இலங்கையில் வாழும் வேடுவர்கள் ஆகியோர் இன்றும் ஆப்பிரிக்க அடையாளங்களைக் காவித் திரியும் ஆதிவாசி இனங்கள். இந்திய உபகண்டத்தில் ஆப்பிரிக்க ஆதிவாசிகள் வந்தேறு குடிகளுடன் கலந்து புதிய இனங்கள் உருவாகின என்ற வரலாற்று உண்மையை பலர் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை. ஆயிரம் ஆண்டுகளாக தாம் இனத்தூய்மை பேணி வருவதாக தமக்கு ஏற்றவாறு வரலாற்றை திருத்தி எழுதிக் கொள்கின்றனர். ஒரு காலத்தில் நில ஆதிக்கத்திற்காக இனக்குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட சச்சரவுகள், நாகரீகமடைந்த காலத்திலும் தொடர்கின்றன. கால்நடை மேய்த்த காலத்தில் இருந்து,கணினி வேலை செய்யும் காலம் வரை மனிதன் தனக்குள்ளே பிரிவினைகளை வளர்த்துக் கொண்டே போகிறான்.

சாதி வேற்றுமைகள் இந்தியாவின் வளர்ச்சியை தடைப்படுத்தும் என்று பெரியார் தீர்க்கதரிசனத்துடன் கூறிச் சென்றார். ஆப்பிரிக்கர்கள் தமக்கிடையிலான இனக்குரோதங்களைத் தீர்த்துக் கொள்ளாவிட்டால் சமூகப் புரட்சி இன்னும் நூறு ஆண்டுகளுக்கு பின்தள்ளப்படும் என்று குறிப்பு எழுதி வைத்தார் சே குவேரா. இந்திய உப கண்டத்திற்கும், ஆப்பிரிக்க கண்டத்திற்கும் இடையில் நிறைய ஒற்றுமைகள் இருக்கின்றன. சாதி அமைப்பு முறை, இந்திய உபகண்டத்திற்கு மட்டுமே உரியது என்று பலர் தவறாக நினைத்துக் கொள்கிறனர். வர்ணாசிரம காலம் என்பது வேறு, சாதிகளின் மூலம் வேறு. இயற்கை வளங்களின் மீதான ஆதிக்கத்திற்காக ஒன்றுடன் ஒன்று சண்டையிட்டுக் கொண்டிருந்த பண்டைய இனங்கள், வெற்றி பெற்ற இனத்தின் அதிகார வலையத்திற்குள் வந்த போது சாதிகளாக உருமாறின. ஆப்பிரிக்காவின் பல பகுதிகளில் இந்த சமூக மாற்றம் நடப்பதற்குள் ஐரோப்பியர் காலனிப்படுத்த தொடங்கி விட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோமாலியா, மொரிட்டானியா போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் இன்றும் சாதி அமைப்பு உள்ளது. இந்திய உபகண்டத்தில் நிலவும் அதே சாதி வேற்றுமை, பல்லாயிரம் மைல்களுக்கு அப்பால் கட்டிக் காக்கப்படுவது வியப்புக்குரியதாகத் தோன்றலாம். இந்தியாவில் ஆரியரின் வருகையும், சுதேசி இனங்களின் மீதான ஆதிக்கமும் சாதியத்தை நிறுவனப்படுத்தியது. அதே போல அரேபியரின் வருகையுடன்தான் மொரிட்டானியா, சோமாலியா ஆகிய நாடுகளில் ஸ்தாபனமயப்பட்ட சாதியம் தோன்றியது. அரேபியரின் தாயக பூமியில் உள்ள ஏமனிலும் சாதி அமைப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது. புதிய சமுதாய மாற்றம் வரும் போது இனக்குழுக்கள் சாதிகளாக தொடர்கின்றன. ஆதிக்க இனத்தின் மொழியை சுவீகரித்த பின்னர் அவர்களது பாரம்பரிய வேர்கள் அழிகின்றன. மொரிட்டானியா, சோமாலியா பற்றிய விரிவான ஆய்வு தேவை.

இந்தியாவில் நிலவும் சாதிப் பாகுபாட்டைப் பற்றி நான் ஐரோப்பியருக்கு விளக்கிய போது, அவர்களால் அதனைச் சரியாக கிரகித்துக் கொள்ள முடியவில்லை. ஆனால் பல்வேறு ஆப்பிரிக்க நாட்டினருடன் உரையாடிய போது, அதிசயத்தக்க விதத்தில் பல ஒற்றுமைகள் இருப்பதைக் கண்டு கொண்டேன். கிணற்றில் தண்ணீர் அள்ள உரிமையில்லாதது முதல் அகமண முறை வரை ஆப்பிரிக்க சமூகங்கள் இந்தியாவின் பிம்பமாக இருக்கின்றன. இன்றும் சில ஆப்பிரிக்க பகுதிகளில் ஒரு இனத்திற்கு (சாதிக்கு) சொந்தமான கிணற்றில் வேற்றினம் தண்ணீர் அள்ளிய குற்றத்திற்காக கொலைகள் நடக்கின்றன. சூடானின் டார்பூரில் நடந்த யுத்தம் அதற்கு ஒரு சிறந்த உதாரணம். ஆப்பிரிக்காவில் உள்ளதை இனம் என்றோ, குலம் என்றோ அல்லது வேறு எந்தப் பெயரிட்டு அழைத்தாலும், உள்நாட்டுப் பிரிவினை பல யுத்தங்களுக்கு வழி கோலியுள்ளதை மறுக்க முடியாது.

இந்தியர்களும், ஆப்பிரிக்கர்களும் ஒரு காலத்திலும் பொருளாதார ரீதியாக முன்னேற முடியாது என்பதில் ஐரோப்பியர்கள் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்துள்ளனர். ஆப்பிரிக்க, ஆசிய நாடுகள் கலந்து கொள்ளும் 'அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டை' பிச்சைக்காரர்களின் மாநாடு என்று மேற்கத்திய பத்திரிகையாளர்கள் பரிகசிப்பார்கள். அதற்கு காரணம் அவர்களுக்கிடையே இருக்கும் தீர்க்க முடியாத பிரச்சினைகள். ஐரோப்பியர்கள் தோன்றிய காலத்தில் இருந்து நாகரீகமடைந்த சமூகமாக இருக்கவில்லை. ஐரோப்பாவிலும் இனக் குரோதங்களும், சாதிப் பிரிவினைகளும் ஒரு காலத்தில் இருந்து வந்துள்ளன. இந்தியாவில் கால்பதித்த போர்த்துக்கேயர்கள், இந்திய சாதியமைப்பை தமது நாட்டில் உள்ளது போன்ற வேலைப்பிரிவினை என்று புரிந்து கொண்டார்கள். ஐரோப்பிய சாதிகள் இன்று சரித்திரமாகி விட்டன. சிலருடைய (தொழில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையிலான) சாதிப் பெயர்கள், தற்போது குடும்பப் பெயராக மாறி விட்டன. அவை இன்று அர்த்தமற்ற வெறும் பெயர்கள்.

ஆப்பிரிக்காவில் இனங்களை ஒன்றோடொன்று மோத விடுவதில் ஐரோப்பியர்களின் பங்கு குறைத்து மதிப்பிடக்கூடியதல்ல. இடது கையால் அரசுக்கு உதவுவார்கள், வலது கையால் கிளர்ச்சிக் குழுவிற்கு உதவுவார்கள். அரசு ஒரு இனம் சார்ந்ததாகவும், யுத்த பிரபுக்கள் (அல்லது கிளர்ச்சியாளர்கள்) இன்னொரு இனம் சார்ந்தும் இருப்பதால் தான் அவர்களால் தொடர்ந்து யுத்தம் செய்ய முடிகிறது. காலனியாதிக்கத்தை எதிர்த்து எழுந்த தேசிய விடுதலை, வர்க்க விடுதலை போன்ற கோஷங்களை இப்போது கேட்க முடிவதில்லை. தனது சொந்த இனமே சிறந்தது என்ற இனவாதம் நிகழ்கால அரசியலைத் தீர்மானிக்கின்றது. சியாரா லியோன், லைபீரியா போன்ற நாடுகளில் இடம்பெற்ற உள்நாட்டுப் போர்கள் சிறந்த உதாரணம். இனங்களுக்கிடையிலான யுத்தங்களில் ஐரோப்பிய ஆயுத வியாபாரிகள் கொள்ளை இலாபம் சம்பாதித்தார்கள். இந்த இரகசியங்கள் வெளியே வரும்போது ஒரு சில தனியார் கம்பெனிகள் மட்டும் தண்டிக்கப்பட்டன.

ஆப்பிரிக்காவைப் பற்றி சொல்வதற்கு இன்னும் நிறைய இருக்கின்றன. இருப்பினும் 'ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா' என்ற கட்டுரைத் தொடர் இத்துடன் முடிவுடைகின்றது. இந்த தொடரில் விடுபட்டுப் போன நாடுகளின் கதைகள் இன்னும் உள்ளன. அவற்றை பிறிதொரு தொடரில் எழுதுகின்றேன். அதற்கான குறிப்புகளை மட்டும் இங்கே சொல்லியிருக்கிறேன். இது முதலாவது பாகத்தின் முடிவுரை மட்டுமல்ல, இரண்டாவது பாகத்தின் தொடக்கவுரை. அரபு பேசும் வட ஆப்பிரிக்க நாடுகளைப் பற்றி, மத்திய கிழக்கு சம்பந்தமான பிறிதொரு தொடரில் எழுதவிருக்கிறேன். புதிய தொடர்களுக்கான தரவுகளை சேகரிப்பதற்கு எனக்கும் கால அவகாசம் தேவைப்படுகின்றது. அதற்கிடையில் இதுவரை வந்த ஆப்பிரிக்க தொடர் கட்டுரைகள், நூல் வடிவில் உங்கள் கைகளில் தவழ்ந்து கொண்டிருக்கும். என்னை எழுத ஊக்குவித்த வினவு இணையதளத்திற்கும், கட்டுரைகளை வாசித்து உற்சாகப்படுத்திய மதிப்புக்குரிய வாசகப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

— கலையரசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 1. ஆப்பிரிக்கர்கள் கண்டுபிடித்த இருண்ட ஐரோப்பா

'ஆப்பிரிக்கா' என்றவுடன், அபிவிருத்தியின்மை, தொற்று நோய், பட்டினிச்சாவு, ஏழ்மை இவற்றிற்கு ஒத்தக் கருத்துள்ள சொல்லாக பலரால் புரிந்து கொள்ளப் படுகின்றது. உண்மையில் அவ்வாறான கருத்துக்கள் வேண்டுமென்றே மேற்குலக ஊடகங்களால் பரப்பப்படுகின்றன. 'இருண்ட கண்டம்' என்று நிறவாதம் சூட்டிய பெயர், அன்றாட பேச்சு வழக்காகி விட்டது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் ஆப்பிரிக்கா பற்றிய தவறான கருத்துகளை தமிழ் மக்கள் மத்தியிலும் பொதுக்கருத்துகளாக போதித்தது. இதனால் ஒரு ஐரோப்பியரின் பார்வையிலேயே நாமும் ஆப்பிரிக்காவை பார்க்க கற்றுக் கொண்டுள்ளோம்.

உலகம் முழுவதும் தமது காலனிகளாக்கிக் கொண்டிருந்த ஐரோப்பிய வல்லரசுகள், ஆப்பிரிக்காவை மிக தாமதமாகத்தான், அதாவது 19-ஆம் நூற்றாண்டில் 'கண்டுபிடித்தன'. ஐரோப்பியருக்குத் தான் ஆப்பிரிக்காவை கண்டுபிடிக்க வேண்டியதிருந்தது. ஆப்பிரிக்க மக்கள் அதனை எப்போதோ கண்டுபிடித்து விட்டார்கள். அன்றைய ஐரோப்பியர்கள், அரபு மொழி பேசும் வட ஆப்பிரிக்க பகுதியை மட்டுமே தெரிந்து வைத்திருந்தனர். பைபிளை எழுதிய ஆண்டவருக்கே எகிப்திற்கு அப்பால் இருந்த பிரமாண்டமான நிலப்பரப்பு பற்றி தெரிந்திருக்கவில்லை என்பது ஆச்சரியமானது!

ஆசியாவிற்கும், ஐரோப்பாவிற்கும் இடையிலான சர்வதேச வர்த்தகத்தில் ஆதிக்கம் செலுத்திய அரேபியர்களுடன் போர் மூண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் மாற்றுக் கடல்வழிப் பாதை ஒன்றைத் தேடிய ஐரோப்பிய (போர்த்துகீசிய) மாலுமிகள் ஆப்பிரிக்காவை தற்செயலாகக் கண்டுபிடித்தார்கள். மேற்கு ஆப்பிரிக்கக் கரை நாடுகளான செனகல், கானா போன்ற நாடுகளில் இருந்து அடிமைகளாக்கப்பட்ட மக்களை, புதிதாகக் கண்டு பிடித்த அமெரிக்கக் கண்டத்திற்கு ஏற்றுமதி செய்யும் வாணிபம் ஆரம்பமாகியது. ஆரம்பத்தில் ஸ்பானிய, போர்த்துகீசிய அடிமை வியாபாரிகளின் ஏகபோகமாக இருந்த வர்த்தகத்தில் விரைவில் ஒல்லாந்து (டச்சு), ஆங்கிலேய வியாபாரிகளும் ஈடுபட்டனர்.

ஐரோப்பியருக்கு முன்னர் அரேபியர்கள் அடிமை வாணிபத்தில் ஈடுபட்டிருந்த வரலாறு உண்மை தான். ஆனால் அப்போது எல்லாம் பஞ்சம் அல்லது ஏழ்மை காரணமாக விற்கப்படும் அடிமைகளை, வீட்டு வேலைகளுக்காக வைத்துக் கொள்ளும் வழக்கமே நிலவியது. இன முரண்பாடுகள் இருந்த ஆப்பிரிக்காவில், அடிமைகளை சக ஆப்பிரிக்கர்களே பிடித்துக் கொடுத்தனர். அதனால் அவர்களும் இலாபமீட்டினர். இதனை ஐரோப்பியர்கள் தமது வர்த்தக நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொண்டனர். இனக்குழுச் சமுதாயங்கள் பரவலாகக் காணப்பட்ட ஆப்பிரிக்க கண்டத்தில், ஒரு இனம் அயலில் உள்ள பிற இனங்கள் மீது போர் தொடுப்பதும், வென்றவர்கள் தோற்ற இனத்தைச் சேர்ந்தவர்களை அடிமைகளாக்குவதும் வழமையாக நடந்து வந்தது. போர் தொடுக்கும் இனத்திற்கு ஐரோப்பியர்கள் ஆயுதங்கள் வழங்கி, அடிமை வேட்டையை இலகுவாக்கினர். இவ்வாறு அன்று அடிமைகளைப் பிடித்து விற்ற பல இனங்கள் இன்றும் ஆப்பிரிக்க நாடுகளின் ஆளும் வர்க்கங்களாக உள்ளன. உதாரணத்திற்கு கானாவை சேர்ந்த 'அஷாந்தி' அரச பரம்பரை. இவர்கள் தமது முன்னூறு ஆண்டு கால 'பாரம்பரியத்தை'ப் பேணுவதற்காக இன்று வரை ஒல்லாந்து அரச குடும்பத்துடன் நட்புறவைப் பேணி வருகின்றனர்.

அந்தக் காலத்தில் அட்லாண்டிக் சமுத்திரத்தில் கடல் வாணிபத்தில் ஈடுபட்டிருந்த கப்பல்கள், பல மடங்கு இலாபம் சம்பாதித்தன. ஐரோப்பாவில் இருந்து ஆயுதங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்கள், அவற்றை ஆப்பிரிக்கர்களுக்கு விற்பனை செய்து அடிமைகளை வாங்கிக் கொள்ளும். அமெரிக்கக் கண்டத்தில் உள்ள பெருந்தோட்டங்களுக்கு அடிமைகளை விற்பனை செய்து விட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்கிருந்து தங்கம், வெள்ளி போன்றவற்றை ஏற்றிக் கொண்டு வந்து ஐரோப்பாவில் விற்பனை செய்வார்கள். இதிலே ஆங்கிலேயர்கள் மிக மலினமான உத்திகளைக் கையாண்டனர். நடுக்கடலில் வைத்து பிறநாட்டு வணிகக் கப்பல்களைக் கொள்ளையடித்தனர். இவ்வாறு கொள்ளையடித்த தங்கத்தை மூலதனமாகக் கொண்டு இங்கிலாந்தில் தொழிலகங்கள் பல தோன்றின.

ஆப்பிரிக்க அடிமைகளின் உழைப்பைச் சுரண்டி அமெரிக்கா பணக்கார நாடானது. அடிமை வியாபாரத்தினால் மேற்கு ஐரோப்பியர்கள் செல்வந்தர்களானார்கள் என்று சுருக்கமாகக் கூறலாம். இருப்பினும் தாம் சேர்த்த செல்வத்தில் ஒரு பகுதியை நஷ்ட ஈடாக ஆப்பிரிக்க வளர்முக நாடுகளுக்கு கொடுக்க இதுவரை யாரும் முன்வரவில்லை. மாறாக அபிவிருத்திக்காக என்று சொல்லி, வட்டிக்கு கடன் கொடுத்து மேலும் மேலும் செல்வம் சேர்த்து வருகின்றனர். இதனால் மேற்குலகம் செய்வதையெல்லாம் மறுகாலனியாதிக்க சதிகளாக இன்று ஆப்பிரிக்க மக்கள் சந்தேகிக்கின்றனர்.

ஹிட்லர் காலத்தில் ஜெர்மனியில் நடந்த யூத இனப்படுகொலைக்கு நஷ்ட ஈடாக, ஆண்டுதோறும் ஒரு தொகைப் பணத்தை ஜெர்மனி இஸ்ரேலுக்கு கொடுத்து வருகின்றது. இஸ்ரேல் பணக்கார நாடாக இருப்பதற்கு இந்த நஷ்ட ஈடு ஒரு காரணம். அதைப் பார்த்து முன்னாள் காலனியாதிக்க நாடுகள் நஷ்ட ஈடு வழங்க வேண்டுமென்று ஆப்பிரிக்க நாடுகள் முன்வைத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளது. அண்மையில் இத்தாலி மட்டுமே லிபியாவிற்கு காலனிய கால நஷ்ட ஈடு வழங்க முன்வந்துள்ளது. லிபிய தலைவர் கடாபியின் இராஜதந்திரத்திற்கு கிடைத்த வெற்றியாக இது பார்க்கப்பட்டாலும், ஆப்பிரிக்க அகதிகளை வரவிடாமல் தடுப்பதில் இத்தாலிக்கு உள்ள கரிசனை இங்கே கவனிக்கத்தக்கது.

ஆப்பிரிக்கக் கண்டத்தை பட்டினிச்சாவு நிறைந்த வறண்ட பூமியாக ஒரு பக்கம் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரம் ஐரோப்பா தனது உணவுத் தேவைகளுக்காக ஆப்பிரிக்காவில் தங்கி இருக்கிறது. ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த மீன்பிடி வள்ளங்கள், மேற்கு ஆப்பிரிக்க கடல்களில் கேட்பாரற்று மீன்களை அள்ளிச் செல்கின்றன. தினசரி மரக்கறிகளையும், பழங்களையும் ஆப்பிரிக்கா ஏற்றுமதி செய்வதை நிறுத்தினால் ஐரோப்பியர்கள் உருளைக்கிழங்கையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆப்பிளையும் தான் சாப்பிட வேண்டியிருக்கும். ஆப்பிரிக்கக் கண்டம் முழுவதும் முரண்பாடுகளின் பூமி தான். பாலைவன வளைகுடா நாடுகள், சூடானில் நிலங்களைக் குத்தகைக்கு எடுத்து பயிரிட்டு தமது மக்களுக்கு உணவிட்டு வருகின்றனர். அதே நேரம் சூடான் டார்பூர் பிராந்திய மக்கள் தமது அன்றாட உணவுக்காகத் தொண்டு நிறுவனங்களிடம் கையேந்துகின்றனர்.

நைஜீரியாவும், அங்கோலாவும் பிரதான எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகள். ஆனால் அந்நாடுகளில் பெரும்பான்மை மக்கள் ஏழைகளாக அல்லலுறுகின்றனர். உலகில் விலை உயர்ந்த விற்பனைப் பண்டங்களில் ஒன்றான எண்ணெயை விற்று வரும் இலாபம், அதிகாரத்தில் உள்ள குறிப்பிட்ட சமூகத்தின் கைகளில் மாத்திரமே போய்ச் சேருகின்றது. ஆப்பிரிக்க நாடுகளில் எல்லாம் இந்த ஏற்றத்தாழ்வைக் காணலாம். 'அதிகாரத்திற்கு வந்தால் எமது நாட்டு வளங்களை அந்நிய நாடுகளுக்கு விற்று பணக்காரனாகலாம்.' என்ற எளிய தத்துவமே பல ஆயுதக்குழுக்கள் உருவாகக் காரணமாக உள்ளது. போர்வீரனாக ஆயுதம் ஏந்த வருபவர்கள் கூட அதிக ஊதியம் எதிர்பார்ப்பதால்தான், யுத்தபிரபுக்கள் குழந்தைப் போராளிகளைச் சேர்க்கின்றனர்.

சூடானில் குழந்தைப் போராளிகளைச் சேர்த்து வைத்திருக்கும் குக௰அ இயக்கத்திற்கு அமெரிக்கா ஆயுதங்கள் வழங்குவதை, எனது நண்பர்களான முன்னாள் குக௰அ உறுப்பினர்கள் சிலர் ஒப்புக் கொண்டனர். அதே நேரம் அப்படி உதவி பெறுவதில் என்ன தவறு? என்றும் கேட்டனர். சில ஆண்டுகளுக்கு முன்னர் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்ட சாட் நாட்டைச் சேர்ந்த தற்போது புகலிடத்தில் வாழும் எனது நண்பரொருவர், அரசுக்கெதிரான ஆயுதக் கிளர்ச்சித் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகும் என்று கணக்குப் போட்டுக் கொண்டிருந்தார். அமெரிக்க பக்தரான அந்த நண்பர், எதிர்பார்த்த கிளர்ச்சி வெற்றி பெற்றிருந்தால் எண்ணெய் கிணறுகளை அமெரிக்க கம்பெனிகளுக்கு தாரை வார்த்திருப்பார் என்பதை நான் இங்கே குறிப்பிடத் தேவையில்லை.

மேற்குலகில் பிரச்சாரம் செய்யப்படுவதைப் போல ஆப்பிரிக்காவின் பிரச்சினைகளை அங்கே காளான்கள் போல முளைத்துள்ள அரசு சாரா தொண்டு நிறுவனங்கள் தீர்த்து விடப் போவதில்லை. அல்லது மத நம்பிக்கையாளர்கள் நினைப்பது போல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று ஆப்பிரிக்க நாடுகளில் வேகமாகப் பரவி வரும் கிறிஸ்தவ மதம் மக்களை வறுமையில் இருந்து விடுதலை செய்யப் போவதில்லை. உலகில் மகிழ்ச்சியான மக்கள் வாழும் நாடுகள் எவை என்று பட்டியலிட்ட போது, ஏழைகளாக இருந்தாலும் மத நம்பிக்கை என்ற மாயைக்குள் வாழும் கானா, நைஜீரிய மக்கள் அப்பட்டியலில் முன்னணியில் நின்றனர். ஆப்பிரிக்காவை வளப்படுத்த மக்களுக்கு தொழில்நுட்ப அறிவு தேவை. அதைக் கொடுக்க மேற்குலகம் மறுத்து வருகின்றது. இப்போதும் காலனிய காலத்தில் நடந்தது போல, மலிவு விலையில் மூலப்பொருட்களை வாங்கிக் கொண்டு, அதிக விலையில் தயாரிக்கப்பட்ட பொருட்களை விற்பனை செய்கின்றனர்.

'நமது நாடு இயற்கை வளம் நிறைந்தது. அது தான் எமது சாபக்கேடு.' என்று பல ஆப்பிரிக்கர்கள் குமுறுகின்றனர். வளங்களைச் சூறையாட அமெரிக்க, ஐரோப்பிய நாடுகள் போட்டியிடுகின்றன. ஆப்பிரிக்கத் தலைவர்கள் உள்ளூர் தரகு முதலாளிகளாக செயற்படுகின்றனர். ஆப்பிரிக்க கண்டத்தில் நடக்கும் இனவெறிப் போர்கள் (உ.ம்: ருவாண்டா), மதவெறிப் போர்கள் (உ.ம்: சூடான்), சித்தாந்தப் போர்கள் (உ.ம்: அங்கோலா); இவை எல்லாமே வளங்களை யார் கைப்பற்றுவது என்ற போட்டிக்கு மேல் போடப்பட்டிருக்கும் மாயத்திரைகள். இந்தப் போர்களினால் பாதிக்கப்படுவது, வழமை போல அப்பாவி மக்கள் தான். ஓரளவு வசதி உள்ளவர்கள், இன்னல்களில் இருந்து தப்புவதற்காக ஐரோப்பா செல்ல நினைத்தால், அங்கே ஐரோப்பிய ஒன்றியம் என்ற கடுமையாக பாதுகாக்கப்பட்ட கோட்டை மதில்கள் தடுக்கின்றன.

ஆப்பிரிக்காவின் பிரச்சினையை பிராந்திய ஒருமைப்பாட்டால் தீர்க்கலாம் அல்லது அந்த பாதையில் எடுத்து வைக்கப்படும் முதல் அடி அது என்று பல சமூக ஆர்வலர்கள் நம்புகின்றனர். பலர் ஐரோப்பிய ஒன்றியக் கட்டமைப்பை ஒத்த ஆப்பிரிக்க ஒன்றியத்தை தமது நீண்ட காலக் கனவாகக் காண்கின்றனர். இது குறித்த மாநாடுகள் நடைபெறும் போதெல்லாம், 'மேற்குலகில் கையேந்தும் பிச்சைக்கார நாடுகள் ஒன்று கூடி எதனைச் சாதிக்கப் போகிறார்கள்?' என்று சில மேலை நாட்டு ஊடகவியலாளர்கள் ஏளனமாகக் குறிப்பிடுகின்றனர். ஐக்கிய ஆப்பிரிக்கக் கூட்டமைப்பிற்கு பாடுபடும் கடாபி இது குறித்து கருத்து தெரிவிக்கும் போது: 'பல ஆப்பிரிக்க நாடுகளும், இனங்களும் பரம வைரிகளாக தமக்குள் மோதிக் கொள்கின்றனர் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை. நூறாண்டுகளுக்கு முன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பியக் கண்டமும் அதே நிலைமையில்தான் இருந்தது. ஆப்பிரிக்க நாடுகளுக்கிடையிலான வர்த்தகம் அதிகரிக்கும் போது, மேற்குலகில் கையேந்த வேண்டிய தேவை அவர்களுக்கு இருக்காது.'

ஆப்பிரிக்க ஒற்றுமை நடைமுறைச் சாத்தியமா? தனக்கு காலனிய மனோபாவம் இருப்பதாக பகிரங்கமாக ஒப்புக்கொள்ளும் பிரான்சு முதல் முன்பு பனிப்போர் இப்போது சுதந்திர வர்த்தகம் என்ற சாட்டுகளைக் கூறி தலையீடு செய்யும் அமெரிக்கா வரை, தொலை தூரத்தில் இருந்து கட்டுப்படுத்தும் அரசியலை இன்னும் கைவிடவில்லை. ஆப்பிரிக்க நாடுகளில் ஆட்சியில் இருக்கும் தலைவர்கள் ஏதோ ஒரு வல்லரசின் கைப்பொம்மையாக இருப்பதைப் பார்க்கலாம். உலகம் முழுவதும் ஜனநாயகத்தைப் போதிக்கும் மேற்குலகம், ஆப்பிரிக்க நாடுகளில் சர்வாதிகாரிகளை ஆதரித்து வருகின்றது. மக்கள் ஆதரவு பெற்ற தலைவர்கள் கூட பதவியில் இருந்து பலாத்காரமாக அகற்றப்பட்டனர். அந்த இடத்தில் கொடுங்கோல் சர்வாதிகாரிகளை நியமித்தனர்.

காலனியாதிக்கத்தில் இருந்து விடுதலை பெற்ற நாடுகளில் ஜனநாயகத்தைக் கொன்று சர்வாதிகாரத்தை அரியணை ஏற்றிய மேற்குலக சதிகள் இயற்கை வளம் நிறைந்த காங்கோவில் இருந்து ஆரம்பமாகியது. 1960-இல் பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற காங்கோவின் மக்களது மனங்கவர்ந்த தேசியவாதத் தலைவர் லுமும்பாவை நஞ்சு கொடுத்துக் கொலை செய்யுமாறு அமெரிக்காவில் இருந்து உத்திரவு வந்தது. அந்த கொலை பாதகச் செயலை செய்யச் சொன்னது யார்? அன்றைய அமெரிக்க ஜனாதிபதி ஐசன் ஹோவர்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 2. காங்கோவை விழுங்கிய பெல்ஜிய பூதம்

ஆப்பிரிக்க கண்டத்தின் வரைபடத்தை ஒருமுறை பார்த்தீர்களானால், தேச எல்லைகள் பென்சிலால் கோடு கீறியது போல இருக்கும். உண்மையில் அப்படித்தான் ஐரோப்பிய வல்லரசுகள் ஆப்பிரிக்காவைத் தமக்குள் பங்கு பிரித்துக் கொண்டனர்! 19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பா கண்டத்தில் தேசிய அரசுகள் உருவாக ஆரம்பித்திருந்தன. அப்போதெல்லாம் காலனிகள் வைத்துக் கொள்வது ஒரு கௌரவம். இங்கிலாந்து, பிரான்ஸ், போர்த்துக்கல், ஜெர்மனி, பெல்ஜியம் ஆகிய நாடுகள், ஆப்பிரிக்க வரைபடத்தை மேசை மீது வைத்து தமக்குத் தேவையான துண்டுகளை பென்சிலால் கீறிப் பெற்றுக் கொண்டார்கள். இந்த எல்லைக் கோடுகள் வகுக்கும் போது ஆப்பிரிக்க மக்களின் விருப்பம் புறக்கணிக்கப் பட்டது. அவர்களது தலைவிதியை வடக்கே இருந்த ஐரோப்பியக் கடவுளர்கள் தீர்மானித்தனர். ஒரே மொழி பேசும் இனங்கள், ஒரே குடும்பத்தைச் சேர்ந்த உறவினர்கள் பிரிக்கப்பட்டு வெவ்வேறு நாடுகளில் சிக்கிக் கொண்டார்கள்.

கண்டத்தின் மத்திய பகுதியில் இருந்த காங்கோ பிரதேசத்திற்கு பலர் போட்டியிட்டார்கள். இறுதியில் சிறிய துண்டான காங்கோ - பிராசவீல் பிரான்சிற்கும், பெரிய துண்டான காங்கோ-கின்ஷாசா பெல்ஜியத்திற்கும் கிடைத்தது. பெல்ஜிய மன்னன் லெயோபோல்ட், கிட்டத்தட்ட ஐரோப்பியக் கண்டத்திற்கு நிகரான காங்கோவைத் தனது தனிப்பட்ட சொத்தாக்கிக் கொண்டார். ஒரு சர்வதேச நிறுவனத்தைத் தொடங்கி நிர்வகித்து வந்தார். இருப்பினும் ஒப்பந்தத்தின் படி பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய நாட்டு நிறுவனங்களையும் காங்கோவில் முதலீடு செய்ய அனுமதிக்க வேண்டி இருந்தது.

பெல்ஜிய நாட்டிலிருந்து சென்ற பெருந்தோட்டப் பயிர் செய்கையாளர்கள், ரப்பர் தோட்டங்களை ஆரம்பித்து அதில் காங்கோ நாட்டு மக்களை அடிமை வேலை செய்யப் பணித்தனர். ஒவ்வொரு தொழிலாளியும் குறிப்பிட்ட அளவு ரப்பர் பால் எடுத்துக் கொடுக்க வேண்டும். அந்த அளவு குறைந்தால் சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது அவர்களது குடும்பத்தினர் பணயக் கைதிகளாக வைக்கப்பட்டனர் அல்லது கைகள் வெட்டப்பட்டன. பெருந்தோட்ட நிறுவனங்களின் இலாப வெறிக்காகப் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர். பெல்ஜிய மன்னனின் எண்பதாண்டு கால காலனிய ஆதிக்கக் காலத்தில் கொல்லப்பட்ட மக்களின் தொகை பத்து மில்லியன்! அதாவது பெல்ஜிய நாட்டின் இன்றைய மொத்த சனத்தொகை!! 'ஸ்டாலின், மாவோ இத்தனை கோடிப் பேரைக் கொலை செய்தார்கள். அதனால் அவர்கள் மனிதர்களல்ல, பூதகணங்கள்' என இன்று வரை ஓதிக் கொண்டிருப்பவர்கள், பெல்ஜிய பூதம் லெயோபோல்ட்டின் படுகொலைகளைப் பற்றி வாய் திறப்பதில்லை.

இன்றைக்கும் சில படித்தவர்கள் கூட நினைப்பது போல காங்கோ ஒரு பண்டைய வரலாற்றைக் கொண்டிராத தேசமல்ல. 15 -ஆம் நூற்றாண்டிலேயே இன்றைய அங்கோலாவின் பகுதிகளைச் சேர்த்துக் கொண்ட மாபெரும் காங்கோ இராசதானி இருந்தது. அந்நியப் படையெடுப்புகளில் இருந்து பாதுகாத்துக் கொள்ளுமளவுக்கு பலமிக்க இராச்சியமாக இருந்தது. மாகாணங்கள் பிரிக்கப்பட்டு ஆளுநர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். அங்கே ஒரு விவசாய சமூகம் இருந்தது. இரும்பு போன்ற சில கனிம, தாதுப் பொருட்களைப் பயன்படுத்தும் அறிவைப் பெற்றிருந்தனர். தான்சான்யா வழியாக அரேபியருடன் வர்த்தகத் தொடர்புகளைப் பேணி வந்தனர். 16-ஆம் நூற்றாண்டில் உலகைக் கண்டுபிடிக்கக் கிளம்பிய போர்த்துகீசிய கடலோடிகளால் தான் ஐரோப்பிய காலனிய கால கட்டம் ஆரம்பித்தது.

ஆரம்பத்தில் காங்கோ இராசதானிக்கு தரங்குறைந்த துப்பாக்கிகளையும், பல்வேறு மதுவகைகளையும் கொண்டு சென்று விற்று அடிமைகளை வாங்கிக் கொண்டு வந்தார்கள். இதற்கிடையே போர்த்துகீசியரின் வற்புறுத்தலுக்கு இணங்கி காங்கோ மன்னன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறிஸ்தவ மதத்திற்கு மாறி, 'ஜோவோ' (ஆங்கிலத்தில்: ஜோன்) என்ற நாமத்தைச் சூட்டிக் கொண்டான். தனது குடிமக்களையும் கிறிஸ்தவர்களாக மாற்றினான். முதல் முறையாக ஒரு கருப்பின பிஷப் வத்திக்கானிற்கு அனுப்பி வைக்கப்பட்டார். நான் முன்பு கூறியது போல ஆப்பிரிக்காவில் அடிமைகளைப் பிடித்து விற்பது சாதாரண விடயமாக இருந்த போதும், காலனியாதிக்கவாதிகளுக்கு இலட்சக் கணக்கில் தேவைப்பட்டதும், அதற்காக நடந்த மனிதத்தன்மையற்ற வேட்டையும் ஆப்பிரிக்கா அதற்கு முன்னர் அறியாத ஒன்று. ஐரோப்பிய முதலாளிகளின் அமெரிக்கப் பெருந்தோட்டத்தில் வேலை செய்ய பல்லாயிரக்கணக்கான அடிமைகள் தேவைப்பட்டனர். சந்தையில் அந்த சரக்கிற்கு கிராக்கி அதிகமாகியதும் போர்த்துக்கேயர்கள் காங்கோவில் அடிமை வேட்டையை அதிகரித்தமை காங்கோ மன்னன் மனதில் சந்தேகத்தைக் கிளப்பியது. 'ஒரு கிறிஸ்தவன் தனது சகோதர கிறிஸ்தவர்களை எப்படி அடிமையாக வைத்திருக்கலாம்?' என்று மன்னன் வெகுளித்தனமாகக் கேள்வி எழுப்பவும், இது தான் தருணம் என்று போர்த்துக்கேயர்கள் காங்கோவில் பலாத்காரமாக மன்னர் ஆட்சியை அகற்றி தமது காலனி ஆட்சியை நிறுவினார்கள்.

ஒரு காலத்தில் பிராந்தியப் பேரரசாக சிறப்புடன் இருந்த காங்கோ இராசதானி, பிற்காலத்தில் 'போர்த்துகீசிய அங்கோலா', 'பெல்ஜிய காங்கோ', 'பிரெஞ்சு காங்கோ' என்று பிரிக்கப்பட்டது. இந்த வரலாற்றை மறைத்து, 'இருண்ட கண்டத்தை நாகரீகப்படுத்த ஐரோப்பிய வெள்ளையர்கள் வந்ததாக' இன்றைக்கும் பலர் சொல்லிக் கொண்டிருக்கின்றனர். உண்மையில் காங்கோவை அபிவிருத்தி செய்யும் முயற்சியில் பெல்ஜியம் ஒரு போதும் இறங்கியதில்லை. பெரும்பாலான பெல்ஜிய காலனிய அதிகாரிகள் டச்சு மொழி (பெல்ஜியத்தில் பிளாம்ஸ் என்றழைப்பர்) பேசுபவர்களாக இருந்த போதிலும், காங்கோ மக்களுடன் பிரெஞ்சு மொழியில் (பெல்ஜியத்தின் இரண்டாவது மொழி) பேசினர். டச்சு மொழியைத் தமது சமூகத்திற்குள் மட்டுமே பயன்படுத்தும் இரகசிய மொழியாக வைத்துக் கொண்டனர்.

பெல்ஜிய மற்றும் பிற ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்கள் யாவும், கனிம வளங்களை அகழும் சுரங்கங்கள் தோண்டியது மட்டுமே ஒரேயொரு 'அபிவிருத்தி'. தங்கம், வெள்ளி, வைரம், நிக்கல், குரோமியம் என்று நிலத்தில் இருந்து தோண்டியெடுத்த விலைமதிப்பற்ற பொருட்களை கொள்ளையடித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து கொண்டிருந்தன. காங்கோ அனைத்து வளங்களையும் தன்னகத்தே கொண்ட செல்வந்த நாடு. உலகில் உள்ள வெப்ப/குளிர் காலநிலைக்கேற்ற அத்தனை பயிர்களும் வளரக்கூடிய தரைகளைக் கொண்ட காங்கோ, விவசாயத்தில் தன்னிறைவு கண்டால் 50 மில்லியன் சனத்தொகைக்கு உணவு கொடுப்பது பெரிய விடயமல்ல. அங்கே பெட்ரோல், எரிவாயு போன்ற எரிபொருட்கள் கூட கிடைக்கின்றன. காலனிய காலத்தில் பன்னாட்டு நிறுவனங்கள் நடத்திய கொள்ளை, அனைத்து வளங்களையும் கொண்ட காங்கோ இன்று வறுமையான நாடுகளில் ஒன்றாக இருப்பதற்கு காரணம். காங்கோவின் பொருளாதாரம் முழுவதும் ஏற்றுமதி செய்வதற்காகவே காலனிய எஜமானர்களால் ஏற்படுத்தப்பட்டது. இதைவிட இன்றைய காலகட்டத்தில் ஆண்டுக்கணக்காக நிலவும் அராஜக சூழ்நிலையும், ஆட்சியாளர்களின் தவறானான நிர்வாகமும் பிற காரணங்கள்.

30 ஜூன் 1960-ஆம் ஆண்டு காங்கோவின் சுதந்திர தின விழாவிற்கு சமூகமளித்திருந்த பெல்ஜிய அரசர் லெயோபோல்ட்டின் மகன் போதுவ, தனது 'புத்திக்கூர்மையான தந்தை காங்கோ மக்களை நாகரீகப் படுத்தும் சீரிய பணிக்காக பெல்ஜியத்தின் சிறந்த பிரஜைகளை அனுப்பி வைத்ததாக' மேடையில் புளுகிக் கொண்டிருந்தார். மேடையில் வீற்றிருந்த வருங்காலப் பிரதமர் லுமும்பாவிற்கு அந்தப் பொய்களைக் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை. அரசரிடமிருந்த 'மைக்'கை பிடுங்கி, பெல்ஜியம் செய்த அயோக்கியத்தனங்களை நார் நாராகக் கிழித்தார். 'மாட்சிமை தங்கிய மன்னர் பெருந்தகைக்கு' என மரியாதை எதுவும் கொடுக்கவில்லை. 'சகோதர சகோதரிகளே' என்று விளித்து தனது உரையை ஆரம்பித்து, 'எம்மை கருப்பர்கள் என்பதால் சக மனிதர்களாக மதிக்காத, அடிமைகளாக வேலை வாங்கிய பெல்ஜிய காலனியாதிக்க வாதிகளிடமிருந்து நாம் இரத்தம் சிந்திப் போராடி சுதந்திரம் பெற்றோம்.' என்று பலத்த கரகோஷத்திற்கிடையில் ஆற்றிய உரை பெல்ஜிய மன்னரை சினக்க வைத்தது. லுமும்பாவைப் பழிவாங்க வேண்டுமென்று மனதிற்குள் கருவிக் கொண்டார்.

சுதந்திரமடைந்த பின்னரும் காங்கோ இராணுவத்தின் இடைத்தர, மேல்நிலை அதிகாரிகள் யாவரும் பெல்ஜிய வெள்ளையர்களாக இருந்தனர். அவர்கள் புதிய அரசிற்கெதிராக கலகம் செய்தனர். இதற்கிடையே இயற்கை வளம் நிறைந்த கதங்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாகாணம், பெல்ஜிய தூண்டுதலால் தனிநாடாகப் பிரிவதாக அறிவித்தது. வெள்ளையின பெல்ஜிய படைகள் அதற்கு பாதுகாப்பு கொடுத்தனர். சுதந்திரமடைந்து ஐந்து நாட்களில் இந்த கலகம் ஆரம்பித்து விட்டது குறிப்பிடத்தக்கது. லுமும்பா அமெரிக்க தூதுவரை சந்தித்து அமெரிக்க படைகளை அனுப்பி உதவுமாறு கோரினார். தூதுவர் மறுக்கவே லுமும்பா ரஷ்யர்களிடம் உதவி கேட்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உடனே இது தான் சாக்கென்று, 'லுமும்பா ஒரு கம்யூனிஸ்ட்' என்று அமெரிக்கா முத்திரை குத்தி விட்டது.

இறுதியில் ஐ.நா. மன்றத்தில் கேட்டுக்கொண்டதற்கிணங்க, ஐ.நா. சமாதானப்படை வருவதற்கு ஒத்துக் கொண்டது. ஆனால் அதுவே லுமும்பாவின் மரணத்திற்கு இட்டுச் சென்ற தவறான முடிவாக இருந்தது. ஐ.நா. சமாதானப்படை இன்று மட்டுமல்ல, அன்றும் ஏகாதிபத்திய நலன்களுக்காகத்தான் செயல்பட்டது. சி.ஐ.ஏ. தூண்டுதலின் பேரில் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய இராணுவத் தளபதி மொபுட்டுவின் படையினர் ஸ்டான்லிவீல் (கிசன்கானி) என்ற நகரத்திற்கு போகும் வழியில் லுமும்பாவை கைது செய்தனர். நடந்த சம்பவத்தை கானவை சேர்ந்த ஐ.நா. சமாதானப்படையினர் கண்ட போதும், அவர்களைத் தலையிட வேண்டாம் என்று மேலிடத்து உத்தரவு வந்தது. மொபுட்டு லுமும்பாவை கைது செய்து கதங்கா பிரிவினைவாதிகளின் கைகளில் ஒப்படைத்தார். அங்கே வைத்து பெல்ஜிய அதிகாரிகளின் முன்னால் சித்திரவதை செய்யப்பட்டு, இறுதியில் நஞ்சு கொடுத்து கொலை செய்யப்பட்ட லுமும்பாவின் உடல் துண்டு துண்டாக வெட்டப்பட்டு திராவகத்திற்குள் கரைக்கப்பட்டது. அமெரிக்காவும், பெல்ஜியமும் சேர்ந்து தமது எதிரியை இப்படித்தான் தீர்த்துக் கட்டினார்கள். ஏகாதிபத்தியத்தின் கொடூர முகத்தை அம்பலப்படுத்திய லுமும்பாவின் மரணம் உலகெங்கும் அமெரிக்க எதிர்ப்பு அலையைத் தோற்றுவித்தது. ஆசிய-ஆப்பிரிக்க நாடுகள் ஐ.நா.மன்றத்தில் தமது கண்டனங்களைக் கொட்டினர். சோவியத் யூனியன் மொஸ்கோவில் பல்கலைக்கழகம் ஒன்றிற்கு லுமும்பாவின் பெயரிட்டது.

அமெரிக்க ஜனாதிபதி ஐசன்ஹோவரால், பெல்ஜிய மன்னன் போதுவாவினால் வெறுக்கப்பட்ட லுமும்பாவை கொலை செய்வதற்கான காரணம் என்ன? காங்கோவில் கொலைக்கான சதித்திட்டங்களை நிறைவேற்றிய சி.ஐ.ஏ. அதிகாரி டெவ்லின் "Congo & Fighting the Cold War in a Hot Zone" என்ற நூலில் வாக்குமூலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுக்கிறார். அதில் அவர், லுமும்பா கம்யூனிஸ்ட் இல்லை என்பது ஏற்கனவே தெரியும் என்றும், கம்யூனிசத்தை எதிர்த்து போரிடுவது என்பது ஒரு சாட்டு என ஒப்புக் கொள்கிறார். அப்படியானால்? 'அன்றைக்கு சோவியத் யூனியனின் கட்டுப்பாட்டிற்குள் காங்கோ வந்திருக்குமேயானால், 'கோபால்ட்' சுரங்கங்களும் அவர்களது கைகளுக்கு போயிருக்கும். ஏவுகணை, பிற ஆயுதங்கள் தயாரிப்பதற்கு கோபால்ட் அத்தியாவசியமான பொருள். அது உலகில் சோவியத் யூனியனிலும், காங்கோவிலும் மட்டுமே இருந்தது. ஆகவே அமெரிக்கா காங்கோவை கைப்பற்றியிராவிட்டால், சர்வதேச ஆயுதப்போட்டியில் பின்தள்ளப்பட்டிருக்கும்.'

உண்மைதான். ஆனால், ஆப்பிரிக்காவின் வளாங்களை அதற்கு முன்னரே உலக மேலாதிக்க நோக்கத்திற்காக ஏகாதிபத்தியம் பயன்படுத்த தொடங்கி விட்டது. காங்கோவில் இருந்து எடுக்கப்பட்ட யுரேனியத்தைக் கொண்டு செய்த அணுகுண்டுதான் ஹிரோஷிமா, நாகசாகி மீது போடப்பட்டது. காங்கோவின் வைரங்களை வைத்துதான் ஆங்கிலேய-அமெரிக்க கூட்டணி இரண்டாம் உலகப்போரில் வெற்றியீட்டின. இன்றும் கூட, கணினி, மொபைல் தொலைபேசி 'சிப்' பிற்கு பயன்படும் மூலப்பொருளான கொல்த்தான் காங்கோவில் மட்டுமே அதிகமாகக் காணப்படுகின்றது.

இன்றைய ஆப்பிரிக்காவில் வளங்களை பன்னாட்டு நிறுவனங்கள் கேள்வி கேட்க யாருமின்றி கொள்ளையடிக்கின்றன. ஆயுதமேந்தி இருப்பது அரசபடையாக இருந்தாலும், ஆயுதக் குழுவாக இருந்தாலும் இந்த வளங்களை யார் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது என்பதற்காகத்தான் போட்டியிடுகின்றன. 'ஆப்பிரிக்கா இப்படியே இருந்தால் அங்கே புரட்சி ஏற்பட இன்னும் நூறு ஆண்டுகளாகும்.' என்று தனது டைரிக் குறிப்பில் எழுதி வைத்தார் சே குவேரா. அவர் காங்கோவில் தங்கியிருந்து புரட்சியை ஏற்படுத்த முயன்று தோற்றுப்போய் திரும்பியவர். இப்போது ஒரு புதிய திருப்பம். இஸ்லாமிய மீட்பிற்காக போராடுவதாக சொல்லும் குழுக்கள் வளர்ந்து வருகின்றன. அதைக் காட்டி பயங்கரவாதத்திற்கு எதிராக போரிடுவதாகச் சொல்கிறது அமெரிக்கா. உண்மையில் கிறிஸ்தவ ஐரோப்பியர்கள் 'இருண்ட கண்டத்தை' கண்டுபிடிப்பதற்கு பல நூறாண்டுகளுக்கு முன்னரே இஸ்லாமிய அரேபியா அதனைக் கண்டுபிடித்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆப்பிரிக்க கண்டத்தில் கிறிஸ்தவ மதம் நுழையும் வரை காட்டுமிராண்டி கால இயற்கை வழிபாடு மட்டுமே அங்கே பரவலாக இருந்ததாக,' வெள்ளையர்கள் இன்னொரு கட்டுக்கதையைப் பரப்பி வந்திருக்கிறார்கள். ஐரோப்பாவில் இருந்து கத்தோலிக்க/ புரட்டஸ்தாந்து கிறிஸ்தவ மதம் இறக்குமதி செய்யப்படுவதற்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே, எத்தியோப்பியர்கள் ஆதிகால கிறிஸ்தவத்தை பின்பற்றி வந்தனர். இஸ்லாம் செனகல் முதல் தான்சானியா வரை பரவி இருந்தது. வளர்ச்சியடைந்த ஆப்பிரிக்க-இஸ்லாமிய அரசுகள் தோன்றியிருந்தன. ஒரு காலத்தில் மாலி நாட்டில் இருந்த திம்புக்டு என்ற இஸ்லாமிய இராச்சியத்தின் மன்னன் மெக்கா நோக்கி புனிதப்பயணம் சென்ற போது, எகிப்திய சந்தையில் தங்கத்தின் விலை வேகமாக சரியும் அளவிற்கு செல்வம் படைத்திருந்ததாக வரலாற்றுக் கதை ஒன்றுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 3. ஐரோப்பிய காட்டுமிராண்டிகள் திருடிய ஆப்பிரிக்க அறிவுடைமை

ஐரோப்பியர்களின் நாகரீகம் எங்கே தோன்றியது என்று கேட்டால் கிரேக்கத்தைக் காட்டுவார்கள். கிறிஸ்துவுக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, முழு ஐரோப்பியக் கண்டத்திலும் கிரேக்கர்கள் மட்டுமே வளர்ச்சியடைந்த நாகரீக சமுதாயத்தைப் பெற்றிருந்தனர். இருப்பினும் அன்றைய கிரேக்கர்கள், பிற ஐரோப்பியருடன் எந்தத் தொடர்பையும் வைத்திருக்க விரும்பவில்லை. ஆமாம், அப்போதும் நாகரீகமடையாத காட்டுமிராண்டி சமூகமாக, குகைகளுக்குள் குடியிருந்து, காட்டுப்பன்றிகளை வேட்டையாடிக் கொண்டிருந்த ஐரோப்பிய இனக்குழுக்களுடன் இராஜதந்திர உறவு வைத்துக்கொள்ள முடியுமா? அதே நேரம் கிரேக்கர்கள் தமது அயலில் இருந்த பிற நாகரீகமடைந்த சமூகங்களோடு நெருக்கமான உறவை கொண்டிருந்தனர். பண்டைய கிரேக்கர்கள் மதிப்புக் கொடுத்த நாகரீகமடைந்த சமூகங்களில் சில ஆப்பிரிக்காவில் இருந்தன!

நான் கிரீஸ் நாட்டில் சுற்றுப்பயணம் செய்த போது, ஏதென்ஸ் நகர அருங்காட்சியகத்தில் ஆப்பிரிக்க கருப்பினப் பெண்களைப் போல உருவத் தோற்றமுடைய சிற்பங்கள் சில இருந்ததைக் கண்டேன். எனக்கு அதை விட ஆச்சரியமளித்த விடயம், ஐரோப்பிய சரித்திர பாடநூல்கள் எதுவும் கிரேக்கம் ஆப்பிரிக்காவுடன் கொண்டிருந்த தொடர்பைப் பற்றி குறிப்பிட்டிருக்காதது. அது சரி, அனைத்து ஐரோப்பியர்களும் தமது 'நாகரீகத்தின் தொட்டில்' என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைப்படும் கிரேக்கத்தில் ஆப்பிரிக்க நாகரீகத்தின் செல்வாக்கு இருந்தது என்ற உண்மை, இலகுவில் ஜீரணிக்கக் கூடியதா?

அன்றைய உலகம் வேறுவிதமாக இருந்தது. பண்டைய நாகரிக கால மக்களுக்கு கருப்பு/வெள்ளை நிற வேறுபாடு கண்ணுக்கு புலப்படவில்லை. யாருமே தோல் நிறத்தை ஒரு விடயமாகக் கருதவில்லை. இதனால் அன்றைக்கு இருந்தது 'வெள்ளையின நாகரீகமா' அல்லது 'கருப்பின நாகரீகமா' என்று வேறுபடுத்திப் பார்ப்பது அவ்வளவு இலகுவானதல்ல. எகிப்தில் இருந்த பரோவா மன்னர்கள் இராச்சியம், செந்நிற மேனியரைக் கொண்டிருந்தது என இன்றைக்கும் சில சரித்திர/அகழ்வாராய்ச்சியாளர்கள் நம்பிக் கொண்டிருக்கின்றனர். ஆனால் அதே காலட்டத்தில் தெற்கே குஷ் இராசதானியை (இன்று சூடான்) சேர்ந்த கருநிற மேனியரான நுபியர்கள், அவ்வப்போது எகிப்திய ஆட்சிப்பொறுப்பை ஏற்றிருந்த உண்மைகள் தற்போது வெளிவருகின்றன. அன்றைக்கிருந்த எகிப்தை இந்தியாவிற்கு ஒப்பிடலாம். ஒரே குடும்பம், பல நிற மேனியரைக் கொண்ட உறுப்பினரைக் கொண்டிருப்பது சகஜமானது. இன்றும் கூட பண்டைய எகித்திய ஓவியங்களில் கருநிற மேனியரின் உருவங்கள் வரையப்பட்டிருப்பதைக் காணலாம்.

நுபியர்களின் குஷ் இராச்சியம் எகிப்தின் தங்கச் சுரங்கம் எனக் கூறினால் மிகையாகாது. நுபிய சுரங்கங்கள் ஆண்டொன்றிற்கு நாற்பதாயிரம் கிலோகிராம் (இன்றைய மதிப்பில்) தங்கத்தை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்து கொண்டிருந்தன. கருப்பின நுபியர்கள் எகிப்திய மத, மொழி, கலாச்சார அடையாளங்களைப் பின்பற்றினர். சூடான் முதல் சிரிய எல்லை வரை நுபியர்கள் ஆட்சி செய்த காலம் ஒன்றுண்டு. எகிப்தியர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட ஒரு கடவுள் கோட்பாடான அமோன் (கிறிஸ்தவர்கள் இதனை 'அமென்' என்று இன்றும் நினைவுகூர்கின்றனர்) என்ற சூரிய தேவன் வழிபாட்டையும் அறிந்து வைத்திருந்தனர். நான் எகிப்தில் லுக்ஸொர் நகரில் உள்ள கார்னாக் ஆலயத்திற்கு சென்றிருந்த போது, எகிப்தியரின் வழிபாட்டு முறை இந்துக் கோயில்களை ஓரளவு ஒத்திருந்ததைக் காணக்கூடியதாக இருந்தது. இந்துக் கோயில்களில் இருப்பதைப் போல மூலஸ்தானம், தூண்கள் மட்டுமல்ல, சாமி சிலைகளை குளிப்பாட்டும் தீர்த்தக்கேணி எல்லாம் அப்படியே இருந்தன. அந்தக் காலத்தில் மன்னர் அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் மட்டுமே கோயிலுக்குள் போக அனுமதி இருந்தது. உழைக்கும் மக்கள் கோயிலுக்கு வெளியே நின்றுதான் சாமி கும்பிட முடியும். உண்மையில் பண்டைய காலத்தில் நிலவிய வர்க்கப்பிரிவினை தான், பின்னர் இந்திய சமுதாயத்திலும் சாதிப்பிரிவினையாகத் தொடர்ந்திருக்க வேண்டும். இந்திய, ஆப்பிரிக்க சமூகங்களுக்கிடையிலான கலாச்சார ஒற்றுமை இதைப் போல நிறைய உள்ளன.

பிற்காலத்தில் அந்நியரின் படையெடுப்புகள் காரணமாக எகிப்திய, நுபிய நாகரீகங்கள் அழிந்து போனாலும், அதற்குப் பிறகு தோன்றிய 'சூடானிய நாகரீகம்' கிழக்கே செங்கடல் முதல் மேற்கே அட்லாண்டிக் சமுத்திரம் வரை பரவி இருந்தது. இந்த நாகரீகத்தின் சிறப்பம்சம் என்னவென்னில் அப்போது நிலப்பிரபுத்துவ முறை நிலவவில்லை. மாறாக இன்று எமக்கெல்லாம் பரிச்சயமான அரச கரும ஊழியர்களைக் கொண்ட அதிகார வர்க்கம் இருந்தது. கடவுளுக்கு அடுத்த சர்வ வல்லமை பெற்ற மன்னன் இந்த அரச ஊழியர்களை நியமிக்கவோ, பணிநீக்கம் செய்யவோ அல்லது பதவி உயர்வு கொடுக்கவோ முடியும். அதனால் குறிப்பிட்ட எந்த குடும்பமும் அதிகாரத்தை பரம்பரையாக பின்பற்ற முடியாது. நல்லது, மேற்குலகம் எதிர்பார்ப்பதைப் போல 'பல கட்சி ஜனநாயகம்' (இது ஐரோப்பாவிலேயே 19-ஆம் நூற்றாண்டில்தான் வந்தது) அப்போது ஆப்பிரிக்காவில் இருக்கவில்லைதான். ஆனால் ஒரு கிராமத்தின் தலைவனைக் கூட மக்கள் தெரிவு செய்யும் நேரடி ஜனநாயகம் நிலவியது. இதைத்தான் கடாபி அவ்வப்போது மேற்குலகிற்கு எடுத்துக் காட்டுவது வழக்கம். 'ஆப்பிரிக்கர்களான நாங்கள் ஜனநாயகப் பாரம்பரியத்தில் வந்தவர்கள். எமக்கு புதிதாக பாடம் நடத்த தேவையில்லை.'

கி.பி. ஏழாம் அல்லது பத்தாம் நூற்றாண்டளவில் எகிப்து வழியாக கிறிஸ்தவ மதம் எத்தியோப்பியா வரை பரவி இருந்தது. எத்தியோப்பியாவில் 'அக்சும்' என்ற கிறிஸ்தவ சாம்ராஜ்யம் தோன்றியிருந்தது. செங்கடலைத் தாண்டி யேமனை ஆக்கிரமிக்குமளவு இராணுவ பலம் பெற்று விளங்கியது. (யேமன் நாட்டில் கூட ஆப்பிரிக்க செல்வாக்கு இருந்துள்ளது. பைபிளில் வரும் புத்திசாதுர்யம் மிக்க யேமன் அரசி ஷீபா, யேமனை சேர்ந்த கருப்பின அழகி.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்சும் நாட்டில் சாப்பாட்டுத்தட்டுகள் கூட தங்கத்தில் அல்லது வெள்ளியில் செய்யப்பட்டிருந்தமை அதன் செல்வச் செழிப்பிற்கு சாட்சி. எத்தியோப்பியாவில் யூத மதமும் பரவி இருந்தது. அதனால் சடங்குகள் சில கிறிஸ்தவர்களுக்கும், யூதர்களுக்கும் பொதுவாக இருக்கின்றன. உதாரணமாக யூதர்கள் மட்டுமல்ல கிறிஸ்தவர்களும் சுன்னத்து செய்துகொள்ளும் வழக்கம், அந் நாட்டில் இப்போதும் நடைமுறையில் உண்டு. கி.பி. பத்தாம் நூற்றாண்டளவில் அரேபிய-முஸ்லீம் படையெடுப்புகளால், ஆப்பிரிக்காவின் வட பகுதி முழுவதும் இஸ்லாம் பரவிய காலத்தில் மட்டுமல்ல, பிற்காலத்தில் ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகளையும் எத்தியோப்பியா வெற்றிகரமாக எதிர்த்து நின்று, தனது இறையாண்மையை காப்பாற்றிக் கொண்டது. ஆமாம், பீரங்கிகளோடு படையெடுத்த ஐரோப்பியர்களை புராதன கால ஆயுதங்களோடு எதிர்த்து போரிட்டு, ஆப்பிரிக்காவில் காலனிப் படுத்தப்படாத ஒரேயொரு நாடு என்ற பெருமையைப் பெற்றது எத்தியோப்பியா.

ஐரோப்பியர்கள் தமது நாகரீகத்தின் தொட்டில் கிரேக்கம் என்று கூறுவது போல, ஆப்பிரிக்கர்களுக்கு அவர்களது நாகரீகத்தின் தொட்டில் எத்தியோப்பியா. அதனால் தான் எத்தியோப்பியாவின் பண்டைய மூவர்ணக்கொடியானது 'அகில ஆப்பிரிக்க ஒன்றியக்' கொடியாக பல நாடுகளால் சுவீகரிக்கப்பட்டது. கிறிஸ்துவுக்கு பின் ஐரோப்பியக் கண்டத்தில் தனது ஆரம்பக்காலத்தில் இத்தாலியிலும், கிரேக்கத்திலும் கூட பரவுவதற்கு கிறிஸ்தவம் பெரும் சிரமம் எடுத்துக்கொண்டிருந்த காலங்களில், எத்தியோப்பியா கிறிஸ்தவ நாடாக ஏற்கனவே மாறிவிட்டிருந்தது. அது மட்டுமல்ல, பிற ஐரோப்பிய பகுதிகளில் கிறிஸ்தவ மதத்தை பரப்புவதற்காக நடைபெற்ற போர்களில் எத்தியோப்பியாவைச் சேர்ந்த கருப்பு வீரர்கள் பங்குபற்றியுள்ளனர்.

அதே காலகட்டத்தில்தான் வட ஆப்பிரிக்காவில் இஸ்லாமிய மதம் தன்னை நிலை நிறுத்திக் கொண்டது. மொரோக்கொவை சேர்ந்த இஸ்லாமிய சக்கரவர்த்தி ஸ்பெயின், பிரான்ஸ் மீது படையெடுத்த போது, அந்தப் படையிலும் கருப்பின வீரர்கள் கணிசமான அளவில் இருந்தனர். அந்தக் காலத்தில் உலகம் கிறிஸ்தவம், இஸ்லாம் என்ற இரு வேறு மதங்களைச் சேர்ந்த முகாம்களாகப் பிரிந்து நின்றது. ஒருவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த மதத்தை சேர்ந்தவர் என்பதுதான் முக்கியமாக பார்க்கப்பட்டதே தவிர, தோலின் நிறம் கருப்பா சிவப்பா என்று யாரும் அக்கறைப்படவில்லை. அன்று 'ஐரோப்பாவில் நிலவிய அடிமைமுறை சமுதாயம் ஒழிந்து, நிலப்பிரபுத்துவ சமுதாயம் உருவான வரலாற்றில் முற்போக்கான பாத்திரத்தை கிறிஸ்தவ மதம் ஏற்றிருந்ததை' கார்ல் மார்க்ஸ் குறிப்பிடுள்ளார். அந்த இடத்தில் இஸ்லாமையும் குறிப்பிடலாம். அன்று தனித்தனி இனக்குழுக்களாக (ரோமர்/கிரேக்கர் பார்வையில் காட்டுமிராண்டி சமூகமாக) இருந்த ஐரோப்பியரை (ஒரு உலக மதத்தின் கீழ்) நாகரீகப்படுத்தும் முக்கியமான வரலாற்றுப் பணியை ஆப்பிரிக்கர்கள் ஏற்றிருந்தனர்! அதாவது வரலாற்றாசிரியர்கள் கூறுவதற்கு மாறாக, ஆப்பிரிக்கர்கள்தான் இருண்ட ஐரோப்பாவைக் கண்டுபிடித்தார்கள்!!

ஐரோப்பியரின் வருகைக்கு முன்னர், ஆப்பிரிக்கர்கள் இராச்சியங்கள் இல்லாத இனக்குழுச் சமுதாயமாக வாழ்ந்து வந்ததாக மாபெரும் வரலாற்றுப் புரட்டு பாடசாலைகளில் போதிக்கப்படுகின்றது. உலகின் எந்தவொரு பகுதியும் ஒரே காலத்தில் வளர்ச்சியடைவதில்லை. ஏற்றத்தாழ்வான வளர்ச்சி எங்கேயும் இருந்து வரும். ஐரோப்பியர்கள் காலனிப்படுத்த தொடங்கிய மேற்கு ஆப்பிரிக்காவின் கினிய கரைப் பிரதேசங்களில் வாழ்ந்த மக்கள், புராதன இனக்குழுச் சமுதாயமாக வாழ்ந்து வந்த உண்மையை மறுக்க முடியாது. ஆனால் அதேநேரம் தெற்கே இருந்த கொங்கோ சாம்ராஜ்யம் பற்றி 16-ஆம் நூற்றாண்டில் ஒரு போர்த்துக்கேய மாலுமி குறிப்பெழுதி வைத்துள்ளார். 'மக்கள் பட்டாலான ஆடைகளை உடுத்தியிருந்ததாகவும், இருபாலாரும் ஆபரணங்களை அணிந்திருந்ததாகவும்' அந்தக் குறிப்புகளில் காணக் கிடைக்கின்றது. வடக்கே இருந்த கானா சாம்ராஜ்யம் மிகப் பலத்தோடும், செல்வத்தோடும் இருந்ததாக அரேபிய சரித்திர ஆசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர். அந்தக் காலத்திலேயே கானா தங்கம் விளையும் நாடாக, அரேபியரால் அறியப்பட்டது. கானா சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சியில், மாலியில் புதியதொரு சாம்ராஜ்யம் தோன்றியது. அதன் தலைநகரமான திம்புக்டு பிரதான வர்த்தக மையமாக புகழ் பெற்று விளங்கியது. 1324-ஆம் ஆண்டளவில் மாலி நாட்டு அரசன் மெக்காவிற்கு புனிதப்பயணம் மேற்கொண்டு எகிப்து வந்து சேர்ந்திருந்தபோது, மூன்று ஆண்டுகளுக்கு தங்கத்தின் விலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்திருந்ததாக எகிப்திய சரித்திர ஆசிரியர் இபுன் கல்டூன் எழுதி வைத்துள்ளார். மாலி அரசனுடன் கூட வந்த 300 அடிமைகள் ஆளுக்கு ஒரு கிலோ அளவிலேனும் தங்கம் கொண்டு வந்ததைப் பார்த்து, அந்நாடு எவ்வளவு செல்வச் செழிப்பானது என்று அரேபியர்கள் வியந்துள்ளனர்.

பண்டைய ஆப்பிரிக்கா செல்வத்தில் மட்டுமல்ல, கல்வியிலும் சிறந்து விளங்கியதற்கான ஆதாரங்கள் உள்ளன. மாலி நாட்டில் திம்புக்டு நகரில் இப்போதும் நிலைத்து நிற்கும், சுமார் 500 ஆண்டுகளுக்கு முன்னர் கட்டப்பட்ட பல்கலைக்கழகமும், நூலகமும் அதற்கு சாட்சி. பிற்காலத்தில் மொரோக்கோவில் இருந்து படை எடுத்து வந்து ஆக்கிரமித்த மூர்கள், நூலகத்தை எரியூட்டி அங்கேயிருந்த நூல்களைக் கொள்ளையடித்துச் சென்றனர். இப்போதும் அங்கே கொள்ளையடிக்கப்பட்ட நூல்கள் சில மொரோக்கோவில் உள்ளன. ஆப்பிரிக்கர்களின் கல்விச்செல்வங்கள், எகிப்தில் அலெக்சாண்டிரியா நகர நூலகத்திலும் வைக்கப்பட்டிருந்தன. கிறிஸ்துவுக்கு முன் உலகில் இருந்த மாபெரும் நூலகம் அது. அங்கிருந்த நூல்கள் பாபிரூஸ் (இதிலிருந்து 'பேப்பர்' வந்தது) தாவரத்தில் இருந்து தயாரித்த தாள்களில் எழுதப்பட்டிருந்தன. கிரேக்கத்திலிருந்து சாக்ரடீஸ் போன்ற தத்துவ அறிஞர்கள் கூட அந்த நூலகத்தை பயன்படுத்தி இருக்க சாத்தியமுண்டு. அத்தகைய பிரசித்தி வாய்ந்த நூலகத்தை கிளியோபாட்ரா (பூர்வீகம்: கிரேக்கம்) காலத்தில் ஆட்சி செய்த ரோமர்கள் 'தற்செயலாக' எரித்து விட்டனர். அங்கிருந்த கிடைத்தற்கரிய நூல்கள் யாவும் எரிந்து சாம்பலாகின.

மனித குலத்தின் கண்டுபிடிப்புகளுக்கு குறிப்பிட்ட ஒரு இனம் உரிமை கோருவது அயோக்கியத்தனமானது. ஆப்பிரிக்காவில் எகிப்தில் இருந்து கிரேக்கர்கள் கற்றுக்கொண்ட கணித, விஞ்ஞான கோட்பாடுகள் பல அன்றைய ஐரோப்பாவில் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. நீண்டகாலத்திற்கு பிறகு அரேபியரால் மேம்படுத்தப்பட்ட அதே கோட்பாடுகளை, ஐரோப்பியர்கள் தாமதமாக அறிந்து கொண்டனர். இவற்றையெல்லாம் ஐரோப்பியர்கள் தாமே கண்டுபிடித்தது போல பாடசாலைகளில் கற்பிக்கின்றனர். அது உண்மையென்று நம்பும் ஆப்பிரிக்கர்களும் இருப்பது வேதனைக்குரியது. அங்கே மட்டுமல்ல, ஆசியாவிலும் இது தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்தது. உலகம் முழுவதும் திருடியதை தனது சொத்தென்று உரிமை பாராட்டுவது, அதையே விற்பனைச் சரக்காக்குவது, இவற்றில் எல்லாம் ஐரோப்பியர்கள் வல்லவர்கள். அதில் மட்டுமல்ல இனவாதம், நிறவாதம் என நாகரீக உலகம் வெறுக்கும் அரசியல் கொள்கைகளைக் கண்டுபிடித்து, அதை ஆப்பிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்து, ஒருவரோடு ஒருவர் மோத விட்டு வேடிக்கை பார்ப்பதிலும் அவர்கள் கெட்டிக்காரர்கள்தான். இரத்தம் சிந்தும் இன்றைய இன/மத பிரச்சினைகள் பல ஐரோப்பிய காலனிய காலத்தில் உருவானவை என்பதை யாராலும் மறுக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 4. நைஜீரியா: எண்ணெய் வளம் தொல்லை இந்த 'வல்லரசில்'

முதன்முதலாக ஐரோப்பிய வெள்ளையரைக் கண்ட ஆப்பிரிக்க கருப்பர்கள் என்ன நினைத்திருப்பார்கள்? 'நீலக் கண்களைக் கொண்ட, வெண்ணிற மேனியரைப் பார்த்த ஆப்பிரிக்கர்கள் கடவுள்கள் வந்து விட்டதாக நினைத்தார்கள்.' என்று ஐரோப்பிய மையவாத வரலாற்றாசிரியர்கள் எழுதி வைத்துள்ளனர். அதை அப்படியே நாமும் நம்பி வந்திருக்கிறோம். ஆனால் கடவுள் என்ற கற்பிதமே அந்தந்த பிரதேச மக்களின் பிம்பமாக இருப்பது யதார்த்தம். வெள்ளையரின் கடவுள் வெள்ளையாக இருந்தார். அதே போல கருப்பர்களின் கடவுளும் கருப்பாக இருந்ததை, இப்போதும் காணப்படும் ஆப்பிரிக்க மத சிற்பங்கள் நிரூபிக்கின்றன. ஆகவே 'கடவுளைக் கண்ட வரலாறு' ஒரு ஐரோப்பிய மையவாத கட்டுக்கதை.

முதன் முதலாக கருப்பின ஆப்பிரிக்க மக்களை கண்ட ஐரோப்பியர்கள் அவர்களை மனிதக் குரங்குகளாகக் கருதினார்கள். அதே நேரம் ஆப்பிரிக்கர்கள், வெள்ளையின ஐரோப்பியரை பன்றி வகையை சேர்ந்த விசித்திர மிருகமாகக் கருதினர். ஐரோப்பியர்கள், பன்றியின் தோல் நிறத்தை ஒத்த செந்நிற மேனியைக் கொண்டிருந்தது மட்டுமல்ல, அவர்களுடைய உடலில் இருந்து வந்த நாற்றமும் அப்படி நினைக்க வைத்தது. 'வெள்ளையர்கள் புதைகுழிகளில் இருந்து எழுந்து வந்த ஆவிகள்' என்ற அறியாமை, வெள்ளைக்காரரைக் கண்டவுடன் கருப்பின மக்களை பீதியடைந்து ஓட வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நைஜீரியாவில் கால் பதித்த ஐரோப்பியர்கள், வர்த்தக நிலையங்களை ஸ்தாபித்து அடிமைகளை வேட்டையாடத் தொடங்கிய காலம், இன்னொரு வதந்தி பரவியது. ஒரு பக்கம் அடிமைகளைப் பிடித்து ஏற்றுமதி செய்து கொண்டே, மறுபக்கம் துணி விற்று வியாபாரம் நடத்திக் கொண்டிருந்தனர். அவர்கள் விற்ற துணியின் நிறம் சிவப்பாக இருந்தது. வெள்ளையர்கள் அடிமைகளைக் கொன்று இரத்தம் எடுத்து துணிகளுக்கு சாயமிடுவதாக கருப்பர்கள் நம்பினார்கள். பெருந்தொகை அடிமைகள் அமெரிக்காவிற்கு அனுப்பப்பட்டுக் கொண்டிருந்த விடயம், அன்று அவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை. இந்த விபரங்களை 1857-இல் நைஜீரியாவிற்கு கிறிஸ்தவ மதம் பரப்பச் சென்ற ஜோன் டெயிலர் என்ற பாதிரியார் எழுதி வைத்துள்ளார்.

ஐரோப்பியக் காலனியாதிக்கவாதிகள் 19-ஆம் நூற்றாண்டில்தான் ஆப்பிரிக்க கண்டத்தை காலனிப்படுத்த தொடங்கியதை முன்னர் குறிப்பிட்டிருக்கிறேன். ஆனால் அதன் அர்த்தம், அது வரை ஐரோப்பியர்கள் எவரும் அந்தக் கண்டத்தில் கால் பதித்திருக்கவில்லை என்பதல்ல. ஐரோப்பிய வர்த்தகர்கள், மேற்கு ஆப்பிரிக்க கடற்கரையோரமாக சிறு நிலத்தை கையகப்படுத்தி, அங்கே கோட்டை கட்டி தமது தேசங்கடந்த வர்த்தகக் கழகத்தை நடத்தி வந்தனர். இதனால் இன்றும் பல ஆப்பிரிக்க நாடுகளின் தலைநகரங்கள் கடற்கரையோரமாக அமைந்துள்ளதைக் காணலாம். ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த வர்த்தகர்கள், உள்ளூர் கருப்பர்கள் சிலரைத் தமது முகவர்களாக அமர்த்திக் கொண்டனர். அவர்களது வேலை, நாட்டின் உட்பகுதிக் கிராமங்களை சுற்றிவளைத்து, திடகாத்திரமான உழைக்கும் வயதில் உள்ள (ஆகவே சிறுவர்களும், வயோதிபர்களும் தேவையில்லை) ஆண்களையும், பெண்களையும் அடிமைகளாக பிடித்து வந்து விற்பது. நைஜீரியாவிலிருந்து கோடிக்கணக்கான மக்கள் இவ்வாறு அடிமைகளாக அமெரிக்கா அனுப்பப்பட்டு விட்டதால், ஒரு காலத்தில் அந்நாட்டின் மத்திய பகுதியில் இளமையான உழைப்பாளிகளைக் காண்பது அரிதாக இருந்தது. ஆப்பிரிக்க நாடுகள் அபிவிருத்தியில் பின்தங்கியமைக்கு இதுவும் ஒரு காரணம்.

நைஜீரியாவில் ஐரோப்பியர்கள் மட்டும் வந்து அடிமைகளை வாங்கிச் செல்லவில்லை. அரேபியருக்கு தேவைப்பட்ட அடிமைகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று வடக்கு நைஜீரியாவில் இருந்த 'கானெம்' இராச்சியம் பிடித்துக் கொடுத்துக் கொண்டிருந்தது. (ஒரு முஸ்லீமை அடிமையாக வைத்திருக்க முடியாது என்ற விதிமுறை பின்பற்றப்பட்டது). துனிசியாவில் இருந்த சந்தையில் நைஜீரிய அடிமைகள் விற்கப்பட்டனர். அல்ஜீரியாவை பிரான்ஸ் கைப்பற்றிய பின்னர், கானெம் தேசத்திற்கு பெருமளவு வருமானம் ஈட்டித்தந்த அடிமை வர்த்தகம் நெருக்கடிக்கு உள்ளானது. அடிமை வியாபாரம் மட்டுமல்ல, சாயப்பட்டறை, தோல் பதனிடும் தொழிலகங்கள் போன்ற தொழிற்துறை வளர்ச்சியினால் அன்று வடக்கு நைஜீரியாவில் பல நகரங்கள் தோன்றி இருந்தன. இந்த நகரங்களை ஒரு (கருப்பின) சுல்தான் தலைமையிலான அதிகார மையம் நிர்வகித்து வந்தது. 'கானெம்' முழுக்க முழுக்க ஒரு கருப்பின அரசாட்சியாக இருந்தது. 13-ஆம் நூற்றாண்டில் இன்றைய லிபியாவின் பகுதிகளை உள்ளடக்கிய மாபெரும் சாம்ராஜ்யமாகத் திகழ்ந்தது. இஸ்லாமிய அரேபியருடன் ஏற்பட்ட வர்த்தக தொடர்புகளால் புலானி மற்றும் ஹவுசா இன மக்கள் இஸ்லாமிய மதத்தை தழுவிய பின்பு, அந்த இராச்சியத்தை உருவாக்கி இருந்தனர். அன்றும் இன்றும் அந்தப் பிராந்தியத்தில் ஹவுசா மொழியே பொது மொழியாக உள்ளது. ஆங்கிலேயர் ஆட்சியிலும் இஸ்லாமிய மதராசாக்கள் சுதந்திரமாக இயங்கி வந்தன. இதனால் பெரும்பாலான நைஜீரிய முஸ்லீம்கள் ஆங்கில மொழிப் புலமை பெற்றிருக்கவில்லை. இது பின்னர் கிறிஸ்தவ மிஷனரி பாடசாலைகளில், ஆங்கிலத்தில் கல்வி கற்ற தெற்கத்திய இனங்களுடன் முரண்பாடுகளைத் தோற்றுவித்தது.

ஐரோப்பியர் வருவதற்கு முன்னர், ஆப்பிரிக்கர்களிடம் ஒழுங்கமைக்கப்பட்ட இராணுவமோ அல்லது துப்பாக்கிகளோ இருக்கவில்லை என்று ஐரோப்பிய வரலாற்றாசிரியர்கள் இன்னொரு கட்டுக்கதையைப் பரப்பி வந்துள்ளனர். 1823-இல் டிக்சன் டென்ஹம் என்ற பிரயாணி, கானேம் இராச்சியத்திற்கு சென்று வந்த முதலாவது ஐரோப்பியராவார். தன்னை வரவேற்க வந்திருந்த ஆயிரக்கணக்கான ஆயுதந்தரித்த, சீருடையணிந்த குதிரை வீரர்களைக் கண்டு திகைப்படைந்ததாக குறிப்பெழுதி வைத்துள்ளார். ஐந்நூறு ஆண்டுகளுக்கு மேல் பழமை வாய்ந்த கானோ நகரத்திற்கு செல்பவர்கள் இப்போதும் குதிரைப்படையினரின் அணிவகுப்பை பார்வையிடலாம். கானெம் இராச்சிய இராணுவ வீரர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கியிருந்த துப்பாக்கிகள் அரேபியரின் தொடர்பால் கிடைக்கப்பெற்றவை. ஐரோப்பியர்கள் துப்பாக்கிகள், பீரங்கிகள் பற்றி அறிந்தே இருக்காத காலத்தில், அரேபியர்கள் அவற்றைப் போரில் திறமையாகப் பயன்படுத்தி உள்ளனர். 1500 ஆண்டுகளுக்கு முன்னர் ஐரோப்பியக் கண்டத்தில் இருந்த மிகப்பெரிய கிறிஸ்தவ நகரமான கொன்ஸ்டாண்டிநொபெல் (இஸ்தான்புல்) வீழ்ச்சிக்கு (அன்றைய) நவீன கண்டுபிடிப்பான சுடுகருவிகள் காரணமாக இருந்தன.

பிரிட்டிஷாரின் நைஜீரியாவிலும், சுதந்திரத்திற்குப் பின்னரும் இராணுவத்தில் முஸ்லீம் அதிகாரிகள் அதிகமாக காணப்பட்டமைக்கு கானெம் இராச்சிய பாரம்பரியமே காரணம். பிரிட்டிஷாரின் காலனிய ஆட்சிக்காலம் தொடங்கிய போது, வடக்கே இருந்த இஸ்லாமிய தேசத்தை தெற்கில் பல்வேறு இனங்களின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசங்களுடன் இணைத்து நைஜீரியா என்ற புதிய நாட்டை உருவாக்கினார்கள். பிரிட்டிஷ் நைஜீரியாவினுள் 250 மொழிகளைப் பேசும் இனங்கள் அடங்கின. இன்று மொத்த சனத்தொகையில் 50 வீதமாக உள்ள நைஜீரிய முஸ்லீம்கள் மத்தியிலும் இன இனவேறுபாடு இருந்த போதிலும் இஸ்லாம் என்ற மதம் அவர்களை ஒன்றிணைக்கும் சக்தியாக உள்ளது. அதற்கு மாறாக தெற்கில் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளால் அடிக்கடி வன்முறை வெடிக்கின்றது. ஒவ்வொரு இனமும் தனது இனத்தை சேர்ந்தவர்கள் மட்டுமே சிறந்தவர்கள் என்றும், மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்று கருதும் போக்கு உள்ளது. (மத முரண்பாடுகளைப் பற்றி பின்னர் பார்க்கலாம்) சுதந்திரத்திற்கு பின்னர் நைஜீரியாவின் அரசியல் அதிகாரம் இன/மத முரண்பாடுகளால் தீர்மானிக்கப்படுகின்றது.

ஜனநாயகத் தேர்தல்கள் நடைபெறும் காலங்களில் அரசியல் கட்சித் தலைவர்கள் தமது இன வாக்குகளைப் பெறுவதிலேயே அதிக அக்கறை காட்டுவார்கள். அதனால் அரசியல்வாதிகளின் நலன்களுக்காக இனங்களுக்கிடையில் வன்முறைகள் தூண்டிவிடப் படும். அந்த உணர்ச்சி அலையை வைத்து அவர்கள் வாக்குகளை அறுவடை செய்வர். பணத்தை வாரியிறைத்து வாக்காளருக்கு இலஞ்சம் கொடுத்து வாக்கு வேட்டையாடுவதும், எதிர்க்கட்சிக்கு ஆதரவானவர்களை அடியாட்படையை ஏவி மிரட்டுவதும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட அரசியல்வாதியின் தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தும். வாக்குச் சாவடியில் நின்று கொண்டு வாக்களிக்க வரும் மக்கள் எந்த வேட்பாளருக்கு போட வேண்டுமென்று அடாவடித்தனம் பண்ணுவது அங்கே சாதாரண நிகழ்வு. பணபலம், ஆட்பலம் இல்லாத வேட்பாளர் தேர்தலில் நிற்க முடியாது. பாராளுமன்றத்திற்கோ அல்லது மாநில சட்டசபைகளுக்கோ தெரிவாகும் இந்த வேட்பாளர்கள் பதவிக்கு வந்தால் செய்யும் ஒரேயொரு வேலை, பொது மக்கள் சொத்தை கொள்ளையடிப்பது மட்டுமே. இதனால் நாட்டில் ஊழலை ஒழிக்கப் போகிறேன் என்று அறிவித்து விட்டு அடிக்கடி இராணுவ அதிகாரிகள் சதிப்புரட்சி மூலம் அதிகாரத்தை பறிப்பார்கள். அப்போது கூட ஊழல் ஒழியாது என்பது மட்டுமல்ல, பகைமை கொண்ட இனத்தை சேர்ந்த வேறொரு அதிகாரி, அந்த இராணுவ சர்வாதிகாரியை ஒழித்து விட்டு ஆட்சியை கைப்பற்றுவார்.

தெற்கே யொருபா இனமும், இக்போ இனமும் பெரும்பான்மையாக உள்ளன. நைஜீரியா சுதந்திரம் பெற்று சில ஆண்டுகளில், இக்போ இனத்தின் ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்தில் எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவர்கள் தமது பகுதியை 'பயாபிரா' என்ற தனி நாடாக அறிவித்தனர். உடனடியாகவே நைஜீரிய இராணுவம் பயாபிரா சுதந்திர பிரகடனத்தை இரும்புக்கரம் கொண்டு அடக்கியது. பிரிட்டனும், சோவியத் யூனியனும் நைஜீரிய இராணுவத்திற்கு பக்கபலமாக நின்ற போதிலும், பயாபிரா போராளிகள் ஓரிரு ஆண்டுகள் தாக்குப் பிடித்தனர். முற்றுகைக்குள்ளான பயாபிரா மக்களைப் பணிய வைக்கும் நோக்கில் நைஜீரியா அரசு திடீரென தேசிய நாணயத்தின் நோட்டுகளை மாற்றியது. இதனால் ஏற்கெனவே பொருளாதாரத் தடை இருந்த காரணத்தால், மக்கள் உணவின்றி பட்டினி கிடந்தது சாகும் அவலம் நேர்ந்தது. சுமார் அரை மில்லியன் மக்களாவது பட்டினியால் செத்தனர். அப்போது தான் முதன்முதலாக அமெரிக்க விளம்பர நிறுவனமொன்று எலும்பும் தோலுமாக ஒட்டிய வயிறோடு இருக்கும் ஆப்பிரிக்க மக்களின் காட்சிகளைப் படம் பிடித்து உலக தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பியது.

2000-ஆம் ஆண்டு வட நைஜீரிய முஸ்லீம் மாநிலமொன்று ஷரியா சட்டம் கொண்டு வந்த போது, நைஜீரியா மீண்டும் சர்வதேச



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடகங்களின் கவனத்தை பெற்றது. ஷரியா சட்டத்திற்கு மேற்கத்திய நாடுகள் காட்டிய எதிர்ப்பை நைஜீரிய முஸ்லீம்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. உண்மையில் பெரும்பான்மை மக்கள் ஆதரவுடன்தான் ஷரியா சட்டம் நடைமுறைக்கு வந்தது. இஸ்லாமிய மத நிறுவனங்களின் தூண்டுதல் இருந்த போதிலும், பெரும்பாலும் அதிகரித்து வரும் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தவே இஸ்லாமிய மதச் சட்டம் கொண்டுவரப்பட்டது. தற்போது நைஜீரியாவில் தெற்கே குற்றச் செயல்கள் மலிந்த லாகோஸ் நகரத்திற்கு எதிர்மாறாக, வடக்கே ஓரளவு பாதுகாப்பான சூழ்நிலை நிலவுகின்றது. மேலும் சுதந்திரத்திற்குப் பின்னர் மேற்கத்திய கலாச்சார சீர்கேடுகள் விரைவாகப் பரவி வந்தன. மக்களின் மேற்கத்தியமயமாகலைத் தடுத்து, காலனிய காலத்திற்கு முந்திய இஸ்லாமிய கடந்த காலப் பெருமையை மீட்டெடுப்பதுமே ஷரியா சட்டம் கொண்டு வரப்பட்டதன் நோக்கங்கள். மேற்கத்திய எதிர்ப்பிற்கு நைஜீரிய முஸ்லீம்கள் ஒசாமா பின் லாடன் படம் பொறித்த டி-ஷேர்ட்களை அணிந்து எதிர் வினையாற்றினர். இப்போதும் அங்கே ஒசாமா ஒரு மாபெரும் வீரனாகக் கொண்டாடப்படுகின்றார்.

நைஜீரிய சனத்தொகையில் கிறிஸ்தவர்கள் 50 வீதம் (புராதன ஆப்பிரிக்க மதங்களைப் பின்பற்றும் சிறு தொகை தவிர) இருக்கலாம். கடந்த பத்தாண்டுகளாகவே கிறிஸ்தவர்களுக்கும், இஸ்லாமியருக்கும் இடையிலான உறவு சீர்கெட்டு வருகின்றது. சில நேரம் அற்ப விடயம் கூட கலவரங்களைத் தூண்டி விடுகின்றது. கலவரத்தில் இரு தரப்பிலுமே நூற்றுக்கணக்கானோர் மரணமடைகின்றனர். சொத்துகள் அழிக்கப்படுகின்றன. மேற்குலக நாட்டு ஊடகங்கள் இஸ்லாமிய அடிப்படைவாதிகளே கலவரத்திற்கு காரணம் என்று ஒரு தலைப்பட்சமாக செய்தி அறிவிக்கின்றனர். உதாரணத்திற்கு உலக அழகிப் போட்டியைக் காரணமாக வைத்து முஸ்லீம்கள் கலவரத்தை தொடங்கியது உண்மை. ஆனால் கலவரத் தீயைப் பற்ற வைப்பதில் கிறிஸ்தவர்களும் சளைத்தவர்கள் அல்லர். இரண்டு மதங்களிலும் மத அடிப்படைவாதிகள் உள்ளனர். சவூதி அரேபியா, ஈரான் போன்ற நாடுகள் இஸ்லாமிய அடிப்படைவாத நிறுவனங்களை நிதி கொடுத்து பராமரிக்கின்றன. அதேநேரம் அமெரிக்க கிறிஸ்தவ மத அடிப்படைவாதிகள், நைஜீரிய புரட்டஸ்தாந்து அல்லது பெந்தேகொஸ்தே சபைகளுக்கு பணம் கொடுத்து ஊக்குவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரிட்டிஷ் காலனிய காலத்தில் அதாவது 19-ஆம் நூற்றாண்டில் அடிமை வியாபாரம் தடை செய்யப்பட்டு விட்டதால், விடுவிக்கப் புட்ட அடிமைகள் சிலர் கிறிஸ்தவப் பாதிரிகளாக பயிற்றுவிக்கப் பட்டனர். தென் நைஜீரியாவில் ஆப்பிரிக்க மதங்களைப் பின்பற்றிய மக்களை கிறிஸ்தவர்களாக மாற்றும் பணியில் இவர்கள் ஈடுபடுத்தப் பட்டனர். அதே நேரம் சில கருப்பின பாதிரிகள் பிரிட்டிஷ் பொருட்களை நைஜீரியாவில் சந்தைப்படுத்தும் விற்பனைப் பிரதிநிதிகளாகவும் செயற்பட்டனர். கத்தோலிக்க, அங்க்லிக்கன் மதப்பிரிவுகள் இவ்வாறு முதலாளித்துவத்துடன் கைகோர்த்துக் கொண்டுதான் நைஜீரியாவில் காலூன்றின. இதனால் இன்றைக்கும் மத நம்பிக்கையுடன், கூடவே வியாபார மனோபாவமும் பெரும்பாலான நைஜீரியர்களின் இரத்தத்தோடு ஊறியிருப்பதைக் காணலாம். ஆப்பிரிக்காவின் திறமையான தொழிலதிபர்கள் பலர் நைஜீரியர்கள் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

கத்தோலிக்க, அங்க்லிக்கன் திருச்சபைகள் விதிக்கும் கட்டுப்பாடுகள் சில நைஜீரிய மக்களை சங்கடத்திற்குள்ளாக்குகின்றது. உதாரணத்திற்கு, பலதார மணம் அந் நாட்டில் காலங்காலமாக இருந்து வரும் வழக்கங்களில் ஒன்று. அரசாங்கம் ஒரு முறை இதைத் தடுக்க சட்டம் கொண்டு வந்த போது, எதிர்பாராவிதமாக பெண்களிடம் இருந்து எதிர்ப்பு வந்தது. அனேகமாக சமூகத்தில் ஏழைக் குடும்பத்தை சேர்ந்த பெண்கள், பணக்கார ஆண்களுக்கு இரண்டாவது அல்லது மூன்றாவது மனைவியாவதனால் குடும்ப பாரத்தை குறைக்க முடிகின்றது என்பது அவர்களது வாதம். வறுமை காரணமாக மேற்கத்திய நாடுகளை நோக்கிப் பயணம் செய்யும் பெண்கள், மாபியாக் குழுக்களால் விபச்சார அடிமைகளாக்கப்படுகின்றனர். ஒருபுறம் செல்வத்தை குவித்து வைத்துள்ள சிறுபான்மை பணக்கார வர்க்கம், மறுபுறம் அன்றாட உணவுக்கே வழியில்லாத பெரும்பான்மை ஏழை மக்கள். இந்த சமூக ஏற்றத்தாழ்வு பல பிரச்சினைகளின் தோற்றுவாயாக உள்ளது. இருப்பினும் அங்கே 'வர்க்கப் பிரிவினை' என்ற சொற்பதம் யாராலும் பாவிக்கப்படுவதில்லை. அதற்கு மதம் ஒரு காரணம்.

'இவ்வுலக வாழ்வில் கஷ்டப்படுபவர்கள், இறந்த பின் சொர்க்கத்தில் செல்வந்தர்களாகலாம்' என்று போதிக்கும் கத்தோலிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதத்தை விட்டு பலர் விலகி வருகின்றனர். அதிருப்தியாளர்களைப் பல்வேறு பெந்தெகொஸ்தெ சபைகள் சேர்த்து வருகின்றன. அமெரிக்க மூலதனத்தில் இயங்கும் அந்த சபைகள், தொழில் வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்தாவது மக்களை கவர்கின்றன. ஆரம்பத்தில் கஷ்டப்பட்டவர்களுக்கு உதவுவதாகக் காட்டிக்கொள்ளும் சபைகள், உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்ட பின்னர் வருமானத்தில் பத்து வீதம் அங்கத்துவ பணமாக செலுத்த வேண்டும் என வற்புறுத்துகின்றன. நைஜீரியாவில் பெந்தெகொஸ்தெ சபைகளின் பாதிரிகள் ஆடம்பர பங்களாவில் வசிப்பதும், சொகுசு காரில் பயணம் செய்வதும், பிள்ளைகளை அமெரிக்கா அனுப்பி படிக்க வைப்பதும் சர்வசாதாரணம்.

நைஜீரியா ஆப்பிரிக்காவின் எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்று. பெட்ரோலியத்தை இலகுவில் பிரித்தெடுக்கக் கூடிய அளவு நைஜீரிய எண்ணெய் தரமானது. நெதர்லாந்து அரச குடும்பத்தின் முதலீட்டில் இயங்கும் ஷெல் நிறுவனம் பெருமளவு நைஜீரிய எண்ணெயை அகழ்ந்து சர்வதேச சந்தையில் விற்று வருகின்றது. ஒரு பகுதி இலாபம் ஆளும் வர்க்கத்தின் பாக்கெட்டுக்குள் போவதால், பொது மக்களுக்கு எந்தப் பலனும் கிடைப்பதில்லை. மொத்த உற்பத்தியில் பத்து சதவீதம் உள்நாட்டு பாவனைக்கு ஒதுக்கப்பட்டாலும் அங்கே பற்றாக்குறை நிலவுகின்றது. பெட்ரோல் நிலையங்களில் மக்கள் நீண்ட வரிசையில் காத்திருக்க வேண்டி நேருவதும், அடிக்கடி விலை உயர்வதும் நைஜீரியா உண்மையிலேயே எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடா? என்ற சந்தேகத்தைத் தோற்றுவிக்கும். நம்பினால் நம்புங்கள்; உள்ளூர் பாவனைக்குத் தேவையான பெரும் பகுதி பெட்ரோல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படுகின்றது. மோசமான முகாமைத்துவத்தை கொண்ட எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், அயல்நாடுகளுக்கு கடத்தப்பட்டு அதிக விலைக்கு விற்றல் போன்ற காரணங்களால் இந்தத் தட்டுப்பாடு ஏற்படுகின்றது.

ஊழல் பெருச்சாளிகளால் ஆளப்படும் நாட்டில் சட்டம், ஒழுங்கை எதிர்பார்ப்பது முயல்கொம்பை தேடுவதற்கு ஒப்பானது. பொறுத்துப் பொறுத்து பார்த்த மக்கள் சட்டத்தை தமது கைகளில் எடுத்தனர். எண்ணெய் குழாய்களை துளையிட்டு எண்ணெய் திருடத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடங்கினர். அல்லது குழாய்களைச் சேதமாக்கி விட்டு, கம்பெனி ஊழியர்கள் வரும் வரை காத்திருந்து அவர்களைப் பிடித்து சிறை வைத்தனர். சில நேரம் இது போன்ற அழிவு வேளைகளில் சிக்கி பொது மக்கள் மரணமடைவதும் உண்டு. ஆயினும் அவர்களுக்கு பகாசுர எண்ணெய் கம்பெனிகளை எதிர்த்துப் போராடுவதைத் தவிர வேறு வழியில்லை. எண்ணெய் வளம் அவர்களது வாழ்க்கையை வளப்படுத்த செலவிடப்பட வேண்டும் என்ற நியாயமான கோரிக்கையே அவர்களது போராட்டம். சில தன்னிச்சையான ஆயுதக் குழுக்கள் எண்ணெய் கம்பெனி ஊழியர்களைக் கடத்தி, தமது கோரிக்கைகளுக்கு செவி சாய்க்க வைத்தனர். கென் சரவீவ என்ற காந்திய வழியில் போராடிய ஒருவர் நைஜீரிய பாதுகாப்பு படையினரால் கொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, சர்வதேச மன்னிப்புச் சபை நைஜீரிய பிரச்சினையை உலகறிய வைத்தது. இந்தக் கொலையில் ஷெல் நிறுவனமும் சம்பந்தப்பட்டிருப்பதற்கான ஆதாரங்கள் உள்ளன.

ஷெல் நிறுவனத்தின் தலைமை நிர்வாகியை, ஒரு பத்திரிகையாளர் பேட்டி கண்ட போது, 'அனைத்தையும் தெரிந்து வைத்திருப்பவர்களைத் தனக்கு பிடிக்காது.' என்று கூறினார். ஆமாம், நைஜீரிய சர்வாதிகாரிகளுடன் கூடிக் குலாவுவது, லஞ்சம் கொடுப்பது, எதிர்ப்பவர்களை ஆள் வைத்துக் கொலை செய்வது, வரி ஏய்ப்பு செய்து கொள்ளையடிப்பது... இவ்வாறான கிரிமினல் வேலைகளை ஷெல் செய்து வருவது நைஜீரியாவில் அனைவருக்கும் தெரிந்த உண்மை. ஒரு பக்கம் எல்லா பாவ காரியங்களையும் செய்து கொண்டு, மறு பக்கம் தன்னைக் கொடை வள்ளலாகக் காட்டி புண்ணியம் தேடுகின்றது. பாடசாலைகள், வைத்தியசாலைகள், மற்றும் பல சமூக நல தொண்டு சேவைகளுக்கு ஷெல் 'நன்கொடை' வழங்கி வருகின்றது. அதே நேரம் தனது இருப்பிற்கு ஆபத்து நேரா வண்ணம் முன்பு தன்னை எதிர்த்து போராடியவர்களைச் சேர்த்து தனியார் பாதுகாப்புப் படை ஒன்றை உருவாக்கி உள்ளது.

உலக நாடுகளைப் பொறுத்த வரை நைஜீரியாவில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் ஒரு பொருட்டல்ல. நைஜீரியா ஆப்பிரிக்காவின் பெரிய நாடுகளில் ஒன்று மட்டுமல்ல, தொழிற்துறையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுமாகும். அது மட்டுமல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயபிரா போருக்குப் பின்னர் போரியல் அனுபவத்தை பெற்ற இராணுவமானது, நாட்டின் இன்றியமையாத நிறுவனமாக வளர்ந்துள்ளது. இராணுவத்தின் ஆசீர்வாதம் இருந்தால் மட்டுமே அங்கே ஜனநாயகம் நிலைக்க முடியும். நைஜீரியா, எல்லாம் வல்ல அமெரிக்காண்டவரின் அங்கீகாரம் பெற்ற நாடு. அதனால் ஐக்கிய நாடுகள் சபை தலையீட்டில் எந்தவொரு ஆப்பிரிக்க நாட்டிற்காவது சமாதானப்படை அனுப்ப நேர்ந்தால் அதிலே நைஜீரியா முக்கிய பங்காற்றும். ஆனால் சமாதானம் என்ற பெயரில் நைஜீரியா பிராந்திய வல்லரசு மனப்பான்மையுடன் செயற்படுகின்றது. யுத்த பிரபுக்களுக்கு சார்பாக நடந்து கொள்கின்றது. வேலியே பயிரை மேய்வது போல மனித உரிமை மீறல்களைப் புரிகின்றது. சியாரா லியோனில் வைர வியாபாரத்தில் கூட ஈடுபட்டதற்கு ஆதாரங்கள் உள்ளன. இத்தனை குறைபாடுகளுக்கு மத்தியில் நைஜீரிய ஆட்சியாளர்கள் இன்னமும் வல்லரசு கனவு காண்கின்றனர். பல்வேறு இனங்களும், மதங்களும் தமக்குள் முட்டி மோதிக் கொண்டிருக்கும் ஒரு தேசத்தில் அது ஒரு பகற்கனவாக மட்டுமே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 5. ஐவரி கோஸ்ட்: சாக்லெட்டின் தாயகம்

ஆப்பிரிக்கக் கண்டம் பல 'அதிரடிச்' செய்திகளுக்குப் புகழ் பெற்றது. அங்கே ஏதோ ஒரு நாட்டில் திடீரெனச் சதிப்புரட்சி நடக்கும்; திடீரென ஆட்சி கவிழும்; திடீர் திடீரெனக் கிளர்ச்சியாளர்கள் நவீன ஆயுதங்களுடன் தோன்றுவார்கள். மேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு காலத்தில் யானைத்தந்தம், தங்கம் ஏற்றுமதி செய்ததால் 'ஐவரி கோஸ்ட்' என நாமம் சூட்டப்பட்ட நாட்டிலும் திடீர் கிளர்ச்சியாளர்கள் தோன்றியதால் இந்நாடும் சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளது. வழமைபோல் இந்தத் தடவையும் சர்வதேசப் பார்வை பாரபட்சம் நிறைந்ததாகவேயுள்ளது. உதாரணமாகக் கூறினால், இன்னொரு மேற்காப்பிரிக்க நாடான நைஜீரியாவில் எண்ணெய் வளப் பிராந்தியத்தில் வாழும் மக்களின் எழுச்சி பற்றி எத்தனை பேருக்குத் தெரியும்? அவர்கள் 'ஷெல்' எண்ணெய் அலுவலகங்களை முற்றுகையிட்டு கீழ் மட்ட அதிகாரிகளைப் பணயம் வைத்ததை எந்தவொரு செய்தி நிறுவனமும் தெரிவிக்கவில்லை. இந்தப் பிரச்சினை பல ஆண்டுகளாகத் தொடர்கின்றது.

அப்படியிருக்கையில் ஐவரி கோஸ்டின் திடீர்க்கிளர்ச்சியாளரின் கலகம் பற்றிய செய்திகள் சர்வதேசத் தொடர்பூடகங்களில் முக்கியத்துவம் பெறுவதைப் பற்றிச் சந்தேகப்படாமல் இருக்க முடியாது. மேலும், எமக்குச் சொல்லப்பட்டது போல சாதாரண 'சிப்பாய்களின் கலகமாக' மட்டுமிருப்பின், அவர்களின் இராணுவ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் பின்ணணி என்ன? கிளர்ச்சியாளருக்கு ஆதரவளித்த எதிர்க்கட்சித் தலைவர் ஏன் பிரெஞ்சு தூதுவராலயத்தில் சரணடைய வேண்டும்?

ஐவரி கோஸ்ட் குடியரசு 40 ஆண்டுகளாக சர்வாதிகாரிகளினால் ஆளப்பட்டு வந்தாலும், நிலையான அரசு மற்றும் பொருளாதார வளர்ச்சியைக் கண்ட நாடு. மரப்பலகை, கொக்கோ, கோப்பி போன்றவற்றின் ஏற்றுமதி வருமானம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி விட, அயல் நாட்டவர்கள் இங்கு வேலை தேடி வந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் உலகம் எப்போதும் ஒரே மாதிரி இருப்பதில்லையே. நீண்ட காலத்திற்கு பின்பு நடந்த பொதுத்தேர்தலில் ஜனநாயகப் பூர்வமாகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி லோரன்ட் குபாக்போ பதவியேற்ற பின்னர்தான் பிரச்சினைகள் ஆரம்பமாகின.

முன்னாள் பிரெஞ்சுக் காலனியான ஐவரி கோஸ்ட் சுதந்திரமடைந்த பின்னரும் பிரான்சுடனான வர்த்தகத் தொடர்புகள் வழக்கம் போலத் தொடர்ந்தன. நவகாலனித்துவக் கொள்கைகளின்படி கொக்கோ, கோப்பி போன்றவற்றை பதனிடப்படாத மூலப் பொருட்களாகவே ஐவரி கோஸ்ட் ஏற்றுமதி செய்து கொண்டிருந்தது. இதற்கென்று தனியான அமைச்சு கூட இயங்கியது. புதிய ஜனாதிபதி பதவியேற்றதும் 'இந்த மூலப்பொருள் ஏற்றுமதிக்கான அமைச்சின்' தேவை பற்றிக் கேள்வியெழுப்பியுள்ளார். மூலப்பொருட்களை முடிவுப் பொருட்களாக மாற்றும் தொழிற்சாலைகளை நிறுவ வேண்டுமெனவும் கூறியுள்ளார். இவற்றை விட பிரான்சை 'தாய்நாடாக'ப் பார்க்கும் அரசியலிலிருந்து விலகி, உள்நாட்டுப் பொருளாதார கட்டுமானங்களைச் சீர்திருத்தும் சமுகப் பொருளாதாரத் திட்டங்களை வகுத்திருந்தார்.

ஆப்பிரிக்காவில் காலனித்துவப் பொருளாதார நலன்களைக் கொண்டிருந்ததை வெளிப்படையாகவே ஏற்றுக்கொள்ளும் பிரான்சு ஐவரி கோஸ்டில் நடக்கும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளத் தயாராகவில்லை. புதிய ஜனாதிபதி குபாக்கோ எல்லாவற்றுக்கும் பிரான்சிலேயே தங்கியிருக்காமல் சீனா, இத்தாலி, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் நட்புறவுகளை வளர்த்தமையானது, பாரிசில் எச்சரிக்கைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமிக்கையாக எடுக்கப்பட்டது. 'ஆப்பிரிக்கத் தலைவர்களுக்கு ஜனநாயகம் என்பது ஆடம்பரமானது' எனக் கூறிய பிரான்சு மாஜி ஜனாதிபதி ஷிராக்கின் பேச்சில் வெறுப்புத் தெரிந்தது.

ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதி பதவி விலகி புதிய தேர்தல்கள் நடத்தப்பட வேண்டுமென்பது கிளர்ச்சியாளர்களின் கோரிக்கை. பிரான்சினது விருப்பமும் அதுதான். போர் நெருக்கடியால் ஆட்சி கவிழும் நிலையில், எதிர்க்கட்சித் தலைவரும் தமது நெருங்கிய நண்பருமான உவாத்தராவை வேண்டிய பணம் செலவழித்து ஆட்சிபீடம் ஏற்ற விரும்பியது பிரான்சு. தலைநகர் அபிஜானில் சண்டை நெருங்கியவுடனேயே உவாத்தரா ஓடிப்போய் பிரெஞ்சு தூதுவராலயத்தில் சரணடைந்த மர்மமும் இதுதான்.

புதிதாக ஆரம்பித்துள்ள உள்நாட்டு யுத்தம் நாட்டை இன-மத ரீதியாகப் பிரித்துள்ளதுடன், வெளிநாட்டவர் மீதான வெறுப்பையும் தூண்டி விட்டுள்ளது. குறிப்பாக வடக்கு மாகாணங்களைச் சேர்ந்த செனுபோ, பம்பரா, மலின்கே இனமக்கள் அயல்நாடுகளான பூர்க்கினா ஃபாசோ, மாலி, கிணி ஆகிய நாடுகளில் பெரும்பான்மையாக வாழ்வதுடன் இஸ்லாமிய மதத்தையும் சேர்ந்தவர்கள். உத்தியோகப்பூர்வ அறிக்கைகளின்படி ஐவரி கோஸ்ட்டின் மொத்தச் சனத்தொகையில் முஸ்லிம்கள் 20 வீதமானவர்கள். தெற்கு மாகாணங்களில் வாழும் குறு, பவுலே (முன்னாள் சர்வாதிகாரியின் இனம்) இனங்களில் 20 வீதமானோர் கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள். பிரான்சுடன் நெருக்கமாக இருந்த முன்னாள் சர்வாதிகாரி புவாஞி தான் பிறந்த இடத்தில் கோடிக்கணக்கான டொலர்கள் செலவிட்டு மிகப்பிரமாண்டமான (வத்திக்கான் செயிண்ட் பீட்டர்ஸ் பாணியில்) கத்தோலிக்கத் தேவாலயத்தைக் கட்டிப் பெருமை தேடிக் கொண்டவர். அச்சு அசலாக வாத்திக்கானில் உள்ளதைப் போல காட்சியளிக்கும் அந்த தேவாலயத்தின் கோபுரத்தின் உயரத்தை குறைத்துக் கட்டும் படி பாப்பரசர் உத்தரவிட்டாராம்.

இன்றைய ஐவரி கோஸ்ட் பிரச்சினையில் வந்தேறு குடிகளின் பங்கும் முக்கியமாகக் கருதப்படுகின்றது. காலனித்துவக் காலத்திலேயே பிரெஞ்சுக்காரர் தமது பெருந்தோட்டப் பயிர்ச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கையில் வேலைக்கமர்த்த அயல்நாடுகளிலிருந்த (பூர்க்கினா ஃபாசோ, மாலி) பெருமளவு கூலித் தொழிலாளர்களை வருவித்தனர். சுதந்திரமடைந்த பின்பும் இவர்களின் குடியேற்றம் தொடர்ந்தது. இதிலே பூர்க்கினாபே என அழைக்கப்படும் பூர்க்கினா ஃபாசோ குடியேறிகளைத் தம்மைவிடத் தாழ்ந்தவர்களாக ஐவரியர்கள் (மரபு வழி ஐவரி கோஸ்ட் பிரஜைகள்) கருதுவது வழக்கம். எதிர்க்கட்சித் தலைவர் உவாத்தரா உண்மையில் பூர்க்கினா ஃபாசோவைச் சேர்ந்தவர் என்ற சர்ச்சைக்கும் உள்ளானவர். பூர்க்கினாபேக்கள் வாழும் வட மாகாணங்களில்தான் இவரது கட்சிக்கு அதிக வாக்குகள் கிடைத்தமை கவனிக்கத்தக்கது. கிளர்ச்சியாளர்கள் வடக்கு மாகாணங்களையே தமது கட்டுப்பாட்டில் விட்டிருந்ததால் அவர்களும் பூர்க்கினாபேக்கள்தான் எனப் பரவலாக நம்பப்பட்டது. மரபுவழி ஐவரி கோஸ்ட் பிரஜைகளின் மூதாதையர் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு மாலி, பூர்க்கினா ஃபாசோ போன்ற நாடுகளிலிருந்து குடியேறியவர்கள் என்பது உதிரிச் செய்தி.

பூர்க்கினா ஃபாசோவை முன்பு ஆட்சி செய்த, பலராலும் மதிக்கப்பட்ட சோஷலிஸ ஜனாதிபதி தோமஸ் சங்கரா படுகொலை செய்யப்பட்ட பின் ஆட்சியைப் பிடித்த தற்போதைய ஜனாதிபதி கம்பாரே தீவிர மேற்குலகச் சார்பாளர். அங்கேயிருந்துதான் கிளர்ச்சியாளருக்கான ஆயுதத் தளவாடங்கள் அனுப்பப்படுவதாக நம்பப்படுகின்றது. மேற்குறிப்பிட்ட சந்தேகங்கள் எல்லாம் ஒன்றுகூடி 'இப்போது நடப்பது சிப்பாய் கலகமல்ல, ஒரு அந்நிய நாட்டுப் (பூர்க்கினா ஃபாசோ) படையெடுப்பு' என உள்ளூர் மக்களைச் சொல்ல வைத்துள்ளது. சர்வதேசச் செய்தி ஸ்தாபனங்கள் கூறியபடி 'நீண்டகாலத் திட்டங்களுடன் நிறுவன மயமாகிய' கிளர்ச்சியாளரின் பிரதிநிதி 'தமது இயக்கம் பற்றித் தெளிவுபடுத்த' பாரிசுக்கு சென்றிருந்தார். அதே வேளையில் பிரான்சில் தங்கியிருந்த முன்னாள் சர்வாதிகாரி புவாஞியின் வாரிசும் (உண்மையிலேயே புவாஞியின் வைப்பாட்டி மகன் என்று கதை அடிபடுகின்றது) உலக வங்கியில் பதவி வகித்த பொருளாதார நிபுணருமான கேனன் பெடி திடீரென நாடு திரும்பியுள்ளார்.

கேனன் பெடி ஒரு வலதுசாரி அரசியற் தலைவரென்பதும், முன்பு இவரின் ஆட்சிக்காலத்தில் நிறவாத தென்னாப்பிரிக்காவுடன் கூட இவர் உறவுகளை மேற்கொண்டிருந்தார் என்பதும் தெரிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடயங்களே. பிரான்சைப் பொறுத்தவரை தம்மோடு ஒத்துழைக்கும் வலதுசாரிக் கட்சிகளின் தலைவர்களான கேனன் பெடி அல்லது உவாத்தராவை பதவியில் அமர்த்த எத்தனித்தது. ஆப்பிரிக்காவில் பிரான்சின் மறைமுகமான அரசியல்-இராணுவத் தலையீடுகள் ஒன்றும் புதியவையல்ல. சுதந்திரம் வந்த பின்பும் அபிட்ஜான் நகரில் நிரந்தரமாக இருக்கும் பிரெஞ்சு இராணுவ முகாமும், உயரதிகாரிகளாகவும் வர்த்தகர்களாகவும் நிரந்தரமாகத் தங்கிவிட்ட பிரெஞ்சுக்காரரும் இந்நாட்டில் இன்னமும் நடப்பது நவ-காலனித்துவ ஆட்சி என்பதைத் தெளிவு படுத்தும் சான்றுகள். இதற்குத் தடையாக உள்ளூர் மக்களின் நலன் பேணவரும் அப்பாவி அரசியல்வாதிகளான தற்போதைய இடதுசாரி ஜனாதிபதி குபாக்போ போன்றவர்களை வெளியேற்ற எந்த வழிமுறையையும் பின்பற்ற காலனித்துவவாதிகள் தயாராக உள்ளனர். அதை அவர்கள் நேரடியாகச் செய்யாமல் உள்நாட்டு எதிரிகளை வைத்து செய்து முடிப்பதுதான் நடக்கும் கதை.

சுவிட்சர்லாந்தில் இருந்து ஏற்றுமதியாகும் நெஸ்லே சொக்லேட்களை சுவைப்பவர்கள் பலருக்கு அதன் மூலப்பொருளான கொக்கோ அந்நாட்டில் உற்பத்தியாவதில்லை என்பதும், ஐவரி கோஸ்டில் இருந்து இறக்குமதியாகின்றது என்பதும் தெரியாது. ஐவரி கோஸ்ட்டின் 1.4 பில்லியன் டாலர் பெறுமதியான கொக்கோ தொழிற்துறை ஆண்டுக்கு 4 வீதம் வளர்ந்து வருகின்றது. ஆனால் இலாபத்தில் பெரும்பகுதி சுவிட்சர்லாந்திற்கு செல்கின்றது. செல்வந்த நாடுகளின் குழந்தைகள் விரும்பி உண்ணும் சாக்லெட்டின் உற்பத்தியில் ஐவரி கோஸ்ட்டின் ஏழைக் குழந்தை தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்படும் வேடிக்கையான உலகமிது. எந்தவித இயற்கை வளமும் இல்லாத ஐரோப்பிய நாடுகள், ஆப்பிரிக்காவில் இருந்து தருவித்த வளங்களை வைத்துதான் உலகச் சந்தையை தமது விற்பனைப் பண்டங்களால் நிரப்பி வருகின்றன. உண்மையில் ஐரோப்பா தான் ஆப்பிரிக்காவில் தங்கி இருக்கின்றது. ஆப்பிரிக்காவில் வாங்கப்படும் மலிவு விலை மூலப் பொருளுக்கும், சந்தையில் விற்கப்படும் விலை உயர்ந்த முடிவுப் பொருளுக்கும் இடையில் கிடைக்கும் நிகர இலாபம்தான் ஐரோப்பாவில் செல்வத்தைக் குவித்து வருகின்றது. ஆப்பிரிக்கா மட்டும் இல்லையென்றால் ஐரோப்பியர்கள் வறுமையில் வாட வேண்டி இருக்கும். இதனால் மூலப்பொருளின் விலையை முடிந்த அளவு மிகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைவாக வைத்திருப்பது ஐரோப்பாவிற்கு நன்மை பயக்கும். அதற்காக இராணுவத் தலையீட்டைச் செய்யவும் தயங்க மாட்டார்கள்.

லைபீரியாவிலும், சியாரா லியோனிலும் வைரக் கற்களுக்காக, கொங்கோவில் கணிப்பொறி 'சிப்'களுக்காக... இந்த வரிசையில் சாக்லெட்டுக்காக ஐவரி கோஸ்ட். இப்படியே போனால் மீனுக்கும், மரக்கறிக்கும், பழங்களுக்குமாக எந்த நாட்டின் மீது படையெடுப்பார்களோ தெரியாது. ஏனென்றால் ஐரோப்பியச் சந்தைகளை நிரப்பும் உணவுப் பொருட்களின் பெரும்பகுதி ஆப்பிரிக்காவில் இருந்துதான் வருகின்றது. நாளந்தம் ஆப்பிரிக்காவில் இருந்து இறக்குமதியாகும் உணவை விழுங்கும் ஐரோப்பியர்கள் அங்கே பட்டினியால் வருந்தும் மக்களுக்கு உதவி செய்கிறார்களாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 6. கருப்பர்களுக்கு இனவெறி கற்பித்த வெள்ளையின கனவான்கள்

ருவான்டா, 1994-ஆம் ஆண்டு, நவீன உலகை உலுக்கிய இன அழிப்பு நடவடிக்கை, ஒரு வானொலி அறிவிப்புடன் ஆரம்பமாகியது: 'ஹூட்டு சகோதரர்களே! எம்மை இதுவரை காலமும் அடிமைகளாக அடக்கி ஆண்டு வந்த துட்சி கரப்பான் பூச்சிகளை அழிக்கும் காலம் வந்துவிட்டது.' இனவாத வெறுப்பைக் கக்கும் அந்த அறிவிப்பை செய்த 'மில் கொலின்ஸ் சுதந்திர வானொலி' ஹூட்டு பாசிச சக்திகளால் நடத்தப்பட்ட தனியார் வானொலி என நம்பப் படுகின்றது. ருவான்டாவில் நீண்ட காலமாகவே ஹூட்டு இனவெறி அரசியல் நடத்தி வந்த பாசிச 'குடியரசு பாதுகாப்புக் கூட்டணி' (CDR) கட்சியுடன், ஆளும்கட்சி தலைமையிலான Interahamwe என்ற துணைப்படையும் சேர்ந்து கொண்டு சிறுபான்மை துட்சி இன மக்களை நரபலி வேட்டையாடிக் கொன்று குவித்தனர். ருவான்டாவின் தேசிய இராணுவம் பெரும்பான்மை ஹூட்டு இனத்தவரின் ஆதிக்கத்தில் இருந்ததால் இனப்படுகொலையில் இராணுவத்தின் நேரடிப் பங்களிப்பை மறுக்க முடியாது.

ருவான்டாவின் பெரும்பான்மை இனமான ஹூட்டுக்களுக்கும், சிறுபான்மை இனமான துட்சிகளுக்கும் இடையிலான பகைமை, கசப்புணர்வு நீண்ட காலமாக நீருபூத்த நெருப்பாக அடங்கிக் கிடந்தது. ருவான்டா பெல்ஜியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்ற காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்து, துட்சி சிறுபான்மையினருக்கு எதிரான இனக் கலவரங்களையும், துட்சி கிளர்ச்சியாளர்களின் அரசுக்கு எதிரான ஆயுதமேந்திய போராட்டத்தையும் சந்தித்துள்ளது. 1994-இல் பதவியில் இருந்த ஜனாதிபதி 'ஹபியாரிமனா' வெளிநாட்டு அழுத்தம் காரணமாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கும், அதிகாரப் பரவலாக்கத்திற்கும் சம்மதித்திருந்தார். இதனால் ஹபியாரிமனா ஒரு ஹூட்டு இன மிதவாதியாக, இன்னும் சொன்னால் 'ஹூட்டு இனத் துரோகியாக' பாசிச சக்திகளால் கணிக்கப்பட்டிருக்க வாய்ப்புண்டு. இருப்பினும் 1994-ஆம் ஆண்டு, ஏப்ரல் 6-ஆம் திகதி, தான்சானியாவில் பேச்சுவார்த்தை நடத்தி விட்டு நாடு திரும்பிக் கொண்டிருந்த ஜனாதிபதியின் விமானத்தை சுட்டு வீழ்த்திய ஏவுகணையை ஏவியது யார் என்ற மர்மம் இன்று வரை துலங்கவில்லை. ஹூட்டு பாசிஸ்டுகள் சுட்டு வீழ்த்தி இருக்கலாம் என்று அப்போது நம்பப்பட்டாலும், இன்றைய ருவான்டா அதிபர் 'போல் ககாமே' யின் துட்சி கொரிலாக்களின் வேலை என்று பிரான்சு குற்றஞ்சாட்டியது. (விமானி ஒரு பிரெஞ்சுக்காரர் என்பதால் பிரெஞ்சு நீதிமன்றம் விசாரணை நடத்தியது.)

எது எப்படி இருந்த போதிலும், ஜனாதிபதி ஹபியாரிமனாவின் மரணத்திற்குப் பின்னர் நாட்டில் அராஜகம் தலைவிரித்தாடியது. 'துட்சி கிளர்ச்சியாளர்கள் எமது ஜனாதிபதியை படுகொலை செய்துவிட்டார்கள்.' என்ற செய்தி ஹூட்டு மக்கள் மத்தியில் காட்டுத்தீ போல பரவியது. விரைவில் அதுவே முழு துட்சி இனத்தவருக்கும் எதிரான துவேஷமாக உருவெடுத்தது. நாடு முழுவதும் வீதித்தடைகள் போடப்பட்டன. ஹூட்டு ஆயுததாரிகளின் வீதித்தடைச் சோதனையின் போது மறிக்கப்பட்ட வாகனங்களில் இருந்து துட்சி இனத்தைச் சேர்ந்தவர்களைத் தனியாகப் பிரித்தெடுத்தனர். அடையாள அட்டையில், 'இனம்: துட்சி' என்று குறிப்பிட்டிருப்பதே அவர்களைக் காட்டிக் கொடுக்க போதுமானதாக இருந்தது. (அடையாள அட்டையில் இனத்தைக் குறிப்பிடும் வழக்கம் பெல்ஜிய காலனிய ஆட்சியாளர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது.) பெண்கள், குழந்தைகள் என்று வேறுபடுத்தாது துட்சி என்ற காரணத்திற்காகவே கொலை செய்யப்பட்டனர். துப்பாக்கிச் சன்னங்களை வீணாக்குவது செலவு என்று அரிவாளால் வெட்டிக் கொல்லப்பட்டனர். குடியிருப்புகளுக்கு சென்று துட்சிகளை கொலை செய்த படையினர், சுடப்பட்ட துப்பாக்கிக் குண்டுகளுக்கான செலவை அவர்களே பொறுப்பெடுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்று மரணத்திலும் கணக்குப் பார்த்தனர். சாதாரண மக்களும் கொலை வெறியாட்டத்தில் பங்குபற்றுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். ஒரு கொலையை செய்தவனுக்கு, இன்னும் இன்னும் கொலை செய்ய வேண்டும் என்ற வெறி ஏறியது. கொலை செய்யப்பட்டவர்கள் துட்சி இனத்தவர்கள் மட்டுமல்ல. இன நல்லிணக்கத்தை விரும்பிய மிதவாத ஹூட்டுகளும் கொல்லப்பட்டனர். உலகம் மறுபக்கம் பார்த்துக் கொண்டிருக்கையில் சில மாதங்களுக்குள் எட்டு லட்சம் முதல் ஒரு மில்லியன் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

'இரண்டாம் உலகப்போரில் நடந்த யூத இன அழிப்பிற்குப் பின்னர், இன்று உலகம் ஆப்பிரிக்காவின் மாபெரும் இனப்படுகொலையை பார்த்துக் கொண்டிருக்கிறது.' என்று நெஞ்சை நெகிழ வைக்கும் உருக்கமான காட்சிகளை விவரித்துக் கொண்டிருந்த சர்வதேச தொலைக்காட்சிகளால் உலகின் மனச்சாட்சியை உலுக்க முடியவில்லை. சோவியத் ஒன்றிய வீழ்ச்சிக்குப் பின்னர் உலகின் ஒரேயொரு வல்லரசாகத் திகழ்ந்த அமெரிக்கா, தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று கையை விரித்தது. 'குழந்தை வல்லரசான' ஐரோப்பிய ஒன்றியம் வாய்ச்சொல்லில் மட்டுமே தான் கெட்டிக்காரன் என்று காட்டிக் கொண்டிருந்தது. இவ்வாறு இனப்படுகொலையை தொடராது தடுக்க வழி இருந்த போதும் சந்தர்ப்பத்தை தவற விட்ட காரணம் என்ன? அரசியலில் நண்பர்கள் கிடையாது. நிரந்தர நலன்கள் மட்டுமே உள்ளன. பிரான்சு அன்று ருவான்டாவை ஆட்சி செய்த ஹூட்டு இராணுவத்திற்கு பயிற்சி அளித்து, ஆயுதங்கள் கொடுத்து வந்தது. அதே போல துட்சி கிளர்ச்சியாளர்களுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வந்தது. அவரவருக்கு தமது ஆட்கள் வெல்ல வேண்டும் என்ற எதிர்பார்ப்பே மேலோங்கி இருந்தது.

சோவியத் ஒன்றியத்தின் வீழ்ச்சிக்குப் பின்னர், அமெரிக்காவின் கவனம் ஐரோப்பிய வல்லரசுகளின் மீது திரும்பியது. ஆப்பிரிக்காவில் நவ-காலனிய அரசியலில் மும்முரமாக ஈடுபட்டிருந்த பிரான்சு அதன் கண்ணில் துருத்திக் கொண்டிருந்தது. ருவான்டாவில் துட்சிகளின் கிளர்ச்சி, பிரான்சின் ஆதிக்கத்தை துடைத்தெறியும் பதிலிப் போராக அமெரிக்காவால் கருதப்பட்டது. துட்சிகளின் கொரில்லா இராணுவமான 'ருவான்டா தேசாபிமான முன்னணி' (RPF) அயல் நாடான (ஆங்கிலம் பேசும்) உகண்டாவில் தளம் அமைத்திருந்ததும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RPF படைத் தளபதி (இன்றைய ஜனாதிபதி) போல் ககாமே உட்பட பல தலைவர்கள் உகண்டாவில் ஆங்கில மொழி வழிக் கல்வி கற்றிருந்தும் அமெரிக்கா இலகுவாக ஊடுருவ வாய்ப்பாக அமைந்தது. உகண்டாவின் இன்றைய ஜனாதிபதி முசவேனி, ஆட்சியைக் கைப்பற்ற நடத்திய ஆயுதப் போராட்டத்தில் கீகஊ போராளிகள் பங்குபற்றி இருந்தனர். முசவேனி, ககாமே ஆகியோரை 'ஆப்பிரிக்காவின் நம்பிக்கை தரும் இளம் தலைமுறையை சேர்ந்த தலைவர்கள், மக்களுக்கு ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்குவார்கள்' என்று அமெரிக்க ஊடகங்கள் புகழ் பாடிக் கொண்டிருந்தன. ஒருவேளை ருவாண்டாவில் ககாமே ஆட்சிக்கு வந்த பின்னர் அரச கரும மொழியாகவும், கல்வியிலும் பிரெஞ்சை ஒதுக்கி விட்டு ஆங்கிலத்தை நடைமுறைக்கு கொண்டு வந்ததைச் சாதனையாக கூறலாம்.

ருவான்டாவில் இருப்பது இனப் பிரச்சினையா? ருவாண்டா மக்கள் காலங்காலமாக ஹூட்டு, துட்சி என்ற இன அடிப்படையில் பிரிந்து வாழ்ந்து வந்தனரா? இது ஆயிரம் ஆண்டு கால இனப்பகையா? நாம் முதலாளிய ஊடகங்கள் சொல்வதை நம்பினால், மேற்குறிப்பிட்ட கேள்விகளுக்கு 'ஆம்' என்று பதில் வரும். ஆனால் இந்தக் கருத்தியல் எவ்வளவு தூரம் சரி என்று எந்த சமூக விஞ்ஞானியும் ஆராயவில்லை, அல்லது அவர்களது முடிவுகள் பாரபட்சமின்றி இருப்பின் பிரசுரிக்கப்படுவதில்லை. முதலில் 'இனம்' (Ethnicity, Race எதுவாக இருந்தாலும்) என்ற சொல்லே ஒரு ஐரோப்பியக் கண்டுபிடிப்பாகும். ருவான்டாவின் இனப்பிரச்சினை ஆச்சரியப்படத்தக்க வகையில் இலங்கை இனப்பிரச்சினையுடன் பெரும்பாலும் ஒத்திருப்பதை, நீங்கள் இந்தக் கட்டுரையை வாசிக்கும் போது புரிந்து கொள்வீர்கள். இது ஒன்றும் தற்செயல் அல்ல. காலனிய எஜமானர்களின் பிரித்தாளும் கொள்கை எங்கேயும் ஒரே மாதிரித்தான் நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆங்கிலேயர்கள் எவ்வாறு இலங்கையில் வாழ்ந்த சிங்கள, தமிழ் மொழி பேசும் மக்களுக்கிடையில் இனப் பகையை தோற்றுவித்து, இனவாதப் படுகொலைகளுக்கு வழிவகுத்தார்களோ, அதே வேலையை பெல்ஜியர்கள் ருவான்டாவில் செய்தனர்.

19-ஆம் நூற்றாண்டின் இறுதியில் உலகின் மிக நீண்ட நதியான நைலின் நதிமூலத்தை தேடிச் சென்ற ஐரோப்பியர் சிலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருவான்டாவைக் 'கண்டுபிடித்தனர்'. அவர்களைத் தொடர்ந்து கிறிஸ்தவ மதம் பரப்புவோரும் அந்தப் பிரதேச மக்களை கத்தோலிக்கர்களாக மாற்றும் பணியில் ஈடுபட்டனர். இவர்கள் எல்லோருக்கும் ருவான்டாவில் எதிர்பாராத ஆச்சரியங்கள் காத்திருந்தன. இன்றைய ருவான்டா, புரூண்டி, மற்றும் உகண்டாவின் தென் பகுதி, கொங்கோவின் கிழக்குப்பகுதி என்பனவற்றை உள்ளடக்கிய ஒரே அதிகார மையத்தைக் கொண்ட மன்னரின் ஆட்சிப்பிரதேசமாக இருந்தது. மன்னரின் கீழ் நூற்றுக்கணக்கான சிற்றரசர்கள் மாகாணங்களை நிர்வகித்து வந்தனர். சுருக்கமாக சொன்னால், ஐரோப்பாவில் இருந்த அதே நிலப்பிரபுத்துவ சமுதாய அமைப்பு முறை ருவான்டாவிலும் காணப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளாக மக்கள் விவசாயம் செய்யும் அறிவைப் பெற்றிருந்தனர். அழகிய மலைநாடான ருவான்டாவில் ஒவ்வொரு குன்றும் ஒரு குடும்பத்திற்கு சொந்தமான விவசாய நிலமாக இருந்தது.

ருவான்டாவில் துவா (அல்லது பிக்மீ) என்றழைக்கப்படும் பழங்குடியினரும் வாழ்ந்து வருகின்றனர். பிற ஆப்பிரிக்க மக்களிடமிருந்து வேறுபடுத்தி அறியக்கூடிய தோற்ற அமைப்பைக் கொண்ட (குள்ளமானவர்கள், பழுப்பு நிறத்தவர்கள்) துவா மக்கள் இன்றும் கூட புராதன வேடுவர் சமூகமாகத்தான் வாழ்கின்றனர். யாருக்கும் தீங்கு செய்யாத தானுண்டு, தனது வேலையுண்டு என வாழ்ந்து வரும் துவா மக்களை ருவான்டா அரசர்கள் அடிமைகளாக வைத்திருந்தனர். அரசன் மட்டுமல்ல, நிலப்பிரபுக்களும் துட்சி இனத்தை சேர்ந்தவர்களாக அதிகாரம் செலுத்தினர். அதற்கு மாறாக பெரும்பான்மை ஹூட்டு இன மக்கள் நாட்டுப்புறங்களில் பண்ணையடிமைகளாக, குத்தகை விவசாயிகளாக இருந்தனர். இந்த உண்மையே ஹூட்டு-துட்சி இனப் பிரிவினையை நிரூபிக்க போதுமானதல்ல. ஏனெனில் 'நாகரிக காலத்தை' சேர்ந்த நாம் இனம் பற்றி புரிந்து வைத்திருப்பதற்கும், அன்றைய மக்களின் சிந்தனைக்கும் இடையில் நிறைய வேறுபாடு இருக்கின்றது. தனது சொந்த விவசாய நிலங்களில் அதிக விளைச்சலைப் பெறக்கூடியதாக பயிரிட்டு, தனது செல்வத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஹூட்டு ஒருவர் நிலப்பிரபுவாக வர முடிந்தமை குறிப்பிடத்தக்கது. எனினும் அதிகாரத்தில் இருப்பது யாராக இருந்தாலும் துட்சி என அழைக்கப்படலாயினர்.

துட்சிகளின் மூதாதையர் எத்தியோப்பியாவில் இருந்து வந்தவர்கள் என்ற கருத்து நிலவுகின்றது. இரு பக்க இனவாதிகள் மத்தியிலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐரோப்பிய காலனியாதிக்கவாதிகள் மத்தியிலும் இது போன்ற கருத்துகள் பிரபலமானவை. ('துட்சிகளை எத்தியோப்பியாவிற்கு திருப்பி அனுப்புவோம்.' என்பது ஹூட்டு இனவாதிகளின் முழக்கங்களில் ஒன்று.) எத்தியோப்பியர், அல்லது சோமாலியர்கள் போல (இவர்களை பிற ஆப்பிரிக்கர்களிடம் இருந்து இலகுவில் பிரித்தறிய முடியும்) பெரும்பாலான துட்சிகள் தோன்றுவதை மறுப்பதற்கில்லை. துட்சிகள் என்றால் உயரமானவர்கள், ஒடுங்கிய முகம், மெல்லிய உடல்வாகு கொண்டவர்கள்; ஹூட்டுகள் பருமனானவர்கள், வட்டமான முகம் கொண்டவர்கள், என்றெல்லாம் பிரித்துப் பார்ப்பது எல்லோருக்கும் பொருந்தாது. இருப்பினும் இனப்படுகொலை செய்யும் இனவாதிகளுக்கு அந்த வெளித் தோற்றமே போதுமானதாக இருந்தது.

ருவான்டாவின் எழுதப்படாத செவிவழி வரலாற்றின் படி கி.பி. 700-ஆம் ஆண்டளவில் வருகை தந்த ஹூட்டுகள் மரங்களை வெட்டி, நிலங்களை பண்படுத்தி விவசாயம் செய்து வந்துள்ளனர். பல்வேறு வகையான பழ மரங்களை நட்டு, உணவுப்பயிர்களை பயிரிட்டு அதன் பலனை அனுபவித்து வந்தனர். இயற்கையோடு ஒன்றி வாழ்ந்த துவா வேடர்களைப் போலன்றி குடிசைகளை கட்டி, கிராமங்களில் வாழ்ந்தனர். சமுதாயம் வளர்ச்சி அடைந்த போது 'முவாமி' என அழைக்கப்படும் மன்னனின் அதிகார மையமாக பரிணமித்தது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மத்திய ஆப்பிரிக்க இராச்சியமான ருவான்டா முழுவதும் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே கலாச்சாரம் நிலவியது.

ஹூட்டு நாகரீகம் தொடங்கி முன்னூறு ஆண்டுகளுக்குப் பின்னர், வடக்கே இருந்து மாடுகளை மேய்த்துக் கொண்டு வந்தனர் துட்சிகள் என்ற வந்தேறு குடிகள். இது இந்தியாவில் ஆரியரின் வருகையுடன் ஒப்பு நோக்கத்தக்கது. துட்சிகள் சமுதாயத்தில் மாடுகள் வைத்திருப்பது செல்வச் செழிப்பின் அடையாளம். ஒருவர் எத்தனை மாடுகள் வைத்திருக்கிறார் என்பதை வைத்துதான், அவர் பணக்காரரா இல்லையா என்பது தீர்மானிக்கப்பட்டது. இந்தக் கலாச்சாரம் இன்றும் கூட (துட்சி இனக்குடும்பத்தை சேர்ந்த) கென்யாவின் மாசாய் இன மக்கள் மத்தியில் நிலவுகின்றது. தமது மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேடியே துட்சிகள், ருவான்டாவிற்கு வந்தனர். அதனால் அங்கே விவசாயம் செய்து வந்த ஹூட்டுகளுடன் நிலத்திற்கான போட்டி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொருளாதார முரண்பாடுகளை (கவனிக்கவும்: இன முரண்பாடுகள் அல்ல) தோற்றுவித்தது. வேறுபாடான பொருளாதார நலன்கள் இருந்த போதிலும் காலப்போக்கில் துட்சிகள் தம்மை விட நாகரீகத்தில் மேலோங்கியிருந்த ஹூட்டுகளின் மொழியையும், மதத்தையும் மட்டுமல்ல கலாச்சாரத்தையும் தமதாக்கிக் கொண்டனர். முரண்நகையாக அதுவே துட்சி இன மேலாதிக்கத்திற்கு ஆதாரமாக அமைந்தது.

அதிகார வெறி கொண்ட துட்சிகள் விரைவில் ருவான்டாவின் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றினர். ஹூட்டுகள் விவசாயத்தையே பெரிதாக மதித்ததால், அவர்களை தமது ஆட்சிக்கு கீழ்ப்படிய வைப்பது புதிய ஆட்சியாளருக்கு இலகுவாக அமைந்தது. ஹூட்டுகள் உழைக்கும் வர்க்கமாகவும், துட்சிகள் ஆளும் வர்க்கமாகவும் மாறியது அப்போது தான். தேச நிர்வாகத்தில் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டன. துட்சிகள் ஆரம்பத்திலேயே மேலிருந்து கீழே வரும் அதிகாரப் படிநிலைச் சமூகமாக வாழ்ந்தவர்கள். அதனால்தான் 20-ஆம் நூற்றாண்டிலும் அதிகார வர்க்கம் முழுவதும் துட்சிகளைக் கொண்டிருந்தது. தேசப் பாதுகாப்பும் அவர்கள் வசமே இருந்தது. விவசாயம் சார்ந்த உற்பத்தி உறவுகளில் பண்ணையடிமை முறையை புகுத்தினர். துட்சி பண்ணையார்களின் மாடுகளுக்கு மேய்ச்சல் நிலம் தேவைப்பட்ட போது, ஹூட்டு விவசாயிகளிடம் நிலங்களை பெற்றுக் கொண்டு பண்டமாற்றாக சில மாடுகளைக் கொடுத்தனர். ஹூட்டு விவசாயிகள் மாடுகளை பராமரித்தாலும் பிறக்கும் கன்றுக்குட்டிகளை மட்டும் துட்சி உரிமையாளருக்கு கொடுத்து விட வேண்டும். நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் உற்பத்தியின் பலன்களை அனுபவிப்பது நிலப்பிரபுவாகத்தானே இருக்க முடியும்?

19-ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய வல்லரசுகள் ஆப்பிரிக்காவை பங்கு போட்ட போது ஜெர்மனிக்கு கிடைத்த துண்டுகளில் ருவான்டாவும் ஒன்று. ஏற்கனவே இராச்சியத்தின் பகுதிகள் பிரிட்டனுக்கும் (உகண்டா), பெல்ஜியத்திற்கும் (கொங்கோ) தாரை வார்க்கப்பட்டது பற்றியோ, தன் நாடு தற்போது ஜெர்மன் ஏகாதிபத்தியத்திற்குள் அடங்குகின்றது என்பதையோ ருவான்டா மன்னன் அறிந்திருக்கவில்லை. இருப்பினும் தான்சானியாவில் இருந்து ருவான்டா விவகாரங்களை கவனித்துக் கொண்ட ஜெர்மன் ஆளுநர் அரசாட்சியில் தலையிடவில்லை. முதலாம் உலக யுத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெர்மனியை தோற்கடித்த பெல்ஜியம், ருவான்டாவை தனது காலனியாக்கியது. 'பெல்ஜியத்தால் பாதுகாக்கப்படும் பிரதேசம்' என்று ஐ.நா. மன்றத்தின் முன்னோடியான உலக மக்கள் பேரவை தீர்மானித்தது. காலனிக்கும், பாதுகாப்புப் பிரதேசத்திற்கும் இடையில் அதிக வித்தியாசம் இருக்கவில்லை. பெல்ஜியம் தனது முப்பது ஆண்டு காலனிய ஆட்சிக்காலத்தில் ஐரோப்பியமயப்பட்ட கல்வியையும், நிர்வாகத்தையும் அறிமுகப்படுத்தியது. அப்போது தான் இனவாதக் கருத்துகள் துட்சி, ஹூட்டு இன மக்கள் மத்தியில் விதைக்கப்பட்டன.

துட்சி நிலப்பிரபுக்களின் அதிகாரம் செலுத்தும் திறமையை கண்டு வியந்த ஐரோப்பியர்கள், துட்சிகள் 'சாதாரண ஆப்பிரிக்கர்களாக' இருக்க முடியாது என முடிவு செய்தனர். அந்த எண்ணத்தில் உதித்தது தான் இன்றைய இனவாதக் கோட்பாடுகள். பாப்பரசரின் பிரதிநிதியான வணக்கத்திற்குரிய 'லெயோன் கிளாஸ்', மிஷனரி பாடசாலைகள் மூலம் இனவாதக் கருத்துகளையும் போதித்து வந்தார். ஆரம்ப காலங்களில் துட்சி இனப் பிள்ளைகளுக்கு மட்டுமே ஐரோப்பிய பாணி கல்வி போதிக்கப்பட்டது. 'துட்சிகள் ஆளப் பிறந்தவர்கள்', 'இனரீதியாக ஹூட்டுக்களை விட சிறந்தவர்கள்' போன்ற இனவாதக் கருத்துகள் பாடசாலை சென்ற பிஞ்சு மனங்களில் விதைக்கப்பட்டன. புதிய மத்தியதர வர்க்கமாக உருவாகிய கல்வி கற்ற துட்சிகளே அரச கருமங்களை முன்னெடுக்கவும், மாவட்டங்களாக பிரிக்கப்பட்ட புதிய நிர்வாக அலகுகளில் அதிகாரிகளாகவும் நாடு முழுவதும் நியமிக்கப்பட்டனர். அதே நேரம், இன்னொரு பக்கத்தில் பெல்ஜியர்கள் சிறிய அளவு ஹூட்டு நடுத்தர வர்க்கத்தையும் உருவாக்கத் தவறவில்லை. இருப்பினும் ருவான்டா சுதந்திரம் பெற்ற நேரத்தில் பெரும்பாலான அரச பதவிகளில் துட்சிகளே வீற்றிருந்தனர்.

1958-இல் எடுத்த கணக்கெடுப்பின் படி மொத்த சனத்தொகையில் 14 வீதமான துட்சிகள், பல்கலைக்கழகங்களில் மூன்றில் இரண்டு பங்கு மாணவர்களாக இருந்தனர். சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த பொதுத் தேர்தலில் பெரும்பான்மை ஹூட்டு மக்களின் வாக்குகளால் வெற்றி பெற்ற அரசாங்கம் தரப்படுத்தலை கொண்டு வந்து இனப் பிரச்சினைக்கு வழி சமைத்தது. மெல்ல மெல்ல அதிகாரம் துட்சிகளின் கைகளில் இருந்து பறிக்கப்பட்டது. பேரினவாத அரசாங்கம் ஹூட்டுகளுக்கு அதிக சலுகைகள் வழங்கி, பெரும்பான்மை வாக்கு வங்கியை தக்கவைத்துக் கொண்டது. துட்சியினத்தைப் பிரதிநிதித்துவப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்தும் கட்சிகள், இனப்பிரச்சினையை தீர்க்குமாறு அரசுடன் பேச்சுவார்த்தை நடத்துவதும், ஹூட்டு இனவாத சக்திகளின் எதிர்ப்புக் காரணமாக ஒப்பந்தங்களை முறிப்பதும் நடந்தேறின. ஒவ்வொரு தடவையும் துட்சிகள் அஹிம்சா வழியில் எதிர்ப்புக் காட்டிய போதெல்லாம் இனக்கலவரங்கள் தூண்டி விடப்பட்டன. இதனால் பெருமளவு துட்சி மக்கள் அகதிகளாக அயல் நாடுகளில் புகலிடம் கோரினர். துட்சிகள் ஆயுதமேந்திய போராட்டத்தின் மூலமே தமது உரிமைகளைப் பெற முடியும் என இளைஞர்கள் நம்பினார். ஹூட்டு பேரினவாத அரசிற்கெதிராக ஆரம்பிக்கப்பட்ட துட்சி விடுதலை இயக்கம் (RPF) கொரில்லாத் தாக்குதல்களை நடத்தியது. இதையெல்லாம் எங்கேயோ கேட்ட மாதிரி இல்லையா? ஆமாம், ருவான்டா-இலங்கை, துட்சிகள் - தமிழர்கள், ஹூட்டுகள் - சிங்களவர்கள், பெல்ஜியம் - பிரிட்டன், இந்தச் சொற்களை மாற்றிப் போட்டுப் பாருங்கள். வரலாறு ஒரே மாதிரித் தோன்றும்.

1994-ஆம் ஆண்டு துட்சியின மக்கள் வகைதொகையின்றி கொன்று குவிக்கப்பட்டாலும், துட்சிகளின் விடுதலைப்படையான கிகஊ கொரில்லாக்களின் முன்னேற்றத்தை தடுத்து நிறுத்த முடியவில்லை. தலைநகர் கிகாலியை கிளர்ச்சிப்படை கைப்பற்றியதும், ஹூட்டு மக்களும் அரச படையினரும் கொங்கோவிற்குள் புகலிடம் கோரினர். இதனால் யுத்தம் அயல்நாடான கொங்கோவிற்கும் பரவியது. கிகஊ இயக்கத்தில் துட்சி இன மேலாண்மைக் கருத்துகளை கொண்ட போல் ககாமே போன்ற தலைவர்களின் ஆதிக்கம் நிலவுகின்றது. அதுவே புதிய அரசின் கொள்கையை தீர்மானிக்கின்றது. இன அழிப்புக் குற்றத்தில் ஈடுபட்ட மாஜி இராணுவ வீரர்களைத் தேடுவதாக காரணம் காட்டி இரண்டு தடவை ருவான்டாவின் புதிய (துட்சி) இராணுவம் கொங்கோவிற்குள் படையெடுத்தது. அது சர்வதேச கண்டனங்களையும் தோற்றுவித்தது. இருப்பினும் பலமான அமெரிக்க வல்லரசின் ஆதரவு காரணமாக கொங்கோவில் நிலை கொண்டிருந்த ஐ.நா.சமாதானப் படை சும்மா வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. (ஐ.நா. படை அதிகாரிகள் துட்சி இராணுவத்துடன் ஒத்துழைத்தாக குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.)

'பெரும்பான்மை ஹூட்டு இன மக்கள் கொங்கோ அகதி முகாம்களில் வசித்துக் கொண்டிருக்கையில், ருவான்டாவில் தங்கி விட்ட சிறுபான்மை துட்சிகளை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RPF அரசாங்கம் நீதி நெறிமுறைக்கு உட்பட்டதா?' என்ற கேள்வி சர்வதேச அரங்கில் முன் வைக்கப்பட்டது. ஆனால் சிறுபான்மையினரின் அரசாங்கம் கடந்த பத்தாண்டுகளாக நிலைத்து நிற்பதுடன், சர்வதேச அங்கீகாரத்தையும் பெற்றுள்ளது. சில ஆண்டுகளுக்குப் பின்னர், கணிசமான அளவு ஹூட்டுகள் தயக்கத்துடன் தாயகம் திரும்பினர். RPF-ம் இன அழிப்பில் ஈடுபட்டது என்பதும், துட்சி ஆயுததாரிகள் ஹூட்டு மக்களை கொன்றுள்ளனர் என்ற குற்றச்சாட்டும் மறுக்க முடியாத உண்மைகள். ருவான்டாவில் துட்சியின ஆதிக்கம் நிலைநாட்டப்பட்ட பின்னர் RPF அரசிற்கு ஹூட்டுகளை வேட்டையாட வேண்டிய தேவை இருக்கவில்லை. ஜனாதிபதி போல் ககாமேயின் கவனம் பின்னர் தனது இனத்திற்குள் இருக்கும் எதிரிகளை நோக்கி திரும்பியது. 'இன அழிப்பில் ஈடுபட்ட கொலைகாரர்கள்' என்பதுதான் தீர்த்துக் கட்டப்படும் அனைத்து எதிரிகள் மீதும் வைக்கப்படும் குற்றச்சாட்டு. கொங்கோவைத் தளமாகக் கொண்ட ஹூட்டுகளின் புதிய கொரில்லா இயக்கம் ஒன்று அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருவதாக அண்மைக்காலமாக கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நவீன ருவான்டாவின் வரலாற்றில் ஏகாதிபத்திய தலையீடு பல்வேறு நோக்கங்களுக்காக வெளிப்பட்டுள்ளது. இதற்காக ஏகாதிபத்தியம் தனது பிரஜைகளின் உயிரையும், தேசத்தின் நன்மதிப்பையும் கூட விலையாக கொடுத்துள்ளது. காலனிய ஆதிக்கம் காலாவதியாகி, நவ-காலனிய காலகட்டம் ஆரம்பித்த நேரம், பெல்ஜியம் ருவான்டாவை பிரான்சிற்கு தத்துக் கொடுத்து விட்டிருந்தது. அந்நியக் கடன் வழங்குவதில் முதன்மையான நாடான பிரான்சின் வற்புறுத்தலுக்கு இணங்கித்தான் ருவான்டாவின் ஹூட்டு அரசும், RPF இயக்கமும் பேச்சுவார்த்தைக்கு உடன்பட்டன. சமாதானத்தை நிலைநாட்ட ஐ.நா. சமாதானப்படை (MINUAR) வந்தது. ஒப்பந்தம் மீறப்பட்டு மீண்டும் யுத்தம் மூண்ட பின்னர், ஜனாதிபதி ஹபியாரிமனா கொல்லப்பட்டதற்கு பழிவாங்கும் முகமாக, ஐ.நா. சமாதானப்படையில் பணியாற்றிய பத்து பெல்ஜிய வீரர்கள் ஹூட்டு தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர். இந்த சம்பவத்திற்குப் பிறகு ஐ.நா. படைகள் முற்றாக விலக்கிக் கொள்ளப்பட்டன.

இனப் படுகொலைக்கு தலைமை தாங்கிய ஹூட்டு துணைப்படையான Interahamwe-க்கு பிரான்ஸ் இராணுவப் பயிற்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கி வந்தது. இதனால் 'பிரான்சிற்கும் இன அழிப்பில் பங்குண்டு' என்ற குற்றச்சாட்டை இன்றைய ருவான்டா (துட்சி) அரசு பன்னாட்டு ஊடகவியலாளரின் முன்னால் (டிசம்பர் 2008) சமர்ப்பித்தது. அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள காலஞ்சென்ற பிரெஞ்சு ஜனாதிபதி மித்தரோன் உட்பட பல பெரிய தலைகள் இன அழிப்பு குற்றத்திற்காக சர்வதேச நீதிமன்றத்திற்கு முன்னால் நிறுத்தப்படுவது சாத்தியமானதல்ல. இருப்பினும் இஸ்ரேலைப் போல ருவான்டாவும் அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாகி வருவதை இது எடுத்துக் காட்டுகின்றது.

மத்திய ஆப்பிரிக்காவில் இன்னொரு இஸ்ரேலை உருவாக்குவதுதான் அமெரிக்காவின் நோக்கமும். இஸ்ரேல் 'யூத இனப்படுகொலையை தேசிய அரசியல் சித்தாந்தமாக' கடைப்பிடிப்பதைப் போல, இன்றைய ருவான்டாவில் துட்சி இனப்படுகொலை பற்றிய நினைவுகூரல் தவிர்க்கவியலாத அம்சமாகி விட்டது. இனப்படுகொலைக்கு பலியானவர்களின் ஞாபகச் சின்னங்கள் பற்றி ஒவ்வொரு பிரஜையும் அறிந்திருக்க வேண்டும். ருவான்டாவும் இஸ்ரேலைப் போலவே சர்வதேசக் கண்டனங்களைப் பொருட்படுத்தாது அயல்நாடுகள் மீது படையெடுக்க முடிகிறது. கொங்கோவில் கபிலாவின் தேசியவாத அரசு, சீனாவுடன் வர்த்தக ஒப்பந்தங்களை போட்ட கையோடு, கிழக்கெல்லையில் படையெடுத்த ருவான்டா இராணுவத்துடன் நீண்ட போருக்கு செல்ல வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. பேரழிவை ஏற்படுத்திய யுத்தம் கொங்கோவை அமெரிக்காவின் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட வைத்தது. அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் ருவான்டா இராணுவத்தை, ஆப்பிரிக்காவின் தலைசிறந்த நவீன இராணுவமாக்க பாடுபடுகின்றனர். வருங்காலத்தில் ஒரு குட்டி நாடான ருவான்டா, தன்னை சுற்றியிருக்கும் பலவீனமான பெரிய நாடுகளை பயமுறுத்தப் போகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 7. அகில ஆப்பிரிக்க ஆட்சிக் கவிழ்ப்பு நிறுவனம் (LTD)

மொ மாரிஷியஸ் தீவு பற்றி தமிழர்கள் அறிந்திருக்கும் அளவிற்கு, அதைவிட பன்மடங்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த 'கொமொரோ' (Comoros) தீவுகள் பற்றி அறிந்திருக்க வாய்ப்பில்லை. கிழக்கு ஆப்பிரிக்க கடலில், ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து மாபெரும் மடகஸ்கார் தீவை பிரிக்கும் மொசாம்பிக் நீரிணையின் மத்தியில் அமைந்துள்ள நான்கு சிறு தீவுகள் சேர்ந்து கொமொரோஸ் குடியரசு உருவானது. உலக வரைபடத்தில் பூதக்'கண்ணாடி வைத்துப் பார்க்க வேண்டிய குட்டி தேசம். பிரான்சின் நவ-காலனியக் கொள்கையின் கேலிச்சித்திரம். வெள்ளையின கூலிப்படைகளின் (இன்று: 'தனியார் இராணுவம்') விளையாட்டு மைதானம். கற்பனைக்கெட்டாத திகில் கதைகள் பலவற்றைக் கொண்டது அந்த தேசத்தின் வரலாறு.

கொமோரோ தீவுகளை 'இருண்ட ஆப்பிரிக்காவை' சேர்ந்த பகுதியாக கருதுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை. நீண்ட காலமாகவே இந்துமகா சமுத்திர வர்த்தகத்தில் ஈடுபட்ட அரேபிய வியாபாரிகள், கொமோரோ தீவுகளில் தங்கிச் செல்வது வழக்கம். அவர்கள் ஏற்கெனவே அங்கே வசித்து வந்த உள்ளூர் கருப்பின, மலேய (அல்லது இந்தோனேசிய) மக்களுடன் கலந்திருக்க வாய்ப்புண்டு. அரேபியர்கள் இஸ்லாமிய மதத்தையும் தம்மோடு கொண்டு வர மறக்கவில்லை. இருப்பினும், 19-ஆம் நூற்றாண்டளவில் தென் ஈரான் நகரான ஷிராசில் இருந்து பெருமளவு அரேபியர்கள் நிரந்தரமாகக் குடியேறிய பின்னரே நவீன வரலாறு (மன்னராட்சிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலம்) ஆரம்பமாகியது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், ஆங்கிலேயருடன் போட்டி போட்டுக் கொண்டு இந்துமகா சமுத்திர பிராந்தியத்தில் ஆதிக்கம் செலுத்திய பிரான்சின் மேலாண்மையை ஏற்றுக்கொள்ள வேண்டி இருந்த நிர்ப்பந்தம், காலனிய காலகட்டத்தைக் கட்டியம் கூறியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும் காலனிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெற வேண்டும் என்று ஐ.நா. மன்றம் கூறி வந்த போதிலும், பிரான்ஸ் அதற்கு செவி மடுக்கவில்லை. 1975-ஆம் ஆண்டு, அரை மனதுடன் கொமோரசிற்கு சுதந்திரம் வழங்கியது. அப்போது கூட மயோத் (Mayotte) தீவு மக்கள் சர்வசன வாக்கெடுப்பில் பிரான்சுடன் சேர்ந்திருக்க விரும்புகிறார்கள் என்று காரணம் காட்டி, அந்தத் தீவை தனியாகப் பிரித்து தனது 'கடல் கடந்த பிரதேசம்' ஆக்கியது. (இவ்வாண்டு மீண்டும் ஒரு தேர்தல் மூலம் பிரான்சின் மாகாணமாகியது.) சுதந்திர கொமோரோ குடியரசு மயோத் தீவுக்கு உரிமை கோரிய போதிலும், கேந்திர முக்கியத்துவம் காரணமாக பிரான்சு விட்டுக்கொடுக்க மறுத்து வருகின்றது. மொசாம்பிக் நீரிணை ஊடான வர்த்தக கப்பல் போக்குவரத்தை கண்காணிப்பதும் (அல்லாவிட்டால் மடகஸ்காரை சுற்றிப் போக வேண்டும்), கட்டுப்படுத்துவதும் மயோத்தில் உள்ள பிரெஞ்சு தளங்களின் முக்கிய நோக்கம். அதைவிட அந்தப் பிராந்தியத்தில் ஈரான் இலகுவாக (தொப்புள்கொடி உறவைக் காரணமாகக் காட்டி) ஊடுருவ முடியும் என்பதால், அதனை தடுக்கும் நோக்கமும் உள்ளது. கொமோரோ, சான்சிபார் (தான்சானியா) ஆகிய தீவுகளில் குறிப்பிடத்தக்க அளவு ஈரானிய வம்சாவழியினர் இன்றும் வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது.

மயோத் தீவு மக்கள், அரசியல் நிர்ணய சட்டப்படி பிரெஞ்சுப் பிரஜைகள் என்பதால், அங்கே தனிநபர் வருமானம் அதிகம். இதனால் அயலில் இருக்கும் ஏழை நாடான கொமோரோவை சேர்ந்த கர்ப்பிணிப் பெண்கள் மயோத் சென்று குழந்தைகளை பெற்றெடுக்க விரும்புகின்றனர். பிரெஞ்சு மண்ணில் பிறக்கும் குழந்தைக்கு பிரெஞ்சு பிரஜாவுரிமை கிடைக்கும் என்பதற்காக ஆபத்தான கடற்பயணத்தை மேற்கொள்ளும் பல கர்ப்பிணிப் பெண்கள் அகால மரணமடைகின்றனர். இதற்கிடையே 1997-ஆம் ஆண்டு, உலக வரலாற்றில் முன்னெப்போதும் நடக்காத அதிசயம் நிகழ்ந்தது. அதுவரை கொமோரோ குடியரசின் பகுதியாக இருந்த 'அஞ்சுவான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவு' தனி நாடாகப் பிரகடனம் செய்தது. அத்தோடு நில்லாமல் 'மீண்டும் பிரெஞ்சுக் காலனியாக' மாற விருப்பம் தெரிவித்தது! உலகமயமாக்கப் பட்ட காலத்தில் பிரான்சு இந்தக் கூத்தை எல்லாம் மெச்சும் நிலையில் இருக்கவில்லை. பிரான்சால் கைவிடப்பட்ட அஞ்சுவான் மீது 2008-ஆம் ஆண்டு ஆப்பிரிக்க ஒன்றியப் படைகள் படையெடுத்து, மீண்டும் கொமொரோசுடன் சேர்த்து விட்டன. இந்த நிகழ்வு, ஆப்பிரிக்காவில் ஐரோப்பிய காலனிய எஜமானர்களின் பிடி தளர்ந்து வருவதை எடுத்துக் காட்டுகின்றது.

கொமொரோஸ் குடியரசின் வரலாற்றில் 1975-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரையிலான காலகட்டம் குறிப்பிடத்தக்கது. இந்த இடைப்பட்ட காலத்தில் நவ-காலனிய மேலாண்மைக்காக பிரான்சால் பல முறை பந்தாடப்பட்டது. ஆனால் பிரான்சு இதில் நேரடியாக சம்பந்தப்படவில்லை. அதற்குப் பதிலாக 'சதிப்புரட்சி மன்னன்,' பொப் டெநர்ட் (Bob Denard) தலைமையிலான கூலிப்படையை பயன்படுத்தியது. இயற்கையிலேயே கம்யூனிச எதிர்ப்புவாதியும், பணத்திற்காக எதையும் செய்யத் தயங்காத Bob Denard-இன் ஒரேயொரு தொழில் ஆப்பிரிக்க நாடுகளின் ஆட்சிகளைக் கவிழ்ப்பது! கொங்கோ, பெனின்.. இவ்வாறு பல ஆப்பிரிக்க நாடுகளில் இடம்பெற்ற 20-க்கும் அதிகமான ஆட்சிக்கவிழ்ப்பு நடவடிக்கைகளில் Bob Denard-இன் கூலிப்படையினர் ஈடுபட்டுள்ளனர். பெரும்பாலும் பணத்திற்காகவே சண்டையிட்ட போதிலும், பிரெஞ்சு அரசின் விசுவாசமான அடியாளாக செயற்பட்டதையும் யாரும் மறுக்க முடியாது.

DGSE (Direction Générale de la Sécurité Extérieure) என்ற பிரெஞ்சு வெளிநாட்டு புலனாய்வுத் துறை (பிரெஞ்சு சி.ஐ.ஏ.), Bob Denard உடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தது. இரண்டு முறை கொலைக் குற்றச்சாட்டில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட போது, அவனே இதனைத் தெரிவித்துள்ளான். தான் பிரெஞ்சு அரசின் உத்தரவின் பேரில் சதிப்புரட்சிகளில் ஈடுபட்டதாக வாக்குமூலம் கொடுத்துள்ளான். இந்த இரகசிய உறவை மெய்ப்பிப்பது போல எதிர்த் தரப்பிற்கு வழக்கை வாபஸ் வாங்குமாறு மேலிடத்து நிர்ப்பந்தங்கள் வந்தன. Bob பின் தண்டனைக் காலம் குறைக்கப்பட்டது. 1989-இல் கொமொரோஸ் ஜனாதிபதி அஹ்மத் அப்துல்லாவை கொலை செய்த குற்றச்சாட்டு காரணமாகவே அவன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டான். இது பெரும்பாலும் உண்மையாக இருக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாத்தியமுண்டு. பொப் டெநர்ட் பத்து ஆண்டுகளாக கொமோரோ தீவுகளை தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருந்தான். அவன் தலைமையிலான 'சிறப்புப் பாதுகாப்புப் படை', தேசத்தை மட்டுமல்ல ஜனாதிபதியையும் ஆட்டிப் படைத்தது. தனது தேசத்தை பணயம் வைத்திருந்த கூலிப்படையின் அதிகாரத்தை களைய முயன்ற போதுதான், கொமொரோஸ் ஜனாதிபதி கொலை செய்யப்பட்டார்.

சில நேரம் வரலாற்றில் நடக்கும் சுவாரஸ்யமான சம்பவங்கள், புனை கதைகளையும் மிஞ்சி விடும். 1975-ஆம் ஆண்டு ஒரு தலைப்பட்சமாக சுதந்திரப் பிரகடனம் செய்தது கொமொராஸ். நாட்டின் முதலாவது ஜனாதிபதியான அப்துல்லாவை ஆட்சியில் இருந்து அகற்றுவதற்காக, பொப் டெநர்ட்டின் கூலிப்படையினர் தென் ஆப்பிரிக்காவில் இருந்து படகுகளில் வந்திறங்கினர். தமக்குப் பிடித்த அலி சொய்லியிடம் ஆட்சியை ஒப்படைத்தனர். அந்த சதிப்புரட்சிக்கு பிரான்சின் மறைமுக ஆதரவு இருந்ததாக நம்பப்படுகின்றது. மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் அலி சொய்லி தேசியப் பொருளாதாரத்தை பாதுகாக்க முற்பட்ட போது, மீண்டுமொரு சதிப்புரட்சி நிகழ்ந்தது. இம்முறையும் 'அகில ஆப்பிரிக்க வெள்ளைக்கார தாதா' பொப் டெநர்ட் தனது அடியாட்படையுடன் வந்தான். அலி சொய்லியை கொன்று விட்டு, முன்னர் தன்னால் பதவியகற்றப்பட்ட அஹ்மத் அப்துல்லாவையே மீண்டும் ஜனாதிபதியாக்கினான். இம்முறை அப்துல்லாவின் ஆட்சி இஸ்லாமிய அடிப்படைவாதத்தை பிரதிபலித்தது. ஆனால் அதெல்லாம் பிரான்சிற்கு பிரச்சினையாக படவில்லை.

பிரெஞ்சு அரசால் செல்லமாக 'திரு. ஆப்பிரிக்கா' என்று அழைக்கப்பட்ட பொப் டெநர்ட்டின் பொற்காலம் அப்போது ஆரம்பமாகியது. கொமொரோசில் இஸ்லாமிய மத்தைதை தழுவி ஆறு மனைவிகளுடன், எட்டுப் பிள்ளைகளுடன் சொகுசு பங்களாவில் ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தீவின் பல வர்த்தக ஸ்தாபனங்களுக்கு ஏகபோக தொழிலதிபரானான். என்னதான் இருந்தாலும், பழைய குலத்தொழிலை கைவிட முடியுமா? கொமோரசை தளமாக பயன்படுத்தி, பல ஆப்பிரிக்கா நாடுகளுக்கு 'கூலிப்படை விநியோகம்' நடந்தது. இதற்கிடையே தென் ஆப்பிரிக்காவுடன் தரகு வியாபாரம் வேறு. அப்போது தென் ஆப்பிரிக்காவை சிறுபான்மை வெள்ளையின நிறவெறிக் கட்சி ஆட்சி செய்து வந்தது. அதனால் ஐ.நா. மன்றத்தினால் சர்வதேச பொருளாதாரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடை விதிக்கப்பட்டிருந்தது. அதற்காக பிரான்சும், பிற மேற்குலக நாடுகளும் நிறவெறி தென் ஆப்பிரிக்காவுடனான வர்த்தகத் தொடர்புகளை முறித்துக் கொள்ளவில்லை. ஐ.நா. மன்றத்தை ஏமாற்றி 'நம்ம ஆள்' பொப் டெநர்ட் ஆட்சி செய்த கொமொரோஸ் ஊடாக வர்த்தகம் தொடர்ந்து நடைபெற்று வந்தது.

பனிப்போர் உச்சகட்டத்தில் இருந்த காலம் அது. அதனால்தான் கொமோரோ தீவுகளில் கூலிப்படையினரின் அடாவடித்தனங்களை பிரான்சு கண்டுகொள்ளவில்லை. பிரான்சின் பொருளாதார நலன்களும் கவனிக்கப்பட வேண்டியவை. ஆயினும் சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர் சர்வதேச அரசியல் நிலைமை வேகமாக மாறியது. அந்தக் காலகட்டத்தில் 1989-ஆம் ஆண்டு எழுந்த முரண்பாடுகளால் பொப் டெநர்ட் கொமொரோஸ் ஜனாதிபதி அப்துல்லாவை கொலை செய்த தகவல் கிடைத்ததும், இன்னொரு சதிப்புரட்சிக்கான எச்சரிக்கை மணி பிரான்சில் எதிரொலித்தது. தீவில் திடீரென குதித்த பிரெஞ்சு பரசூட் துருப்பினர், பொப் டெநர்ட்டை கைது செய்து தாயகம் கொண்டு சென்றனர். அப்போது நடந்த வழக்கைப் பற்றி ஏற்கனவே குறிப்பிட்டுள்ளேன். ஆனால் ஆடிய கால்கள் சும்மா இருக்குமா? எந்த நாட்டிலாவது ஆட்சியை கவிழ்க்காவிட்டால் அவனுக்கு பொழுது போகாது. 1995-ஆம் ஆண்டு புதிதாக 33 கூலிப்படையினரை சேர்த்துக் கொண்டு, பொப் டெனார்ட் ஐந்தாவது தடவையாக கொமொரோஸ் மீது படையெடுத்தான். இம்முறை பிரான்சிற்கு போதும் போதும் என்றாகி விட்டது. நூற்றுக்கணக்கான பிரெஞ்சு இராணுவத்தினர் கொமொரோசில் இறக்கப்பட்டு கூலிப்படையினர் சுற்றிவளைக்கப்பட்டனர். சண்டையிடாமல் சரணடைந்த பொப் டெநர்ட் அதற்குப் பிறகு சாகும் வரை ஆப்பிரிக்கா பக்கம் தலைவைத்துப் படுக்கவில்லை.

இத்தோடு ஆப்பிரிக்காவை அச்சுறுத்தி வந்த ஆட்சிக்கவிழ்ப்பு பூதம் ஒழிந்தது என்று சுபம் போட முடியவில்லை. 2004-ஆம் ஆண்டு வந்த செய்தி ஒன்று, இப்போதும் ஐரோப்பியர்கள் சிலர் திடீர் சதிப்புரட்சி மூலம் ஆப்பிரிக்க நாடுகளை கைப்பற்றத் தயாராக இருப்பதைக் காட்டியது. சில ஐரோப்பிய நிறுவனங்களின் வர்த்தக நலன்களே இதற்கு காரணம். ஒருநாள், பிரிட்டிஷ் பத்திரிகைகளில் 3 வது அல்லது 4-வது பக்கத்தில், தீப்பெட்டி அளவில் அந்த செய்தி பிரசுரமாகி இருந்தது. 'இகுவடோரியல் கினியா' (Equatorial Guinea) என்ற மேற்கு ஆப்பிரிக்க நாட்டு அரசை சதிப்புரட்சி மூலம் அகற்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டம் தீட்டியதாக, சிம்பாப்வேயில் சைமன் மன் என்ற பிரிட்டிஷ் கூலிப்படை கேப்டனின் கைது பற்றிய செய்தி அது. சைமனுடன் சேர்ந்து சதித்திட்டம் தீட்டியதாக, (சைமனின் நீதிமன்ற வாக்குமூலப்படி) மாஜி பிரிட்டிஷ் பிரதமர் மார்க்கிரட் தச்சரின் 'அருந்தவப்' புதல்வன் மார்க் தச்சரும் தென் ஆப்பிரிக்காவில் வைத்து கைது செய்யப்பட்டார். உண்மையில் தென் ஆப்பிரிக்க உளவுத்துறை அவர்களை நீண்ட காலமாக கண்காணித்து வந்தது. இருப்பினும் கைது செய்யப்பட்டவர்கள் அப்பாவிகள் என்பது போல, 'இந்த (வெள்ளைப்) பூனையும் பால் குடிக்குமா?' என்று செய்தியை வெளியிட்டன பிரிட்டிஷ் 'நடுநிலை' பத்திரிகைகள். 'தனது மகன் ஜெயிலுக்கு போனால், தான் தற்கொலை செய்து கொள்வேன்' என்ற மார்க்கிரட் தச்சரின் வற்புறுத்தலின் பேரில் அவரது மகன் விடுதலை செய்யப்பாட்டார். தனது ஆட்சிக் காலத்தில் நூற்றுக்கணக்கான சமூக விடுதலைப் போராளிகளை ஜெயிலுக்கு அனுப்பி 'இரும்புப் பெண்மணி' என்று பெயரெடுத்த மார்க்கிரட் தச்சரின் 'தாயுள்ளம்', சொந்த மகன் ஜெயிலுக்கு போவதை தாங்கிக் கொள்ள முடியவில்லை.

இகுவடோரியல் கினியா சமீபத்தில் எண்ணெய் வளம் கண்டுபிடிக்கப்பட்ட நாடு. அந்த நாட்டின் அரசு ஒரு காலத்தில் சோஷலிச நாடாக திகழ்ந்ததுடன், கியூபாவுடனும் நல்லுறவைப் பேணி வந்தது. எண்ணெய் பொருளாதார ஆதிக்கம் தனது கையை விட்டு போகாத படி கம்பெனிகள் கேட்கும் அதிக பங்கு லாபத்திற்கு விட்டுக் கொடுக்க மறுத்து வந்தது. இதனால் கினியா எண்ணெய் மீது கண் வைத்த, மார்க் தச்சரின் பன்னாட்டு வர்த்தக நிறுவனம் குறுக்கு வழியை நாடியது. ஒரு கூலிப்படையை அனுப்பி இ. கினியா ஆட்சியை கவிழ்த்து விட்டு, தானே எண்ணெய் கிணறுகளை முழுவதுமாக அபகரிக்கும் அவர்களது நோக்கம் ஈடேறவில்லை. மார்க் போன்ற வர்த்தகர்கள் இது போன்ற தீய வழிகளில் தானே கோடீஸ்வரன் ஆனார்கள்? நம்மூரில் அடியாட்படை அனுப்பி சொத்துகளை அபகரிக்கும் வர்த்தகப் பெருந்தகைகளுக்கும், மார்க் தச்சரின் பன்னாட்டு நிறுவனத்திற்கும் இடையில் எந்த வித்தியாசமும் இல்லை. வர்த்தக நிறுவனங்களுக்காக ஒரு நாட்டையே பிடித்துக் கொடுக்கும் சர்வதேச கூலிப்படைகள், 'Executive Outcomes' என்ற கவர்ச்சிகரமான பெயர்களுடன் இப்போதும் தென் ஆப்பிரிக்காவில் இயங்கி வருகின்றன. அவர்களது குறிக்கோள் பணம் மட்டும் தான். பெருமைக்காக 'கம்யூனிச எதிர்ப்பு போராளிகள்' என்று தமக்கு தாமே புகழாரம் சூட்டிக் கொள்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2004-ஆம் ஆண்டு, சைமன் மன் 64 கூலிப்படையினருடன் தென் ஆப்பிரிக்காவில் இருந்து வாடகை விமானத்தை அமர்த்திக் கொண்டு சிம்பாப்வே போய் இறங்கிய போதே கைது செய்யப்பட்டனர். சிம்பாப்வேயில் ஆயுதங்களை வாங்கிக் கொண்டு இ.கினியா போவது அவர்களது நோக்கம். ஆப்பிரிக்க நாடுகள் என்றாலே ஊழல்மய அரசியல்வாதிகள், பணத்திற்காக எதுவும் செய்வார்கள் என்று கணக்குப் போட்ட 'மன்'னின் நினைப்பில் மண் விழுந்தது. விமானநிலையத்தில் வைத்தே கைது செய்யப்பட்டு, சட்டவிரோதமாக ஆயுதம் வாங்கவிருந்த குற்றச்சாட்டில் 7 ஆண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. 2007-ஆம் ஆண்டு இ.கினியா கேட்டுக்கொண்டதன்படி அந்நாட்டிற்கு நாடு கடத்த உத்தேசிக்கப்பட்டது. அப்போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்த டோனி பிளேர், சைமன் என்ற கிரிமினலை விடுதலை செய்யுமாறு சிம்பாப்வேயை கெஞ்சிக் கேட்டுக் கொண்டிருந்தார். பிரிட்டிஷ் சிறைகளில் வாடும் ஒரு குற்றமும் செய்யாத அப்பாவி அகதிகளை விடுதலை செய்ய மறுத்த டோனி பிளேர், கொலை பாதகச் செயலை செய்யும் கூலிப்படை கிரிமினலை விடுவிக்க கோரிய காரணம் என்ன? இனப்பாசம் என்பதைத் தவிர இதற்கு வேறென்ன பதில் இருக்க முடியும்?

ஆப்பிரிக்க நாடுகளின் ஆட்சியை கவிழ்க்கும் காரியத்தை, பெருந்தொகை பணத்திற்கு ஒப்பந்தம் பேசி செய்து முடிக்கும் கூலிப்படைகள், ஒ...மன்னிக்கவும் 'தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள்' தென் ஆப்பிரிக்கா, பிரிட்டன் அமெரிக்கா ஆகிய நாடுகளில் இப்போதும் சட்டபூர்வமாக இயங்கி வருகின்றன. இவைகளை யார் வேண்டுமானாலும் கூலிக்கு அமர்த்திக் கொண்டு தமக்குப் பிடித்த ஆப்பிரிக்க, ஆசிய நாட்டு அதிகாரத்தை சதிப்புரட்சி மூலம் கைப்பற்றலாம். அவர்கள் கேட்கும் விலையைக் கொடுத்தால் சரி. ஏதாவதொரு (ஆப்பிரிக்க) நாட்டில் கூலிப்படையினர் நடவடிக்கையில் ஈடுபடும் போது, சில நேரம் வியாபாரத்தில் பங்கும் கிடைக்கின்றது. ஒருமுறை கிக்ஊ கொரில்லாக்களை அடக்குவதற்காக சியாரா லியோன் அரசு கூலிப்படையினரை அமர்த்தியது. அப்போது கூலிப்படையினர் தலைநகரை பாதுகாப்பதை விட வைரச் சுரங்கங்களைப் பாதுகாப்பதை பெரிதும் விரும்பினர். சுரங்கங்களில் உள்ளூர் மக்களை கட்டாய வேலை வாங்கியதிலும், கொள்ளையடித்த வைரங்களை கடத்தி சென்று விற்று இலாபமீட்டியதிலும் கூலிப்படையினருக்கும் பங்குண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநேகமாக எல்லா கூலிப்படைகளும் வெள்ளையினத்தவர் நிர்வாகத்தின் கீழ் தான் இயங்குகின்றன. மேலதிகாரிகள் எப்போதும் வெளையர்கள் தான். அவர்களின் கீழ் கூலிக்கு அமர்த்தப்படும் போர்வீரர்கள் அநேகமாக கருப்பர்களாக இருப்பர். இதனால் கூலிப்படை புகுந்த நாடுகளில் மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் போதெல்லாம், அதனை 'கருப்பர்கள் மீது கருப்பர்களின் வன்முறை' என்று சில மேற்கத்திய ஊடகங்கள் சித்தரிக்கின்றன. ஒரு காலத்தில் நிறவெறி தென் ஆப்பிரிக்கா, நமீபியாவை ஆக்கிரமித்திருந்த போது நடந்த இனப்படுகொலைகள் இதற்கு குறிப்பிடத்தக்க உதாரணம். நமீபிய மக்களைக் கொலை செய்ததிலும், அவர்களின் சொத்துகளை அழித்த போர்க் குற்றங்களிலும் அன்று தென் ஆப்பிரிக்க கூலிப்படையில் பணியாற்றிய கருப்பர்களும் ஈடுபட்டதை மறுப்பதற்கில்லை. இருப்பினும் மேற்கத்திய ஊடகங்கள் குள்ளபுத்தியுடன் 'கருப்பர்களின் அத்துமீறல்களை' மட்டும் பெரிதுபடுத்தி 'செய்தி போல' தெரிவிக்கின்றன. இதனை செய்தி என்று சொல்ல முடியாது. 'தவறான தகவல் வழங்கும் ஊடகப் பிரச்சாரம்' என்றே கூற வேண்டும். மேற்கத்திய நாடுகளில் இந்த தவறான தகவல்கள் செலுத்தும் தாக்கம், மக்களின் சிந்தனையை கறைபடுத்துகின்றது. மேலைத்தேய வெள்ளையின மக்கள்: 'ஆப்பிரிக்க நாடுகளை சேர்ந்த விவேகமற்ற கருப்பர்கள், அவர்களுக்குள்ளே அடிபட்டுச் சாகிறார்கள். கருப்பர்களுக்கிடையே ஒற்றுமையில்லை. எமக்கென்ன வந்தது?' என நினைக்கின்றனர். ஆப்பிரிக்காவில் மட்டுமல்ல, ஆசிய கண்டத்திலும் பகைமை கொண்ட இரு இனங்கள் உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபடும் போதும் ஐரோப்பிய மக்கள் அப்படித்தான் கருதுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 8. கருப்பினப் பேரழகியின் கிறிஸ்தவ சாம்ராஜ்யம்

ஆப்பிரிக்க கண்டத்தில், எந்தவொரு ஐரோப்பிய வல்லரசாலும் காலனியாக்கப்படாத ஒரேயொரு நாடு எத்தியோப்பியா. 1896-ஆம் ஆண்டு காலனிய விஸ்தரிப்புக்காக இத்தாலி நடத்திய போரில், எத்தியோப்பியப் படைகளிடம் அவமானகரமான தோல்வியைச் சந்தித்தது. துப்பாக்கிகள், பீரங்கிகள் போன்ற நவீன ஆயுதங்களை ஏந்தியிருந்த இத்தாலி இராணுவம், வாள், அம்பு-வில், போன்ற புராதன கருவிகள் ஏந்திப் போரிட்ட எத்தியோப்பியர்களிடம் தோல்வியுற்றது என்று சொன்னால் நம்ப முடிகிறதா? ஆனால் இந்த சரித்திர உண்மையை நம்பித்தான் ஆக வேண்டும். இப்போதே உங்களால் நம்ப முடியவில்லை என்றால், அன்று இந்த செய்தி ஐரோப்பாவில் எத்தகைய அதிர்வலைகளை தோற்றுவித்திருக்கும்? ஐரோப்பியர்கள் அந்த காலனியப் போருக்குப் பிறகுதான், 'எத்தியோப்பியா நாகரீகமடையாத காட்டுவாசிகளின் தலைவனால் ஆளப்படும் கிராமமல்ல.' என்ற உண்மையைப் புரிந்து கொண்டார்கள். எத்தியோப்பிய சக்கரவர்த்தி 'மெனலிக்', ஐரோப்பிய அரசர்களுக்கு நிகரானவராக மதிக்கப்பட்டார். போருக்குப் பின்னர், இத்தாலி எத்தியோப்பியாவுடன் சமாதான ஒப்பந்தம் செய்து கொண்டது. ஆனால் செங்கடல் ஓரமாக இருக்கும் எரித்திரியாப் பகுதிகளை மட்டும் தன் வசம் வைத்துக் கொண்டது. இருப்பினும் கடல் எல்லை பறி போனது எத்தியோப்பியாவிற்கு இழப்புதான். இத்தாலிய காலனிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகத்தின் கீழ் இருந்த எரித்திரியா பிற்காலத்தில் நீண்ட தேசிய விடுதலைப் போராட்டத்திற்கு வித்திட்டது. இது குறித்து பின்னர் பார்ப்போம்.

இத்தாலிய தேசியவாதிகளால் எத்தியோப்பிய தோல்வியை ஜீரணிக்க முடியவில்லை. பழிக்குப்பழி வாங்க வேண்டும் எனக் கறுவிக் கொண்டனர். இரண்டாம் உலகப்போர் தொடங்குவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்னர் இத்தாலியில் தேசியவாதிகள், இனவாதிகளின் ஆதரவுடன் பாசிச சர்வாதிகாரி முசோலினியின் ஆட்சி ஏற்பட்டது. முசோலினி பழிவாங்கும் படை நடவடிக்கையை எடுத்தார். இம்முறை இத்தாலியப் படைகள் எத்தியோப்பியாவை ஆக்கிரமித்தன. அந்த வெற்றி எவ்வாறு சாத்தியமாகியது? உலக வரலாற்றில் முதன் முதலாக போரில் விஷ வாயு பிரயோகிக்கப்பட்டது. இலட்சக்கணக்கான எத்தியோப்பிய மக்களை விஷ வாயு மூலம் கொன்று குவித்து, அந்தப் பிணங்களின் மீதுதான் இத்தாலி தனது ஆதிக்கத்தை நிலைநாட்டியது. மேற்குலக நாடுகள் தமது சரித்திர நூல்களில் மறைக்க விரும்பும் அத்தியாயம் அது. இத்தாலியின் ஆக்கிரமிப்பு அதிக காலம் நீடிக்கவில்லை. விரைவில் இரண்டாம் உலகப்போர் மூண்டு, இத்தாலி ஜெர்மனி பக்கம் சேர்ந்ததால் போரில் தோற்க வேண்டியேற்பட்டது. அப்போது வட ஆப்பிரிக்காவில் களமிறங்கிய பிரிட்டிஷ் படைகள் எரித்திரியாவையும், எத்தியோப்பியாவையும் விடுவித்தன. அப்போது ஒரு சுவையான சம்பவம் இடம்பெற்றது. பிரிட்டிஷ் படைகளை வரவேற்க வீதிகளில் எரித்திரிய மக்கள் குழுமியிருந்தனர். வீதியில் வெற்றிப்பவனி வந்த பிரிட்டிஷ் ஜெனரல் ஒருவரிடம், தம்மை விடுதலை செய்ததற்காக ஒரு எரித்திரியப் பெண்மணி நன்றி தெரிவித்தார். அப்போது அந்த ஜெனரல் இவ்வாறு பதிலளித்தார் : 'கருப்பியே! நான் உன்னை விடுதலை செய்வதற்காக இங்கே வரவில்லை!!'

உலகப்போருக்குப் பின்னர் முன்னாள் இத்தாலிய காலனியான எரித்திரியா, மீண்டும் எத்தியோப்பியாவிடம் ஒப்படைக்கப்பட்டது. ஐ.நா. சபை எரித்திரியா தனியான நாடாக இருக்க உரிமை உண்டு என கூறியது. அது நடைமுறைச் சாத்தியமாகாததற்கு, பின்னணியில் பிரிட்டிஷ் அழுத்தம் காரணமாக இருந்திருக்கலாம். 50 ஆண்டு கால காலனிய கலாச்சாரம், ஒன்பது மொழிகள் பேசும் எரித்திரிய மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியில் பொதுவான தேசியத்தை உருவாக்கியது. அந்த உணர்வாலேயே பிற எத்தியோப்பியர்களிடமிருந்து தாம் சிறந்தவர்களாக கருதிக் கொண்டனர். உலகில் பல்வேறு தேசிய விடுதலைப் போராட்டங்கள், ஒரு குறிப்பிட்ட இனத்தை, மொழியை, மதத்தை அடிப்படையாக கொண்டு நடப்பது பலருக்கு தெரியும். ஆனால் முன்னாள் காலனிய பிரதேசம் ஒன்றுக்கு சுயநிர்ணய உரிமை என்று சொல்கிறது ஐ.நா .மன்றம். அது எப்படி? இங்கே தான் 'தேசியம் என்றால் என்ன?' என்று மேலைத்தேய நாடுகள் கொடுக்கும் விளக்கங்கள் நமது புரிதலில் இருந்து முற்றிலும் வேறுபடுகின்றது. மூன்றாம் உலக நாடுகளைப் பொறுத்தவரை, அன்றைய காலனிய நிர்வாகத்திற்குட்பட்ட பிரதேசம் மட்டுமே தேசியமாக அங்கீகரிக்கப்படுகின்றது.

ஐரோப்பிய நாடுகளில் தஞ்சம் கோரியுள்ள ஆயிரக்கணக்கான எத்தியோப்பிய, எரித்திரிய அகதிகள் ஒரே மொழி (அம்ஹாரி) பேசுவதை அவதானித்திருக்கிறேன். கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களை சேர்ந்தவர்கள் இரண்டு பக்கமும் இருந்தனர். இதனால் எரித்திரிய தேசிய விடுதலைப் போராட்டம் எந்த வேறுபாட்டை அடிப்படையாக கொண்டு நடந்தது என்பதை என்னால் ஊகிக்க முடியவில்லை. இறுதியில் எனது நண்பரான, முன்னை நாள் எரித்திரிய விடுதலைப் போராளி ஒருவரிடமிருந்து பல தகவல்கள் கிடைத்தன. தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பத்தில் இஸ்லாமிய Eritrean Liberation Front (ELF) இனால் முன்னெடுக்கப்பட்டது. மொத்த சனத்தொகையில் கணிசமான அளவு (50%) முஸ்லிம்கள் உள்ளனர். இதனால் லிபியா, சூடான் போன்ற நாடுகளும் ஆதரித்தன. உஃஹ இலிருந்து பிரிந்த Eritrean People's Liberation Front (EPLF) ஆரம்பத்தில் மார்க்சியம் பேசினாலும் அது ஒரு தேசியவாத இயக்கமாகவே இருந்தது. அம்ஹாரி, திக்ரின்யா, அரபு, அபார் ஆகிய மொழிகளை பேசும் பல்வேறு இனங்களையும் பிரதிநிதித்துவப் படுத்துகிறது. இதே மொழிகளைப் பேசும் மக்கள் எத்தியோப்பியாவிலும் வாழ்கிறார்கள். இருப்பினும் திக்ரின்யா மொழி பேசுபவர்கள் சற்று அதிகம் என்பதால், இன்றைய சுதந்திர எரித்திரியாவில் அதுவே ஆட்சி மொழி.

EPLF இயக்கம் அநேகமாக எந்தவொரு நாட்டிடம் இருந்தும் நிதியுதவி பெற்றதாகக் குறிப்புகள் இல்லை. எத்தியோப்பியாவுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைமை பாராட்டிய சோமாலியாவும், சூடானும் உதவி செய்த போதிலும் பெருமளவு நிதி புலம்பெயர்ந்த எரித்திரிய மக்களிடம் இருந்தே கிடைத்து வந்தது. கட்டுப்பாட்டுடன் ஒழுங்கமைக்கப்பட்ட கொரில்லாக்கள், அமெரிக்க உதவி பெற்ற எத்தியோப்பிய மன்னரின் இராணுவத்தை தீரத்துடன் எதிர்த்து போராடி வந்தனர். 1974-ஆம் ஆண்டு மன்னராட்சி சதிப்புரட்சி மூலம் தூக்கி எறியப்பட்டு மார்க்சிச இராணுவ அதிகாரிகள் ஆட்சியமைத்தனர். அந்த நேரம் பார்த்து சோமாலியா எத்தியோப்பியா மீது படையெடுத்தது. எத்தியோப்பியாவின் கிழக்குப்பகுதி மாகாணத்தில் சோமாலி மொழி பேசும் மக்கள் வாழ்வது குறிப்பிடத்தக்கது. படையெடுப்பாளருக்கு அகண்ட சோமாலியா அமைக்கும் நோக்கம் இருந்திருக்கலாம். புதிய அரசு எவ்வளவு கேட்டும் அமெரிக்க உதவி வழங்க மறுத்ததால், சோவியத் யூனியனிடம் உதவி கோரியது. அதுவரை சோமாலியா பக்கம் நின்ற சோவியத் யூனியன், பூகோள அரசியல் நலன் கருதி எத்தியோப்பியாவிற்கு உதவ முன்வந்தது. உடனடியாக கியூபா வீரர்கள் தருவிக்கப்பட்டு, சோவியத் ஆயுதங்களை கொண்டு போரிட்டு சோமாலிய படையெடுப்பு முறியடிக்கப்பட்டது.

1974-ஆம் ஆண்டிலிருந்து, 1991-ம் ஆண்டு வரை எத்தியோப்பியாவை ஆண்ட மென்கிஸ்டு சோவியத் உதவி தாராளமாக கிடைத்து வந்ததால் சோஷலிச சீர்திருத்தங்களை முன்னெடுத்து வந்தாலும், அடக்குமுறையும், கொலைகளும் குறையவில்லை. சோவியத் யூனியனும், கியூபாவும் இது குறித்து தமது அதிருப்தியை தெரிவித்து வந்தாலும், மென்கிஸ்டு எல்லாவற்றையும் சோஷலிசத்தின் பெயரால் ஏமாற்றி வந்தார். எத்தியோப்பியாவின் பிற தேசிய இனங்களின் உரிமைகள் மறுக்கப்பட்டன. அம்ஹாரி தேசிய மொழியாகியது. எத்தியோப்பியாவின் கடைசி சக்கரவர்த்தி ஹைலெ செலாசி காலத்திலேயே 'அம்ஹாரி மொழி மேலாதிக்கம்' ஆரம்பமாகி விட்டது. அரசாங்க உத்தியோகம் பெற விரும்புவோர் அம்ஹாரி மொழி பேச வேண்டும் என்ற சட்டம் வந்தது. ஹைலெ செலாசியும், மென்கிஸ்டுவும் சிறுபான்மை இனங்களின் எதிர்ப்பியக்கத்தை கொடூரமாக அடக்கினார்கள். பட்டினிச் சாவுகள் ஒரு அடக்குமுறை ஆயுதமாகவே பயன்படுத்தப்பட்டது.

ஆப்பிரிக்கா என்றதும் உணவின்றி வாடும் குழந்தைகளும், பட்டினியால் செத்துக் கொண்டிருக்கும் மக்களும் ஞாபகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருமளவிற்கு எத்தியோப்பியாவின் பஞ்சக் காட்சிகளை தொலைக்காட்சிகள் உலகம் முழுவதும் ஒளிபரப்பின. இதனால் எத்தியோப்பியா மக்கள் முழுவதும் ஒரு காலத்தில் உணவின்றி பட்டினியால் செத்து மடிந்ததாக உலகம் நினைத்துக்கொண்டது. அந்த எண்ணம் தவறானது. மொத்த சனத்தொகைக்கும் உணவிட முடியாத அளவிற்கு வளமற்ற நாடல்ல அது. 2500 ஆண்டுகளுக்கு முன்னரே, குளங்களை வெட்டி, அணைகளை கட்டி, விவசாயப் பொருளாதாரத்தில் தன்னிறைவு பெற்ற நாடாக எத்தியோப்பியா விளங்கியது. 1973-ஆம் ஆண்டு திக்ரின்யா மொழி பேசும் மக்கள் வாழும் பிரதேசத்தில் பஞ்சம் ஏற்பட்டது. இலட்சக்கணக்கான மக்கள் மடிந்தனர். நிலைமையை பார்வையிட சென்ற ஊடகவியலாளர்கள் மன்னரின் ஆடம்பர வாழ்க்கைக்கும், எரித்திரியா மீதான போருக்கும் பெருந்தொகை பணம் செலவாவதை கண்டனர். திக்ரின்யா மக்கள் எரித்திரியாவை சேர்ந்த பிரதேசத்திலும் வாழ்வது குறிப்பிடத்தக்கது. உண்மையில் அந்த சிறுபான்மை மக்களின் போராட்டத்தை முறியடிக்கவே அரசு உணவுத்தடையை ஏற்படுத்தி, பஞ்சத்தை பட்டினிச் சாவுகளாக மாற்றி விட்டிருந்தது.

மன்னர் ஹைலெ செலாசியின் வீழ்ச்சிக்கு பஞ்சமும் ஒரு காரணம். சதிப்புரட்சியில் மன்னரை கொன்று, மாளிகையின் உள்ளேயே புதைத்த மெங்கிஸ்டுவின் குடியாட்சியிலும் அரசின் கொள்கை மாறவில்லை. 1984-85-ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட பஞ்சம் கூட அரசின் புறக்கணிப்பு காரணமாக உருவானதுதான். கிழக்கே சோமாலியா, வடக்கே எரித்திரியா, தெற்கே ஒரோமோ என்று அரசு மும்முனைகளில் போரில் ஈடுபட்டிருந்தது. அதற்காக பெருமளவு பணம் ஆயுதங்களை வாங்க செலவிடப்பட்டது. அதே நேரம் நாட்டின் சில பகுதிகளில் வறட்சி நிலவியது. வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகள் யாவும் சிறுபான்மை இனங்களின் வாழ்விடங்கள் என்பது குறிப்பிடத்தக்கது. உள்நாட்டுப் போர்கள் காரணமாக மக்களின் இடப்பெயர்வு நிலைமையை மோசமாக்கியது. தன்னை எதிர்த்துப் போரிட்ட சிறுபான்மை இன மக்கள் மடிவதைப் பற்றி அரசும் அலட்டிக் கொள்ளவில்லை. இதனால் ஏற்பட்ட மனிதப் பேரவலத்தால், சர்வதேச தொண்டு நிறுவனங்கள் தலையிட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டி ஏற்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தைத்தான் தொலைக்காட்சி காமெராக்கள் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுபான்மையின மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை அடக்குவதற்காக அரசு அவர்களை பட்டினிச் சாவிற்கு தள்ளிய கதையை எனக்கு கூறியவர் ஒரோமோ இனத்தவர் ஒருவர். அவரை நான் காங்கோ நாட்டு நண்பரின் வீட்டு விருந்தின் போது சந்தித்தேன். நான் வழக்கமாக அவர் எந்த நாட்டை சேர்ந்தவர் என்று கேட்டதற்கு, 'ஒரோமியா' என்று பதிலளித்தார். உலக வரைபடத்தில் அப்படி ஒரு நாடு இருப்பதாக எனக்கு தெரிந்திருக்கவில்லை. 'ஈழத் தமிழர்கள் ஈழம் என்ற தேசியத்தை அடையாளப்படுத்துவது போல, எத்தியோப்பியாவின் ஒரோமோ இனத்தை சேர்ந்த அவர் அப்படி தனது தேசியத்தை அடையாளப்படுத்துகிறார்.' என்று பின்னர் விளக்கம் கூறினார் எனது காங்கோ நண்பர். எத்தியோப்பியாவில் Oromo Liberation Front (OLF) என்ற இயக்கம் 'ஒரோமியா' என்ற தனி நாடு கோரிப் போராடி வருகின்றது. எத்தியோப்பியாவின் மொத்த சனத்தொகையில் ஒரோமியர்கள் 40%, அதாவது பெரும்பான்மை இனம். ஆனாலும் அவர்கள் சொத்துகளற்ற, அடக்கப்பட்ட இனமாகவே இருந்து வந்துள்ளனர். அம்ஹாரி, திக்ரின்யா மொழி பேசும் நிலச்சுவான்தார்கள் ஒரோமியரின் நிலங்களைப் பறித்து சொந்தம் கொண்டாடியதுடன், மண்ணின் மைந்தர்களை பண்ணையடிமைகளாக வேலை வாங்கினார்கள். எத்தியோப்பியாவில் 1974-ஆம் ஆண்டு ஏற்பட்ட சோஷலிச அரசாங்கம் கொண்டுவந்த நிலச்சீர்திருத்தத்தின் பின்னரே நிலைமை மாற்றமடைந்தது. நிலப்பிரபுக்கள் கைது செய்யப்பட்டு காணாமல் போயினர். அடிமைகள் விடுதலை செய்யப்பட்டனர். நிலமற்ற விவசாயிகளுக்கு நிலப்பிரபுக்களிடம் இருந்து அபகரிக்கப்பட்ட நிலங்கள் வழங்கப்பட்டன. அதற்குப் பின்னர்தான் ஒரோமோ மக்கள் தலைநிமிர்ந்தனர். இருப்பினும் அடக்கப்பட்ட ஒரோமோக்களின் எழுச்சியானது குறுந்தேசியவாதப் போராட்டமாகவே உள்ளது. ஏனெனில் முன்பு மேலாண்மை செய்த அம்ஹாரி, திக்ரின்யா மக்கள் தற்போது ஒரோமோ பகுதிகளுக்கு செல்ல அஞ்சுகின்றனர். அந்த அளவிற்கு இனரீதியான வெறுப்பு மேலோங்கி காணப்படுகின்றது.

எத்தியோப்பியாவின் வடக்கே இருக்கும் 'அக்சும்' என்ற இடத்தைத் தலைநகராகக் கொண்டுதான் பண்டைய எத்தியோப்பிய இராச்சியம் ஸ்தாபிக்கப்பட்டது. இராச்சியத்தை விரிவுபடுத்திய மெனலிக் மன்னன்தான் தெற்கே ஒரோமோக்களின் "Finfinne' என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடத்தில் 'அடிஸ் அபேபா' என்ற இன்றுள்ள தலைநகரத்தை உருவாக்கினான். சக்கரவர்த்தியின் தெற்கு நோக்கிய நில விஸ்தரிப்புக் காலத்தில் ஒரோமோ பிரதேசங்களை கைப்பற்றிய போர்வீரர்கள் தம்மால் முடிந்த அளவு கொள்ளையடித்து சென்றனர். தங்கம், யானைத்தந்தம் மற்றும் அகப்பட்ட மக்களை அடிமைகளாகவும் பிடித்துச் சென்றனர். அப்போதுதான் 'கோப்பி' (Coffie) என்ற புதிய பானம் உலகிற்கு அறிமுகமானது. கோப்பி எத்தியோப்பியாவில் இருந்துதான் உலகின் பிற பகுதிகளுக்கு பரவியது. கோப்பி ஏற்றுமதி இன்றும் எத்தியோப்பியாவிற்கு அதிக வருமானத்தை ஈட்டித் தருகின்றது. கோப்பி மட்டுமல்ல, சிறுவர்கள் மெல்லும் 'சூயிங் கம்' தயாரிக்க தேவையான மூலப்பொருள் எத்தியோப்பியாவில் வளரும் ஒரு வகை மரத்தில்தான் கிடைக்கிறது. இவ்வளவு பொருளாதார பலன்களையும் அம்ஹாரி நிலப்பிரபுக்களே அனுபவித்தனர். அதற்கு பிரதிபலனாக ஒரோமோ மக்களை அடிமைகளாக நடத்தினர். ஆளும் வர்க்கத்தை சேர்ந்தவர்கள் அனைவரும் அன்றும், இன்றும் பழமைவாத கிறிஸ்தவ மதத்தைச் சேர்ந்தவர்கள். இதனால் பல்லாயிரக்கணக்கான ஒரோமோ மக்கள் இன்று இசுலாமிய மதத்தைத் தழுவி தமது எதிர்ப்பைக் காட்டி வருகின்றனர். இந்தியாவில் மகாராஷ்டிரத்தில் தாழ்த்தப்பட்ட சாதி மக்கள் அம்பேத்கார் தலைமையில் பௌத்த மதத்தைத் தழுவியது போன்றதே அதுவும். இன்றைய எத்தியோப்பிய அரசு, ஒரோமோ இளைஞர்கள் இசுலாமிய அடிப்படைவாத தீவிர்வாதிகளாக மாறி வருவதாக குற்றஞ்சாட்டி வருகின்றது.

எத்தியோப்பியாவில் (கிரேக்க வழிபாட்டு முறையை பின்பற்றும்) பழமைவாத கிறிஸ்தவம் அரசமதமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அக்சும் நகரம் கிறிஸ்தவர்களுக்கு புனிதமான நகரம். அங்கே வேறு எந்த மத வழிபாட்டுத் ஸ்தலங்களும் நிறுவ அனுமதி கிடையாது. அக்சும் நகரில் UNESCO-வால் பாதுகாக்கப்படும், பாறைகளைக் குடைந்து கட்டப்பட்ட மாபெரும் தேவாலயம் ஒன்றுள்ளது. 'லல்லிபெல்லா தேவாலயம்' ஒரு உலக அதிசயம். மேலேயிருந்து பார்க்கும் போது சிலுவை போல தோன்றும் வடிவமைப்பில் கட்டப்பட்டுள்ளது. அக்சும் நகரில் உள்ள சியோன் தேவாலயத்தில் ஓரிடத்தில் ஆண்டாண்டு காலமாக கவனமாக பாதுகாக்கப்படும் இரகசியம் ஒன்றுள்ளது. ஆண்டவர் மோசெசிற்கு அருளிய பத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டளைகள் பொறித்த ஆவணம் அங்கே பாதுகாக்கப்படுவதாக கூறப்படுகின்றது. அதனை இதுவரை எவரும் பார்த்ததில்லை. அக்சும் இராச்சியத்தை ஸ்தாபித்த முதலாவது மெனலிக் காலத்தில் இடிந்து போன யூதர்களின் ஜெருசலேம் ஆலயத்தில் இருந்து அந்த ஆவணம் எடுத்துவரப்பட்டதாக கதை ஒன்றுண்டு.

அம்ஹாரி மொழியானது அரபு, ஹீபுரூ மொழிகளைப் போல செமிட்டிய மொழிக் குடும்பத்தை சேர்ந்தது. இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அரேபிய குடா நாட்டிலிருந்து வந்து குடியேறிய மக்கள், ஆப்பிரிக்க இனங்களுடன் கலந்து இன்றுள்ள அம்ஹாரி, திக்ரின்யா இனங்கள் தோன்றியிருக்கலாம். இந்த மொழிகள் தமக்கென தனியான எழுத்து வரிவடிவங்களைக் கொண்டிருப்பதால் பிற ஆப்பிரிக்க மொழிகளில் இருந்து வேறுபடுகின்றன. எத்தியோப்பியாவின் சரித்திரம் 'மக்கெடா' என்ற இராணியின் காலத்தில் இருந்து ஆரம்பமாகின்றது. அறிவுக் கூர்மையுடைய பேரழகி மக்கெடா பற்றி யேமன் நாட்டு சரித்திரக் குறிப்புகள் 'ஷீபா நாட்டு இராணி' என இவரைக் குறிப்பிடுகின்றன. தற்போதும் யேமனியர்களையும், எத்தியோப்பியர்களையும் உற்று நோக்கினால் அவர்கள் கிட்டத்தட்ட ஒரே மாதிரியாகத் தோன்றுவார்கள். இதனால் செங்கடலின் இருமருங்கிலும் ஆதி காலத்தில் ஒரேயின மக்கள் வாழ்ந்திருக்க வாய்ப்புண்டு. தற்போதும் தொடரும் சில கலாச்சாரக் கூறுகளை மேலதிக ஆதாரமாகக் கொள்ளலாம். உதாரணத்திற்கு வெற்றிலை மெல்லும் பழக்கம். ஆனால் அது எமது நாட்டு வெற்றிலையை விட அதிக போதை தரும்.

பண்டைய இஸ்ரேலிய மன்னன் சாலமன் (கி.மு. 972-932) அரண்மனைக்கு ஷீபா நாட்டு அரசி மக்கெடா விஜயம் செய்த போது, அவளது அறிவிலும், அழகிலும் மயங்கிய சாலமன் அவளை சிறிது காலம் தன்னுடனே தங்கும்படி வேண்டினான். மதிநுட்பம் வாய்ந்த அரசனாக மகிமை பெற்றிருந்த சாலமன் கருநிற பேரழகியின் அணைப்பில் மயங்கிக் கிடந்ததாகவும், இதனால் இராஜ காரியங்களை கவனிக்காமல் விட்டதாகவும் பைபிள் (பழைய ஏற்பாடு) கூறுகின்றது. பைபிள், ஆப்பிரிக்காவை சேர்ந்த ஒரு கருப்பினப் பெண்ணை உலகப் பேரழகியாக வர்ணிப்பது இங்கே குறிப்பிடத்தக்கது. வெள்ளை நிறம் மட்டுமே அழகு என்பது பிற்காலத்தில் ஐரோப்பிய இனவாதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரப்பிய கருத்தியல். சாலமனுடனான உறவில் கர்ப்பமுற்ற ஷீபா அரசி தாய் நாடு திரும்பியதாகவும், அங்கே ஒரு மகனை பெற்றெடுத்ததாகவும் பைபிள் மேலும் குறிப்பிடுகின்றது. எத்தியோப்பியாவில் 14-ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட "Kebra Negest' என்ற மன்னர்களின் கதைகளைக் கூறும் நூலிலும் இது குறிப்பிடப்படுகின்றது. சாலமனுக்கும், மக்கெடாவுக்கும் பிறந்த மகன்தான் எத்தியோப்பியாவில் இராசதானியை நிறுவிய (முதலாவது) மெனலிக் அரசன் என்று அது கூறுகின்றது.

எத்தியோப்பிய கிறிஸ்தவம் எகிப்தின் 'கொப்திக்' மதப்பிரிவைச் சேர்ந்தது. இந்தப் பிரிவின் வழிபாட்டு முறை கிரேக்க முறையில் இருந்து சற்றே வேறுபடுகின்றது. இவையெல்லாம் ஆதிகால கிறிஸ்தவ வழிபாட்டை கொண்டதால் 'பழமைவாத கிறிஸ்தவம்' என்றும் அழைக்கப்படுகின்றன. எத்தியோப்பியாவில் யூதர்களும், கிறிஸ்தவர்களும் ஒரே மாதிரியான சடங்குகளை பின்பற்றுகின்றனர். யூதர்களில் இருந்து பிரிந்தவர்களே கிறிஸ்தவம் என்ற புது மதத்தை தோற்றுவித்தார்கள் என்பது இதிலிருந்து நிரூபணமாகின்றது. ஐரோப்பா கிறிஸ்தவமயமாவதற்கு பல நூறாண்டுகளுக்கு முன்னரே ஆப்பிரிக்காவில், அதாவது எத்தியோப்பியாவில் கிறிஸ்தவ மதம் பரவியிருந்ததை முன்னர் ஒரு முறை குறிப்பிட்டுள்ளேன். வத்திக்கானில் இலத்தீன் மொழியில் பைபிள் எழுதப்படுவதற்கு பல நூறு ஆண்டுகளுக்கு முன்னரே எத்தியோப்பியாவில் எழுதப்பட்ட பைபிள் சுவடிகள் இப்போதும் பாதுகாக்கப்படுகின்றன.

1868-ஆம் ஆண்டு எத்தியோப்பியாவில் மாபெரும் திருட்டு சம்பவம் ஒன்று இடம் பெற்றது. சக்கரவர்த்தியினால் சேவைக்கு அமர்த்தப்பட்ட பிரிட்டிஷ் படைவீரர்கள், சக்கரவர்த்தி மரணமடைந்த குழப்ப சூழ்நிலையை பயன்படுத்தி விலை மதிப்பற்ற கலைப் பொக்கிஷங்களைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தனர். அரச ஆபரணங்கள், மதச் சின்னங்கள், இவற்றுடன் சுவடிகளையும் அள்ளிச் சென்றனர். கையால் எழுதப்பட்டிருந்த பைபிள் பிரதிகள், மற்றும் Kebra Negest வரலாற்று சுவடிகள் ஆகியன பின்னர் லண்டன் தெருக்களில் ஏலம் விடப்பட்டன. பிரிட்டிஷ் மியூசியம் 350 சுவடிகளை வாங்கியது. விக்டோரியா இராணி எட்டு சுவடிகளை தனது பிரத்யேக நூலகத்திற்கென பெற்றுக் கொண்டார். அரச ஆபரணங்கள் எல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது எங்கே இருக்கின்றன என்று தெரியாத அளவிற்கு மறைந்து போயின. இன்றைய எத்தியோப்பிய அரசு பல தடவை முயற்சித்தும் குறிப்பிட்ட அளவு திருட்டு பொருட்கள் மட்டுமே திரும்பக் கிடைத்துள்ளன. என்ன இருந்தாலும் இத்தாலியர்களின் சாதனையை எவராலும் முறியடிக்க முடியாது. அக்சும் நகர மத்தியில் 30 மீட்டர் உயரமும், நூறு தொன் எடையும் உள்ள கல் தூண் (Obelisk) ஒன்று நின்றது. 1937-இல் எத்தியோப்பியாவை ஆக்கிரமித்த முசோலினியின் படையினர் அந்தக் கல் தூணை துண்டுகளாக்கி இத்தாலி கொண்டு போய் சேர்த்து விட்டார்கள். 2004-ஆம் ஆண்டுதான் இத்தாலி அதனைத் திருப்பிக் கொடுக்க முன் வந்தது.

எத்தியோப்பியா ஒரு கிறிஸ்தவ நாடு என்று அறியப்பட்டாலும், அங்கேயும் எரித்திரியாவிலும் மொத்த சனத்தொகையில் அரைவாசிப் பேர் முசுலிம்கள். செங்கடலைத் தாண்டினால் இசுலாமியரின் புனித ஸ்தலமான மெக்கா மிக அருகாமையில்தான் உள்ளது. இருப்பினும் இவ்விரண்டு நாடுகளிலும் கிறிஸ்தவரும், முசுலிம்களும் எந்தப் பிரச்சினையுமின்றி ஒற்றுமையாக வாழ்ந்து வருவது குறிப்பிடத்தக்கது. அதிசயப்படத் தக்கதாக உலகின் பிற நாடுகளில் மத, இன, மொழி அடையாளங்கள் மக்களிடையே பிரிவினையைத் தூண்டுவது போல எத்தியோப்பியாவில் நடக்கவில்லை. அதற்கு மாறாக பலவிதமான பொருளாதாரக் காரணிகள் இன அடிப்படையிலான போர்களை ஊக்குவிக்கின்றன. உலகில் சுதந்திரம் கோரி போராடும் எத்தனையோ தேசிய இனங்களுக்கு தனி நாடு அமைப்பது இலகுவில் நடைமுறைச் சாத்தியமாவதில்லை. இருப்பினும் 30 ஆண்டு ஆயுதப் போராட்டத்திற்குப் பிறகு, எந்த வல்லரசின் துணையுமின்றி எரித்திரியா எவ்வாறு சுதந்திரமடைந்தது என்று பார்ப்போம்.

எரித்திரியாவிற்கு எதிரான போரில் ஈடுபட்ட எத்தியோப்பிய இராணுவத்திற்கு, மன்னராட்சிக் காலத்தில் அமெரிக்க உதவியும், மார்க்ஸிச ஆட்சிக்காலத்தில் சோவியத் உதவியும் கிடைத்து வந்தது. அதே நேரம் எரித்திரிய விடுதலைக்காக போராடிய EPLF இயக்கத்திற்கு புலம்பெயர்ந்த எரித்திரியர்களின் நிதி உதவி மட்டுமே கிடைத்து வந்தது. 1991-ம் ஆண்டு, சோவியத் யூனியன் மறைந்து போனதால், எத்தியோப்பிய இராணுவமும் பலமிழந்து போனது. சந்தர்ப்பத்தை பயன்படுத்தி அரச எதிர்ப்பு ஆயுதபாணி இயக்கங்கள் ஆட்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைப்பற்ற விரைந்தன. ஏற்கனவே களத்தில் ஓரளவு வெற்றி பெற்று பல இடங்களை விடுவித்திருந்த EPLF எரித்திரிய தலைநகர் அஸ்மாராவை கைப்பற்றியது. EPLF உடன் Tigray People's Liberation Front (TPLF) ஒரு ஐக்கிய முன்னணியை கட்டியிருந்தது. எத்தியோப்பியாவில் மொத்த சனத்தொகையில் 15 வீதமான திக்ரின்யா மொழி பேசும் மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய TPLF ஆட்சியை கைப்பற்றியது. எரித்திரியாவிலும் திக்ரின்யா மக்கள் கணிசமான அளவில் வாழ்வதால், இவ்விரு இயக்கங்களுக்கும் இடையில் நட்பு ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னர் முதன் முதலாக அம்ஹாரி மக்களின் அரசியல் ஆதிக்கம் முடிவுக்கு வந்து, திக்ரின்யா மக்கள் (இரு நாடுகளிலும்) அதிகாரத்திற்கு வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இப்போதும் பெருமளவு அம்ஹாரி மக்கள், ஒரு திக்ரின்யா அரசின் கீழ் வாழ்வதை விரும்பவில்லை என்பதுடன், எரித்திரிய பிரிவினையையும் ஜீரணிக்க கஷ்டப்படுகின்றனர்.

எரித்திரியாவிலும், எத்தியோப்பியாவிலும் ஒரே மொழி பேசுபவர்கள் ஆட்சியில் இருந்தால், அவர்களுக்கிடையே பிரச்சினை வராது என்று அர்த்தமல்ல. செங்கடலோரப் பிரதேசம் முழுவதையும் கொண்டுள்ள எரித்திரிய நாட்டின் துறைமுகங்களை எத்தியோப்பியா தாரளமாக பயன்படுத்திக் கொள்ளலாம் என ஒப்பந்தம் போட்டதால்தான், ஐ.நா. வாக்கெடுப்பின் மூலம் எரித்திரியா சுதந்திர நாடாவதற்கு புதிய எத்தியோப்பிய அரசு சம்மதித்தது. 1997-ஆம் ஆண்டு எரித்திரியா தனக்கென புதிய நாணயத்தை அறிமுகப்படுத்தியதால் டாலரில் வர்த்தகம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. எரித்திரியர்கள் தமது நாணயத்தின் பெறுமதியை செயற்கையாகக் கூட்டி வைத்திருந்தனர். இது எத்தியோப்பியாவிற்கு பாதகமாக அமைந்தது. வேறு பல பொருளாதாரக் காரணங்களாலும் (எண்ணெய், எரிவாயு அகழ்வாராய்ச்சி) இரு நாடுகளுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது. அதுவரை தீர்க்கப்படாதிருந்த எல்லைக்கோடு பற்றி சர்ச்சை ஏற்பட்டது. முதலில் எரித்திரியப் படைகள் எல்லைப்புறப் பிரதேசங்களை ஆக்கிரமித்தன. எத்தியோப்பியா வெளிநாடுகளில் ஆயுதங்களை வாங்கிப் போட்டு திருப்பித் தாக்கியது. ஒன்றுமில்லாத வெறும் கட்டாந்தரைக்காக இரண்டு இராணுவங்களும் ஆண்டுக்கணக்காக மோதிக் கொண்டதில் இலட்சக்கணக்கானோர் உயிரிழந்தனர். இரண்டு நாடுகளுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்காவின் உதவி பெறும் 'ஆப்பிரிக்க செல்லப் பிள்ளைகள்' என்பதால், அமெரிக்க மத்தியஸ்தத்துடன் போர் முடிவுக்கு வந்தது. தற்போது ஐ.நா. சமாதானப்படை எல்லைக்கோடு நிர்ணயிக்கும் அல்லது பாதுகாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது.

இரு நாடுகளிலும் 1991-ஆம் ஆண்டு ஆட்சியை கைப்பற்றிய முன்னாள் போராளிக் குழுக்களின் தலைவர்கள், பல கவர்ச்சிகரமான எதிர்காலத் திட்டங்களை மக்கள் முன்வைத்தார்கள். ஆப்பிரிக்காவில் அதிக சனத்தொகையை கொண்ட மூன்றாவது பெரிய நாடான எத்தியோப்பியா, பிராந்திய வல்லரசாக வருவேன் என்று கனவு கண்டது. உலகிலே சிறிய நாடுகளில் ஒன்றான எரித்திரியா, தாராளவாத பொருளாதாரத் திட்டங்களால் சிங்கப்பூர் போல வருவேன் என்று கனவு கண்டது. ஆனால் பாரிய பொருள், உயிரிழப்புகளை ஏற்படுத்திய எல்லைப்போர் இந்தக் கனவுகளையெல்லாம் நூறு ஆண்டுகள் பின்தள்ளி விட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ௭. சிம்பாப்வே: வெள்ளையனே வெளியேறு!

‘படுகொலை, படுகொலை’ என அலறின பிரிட்டிஷ் பத்திரிகைகள். முன்பக்கத்தில் ஒரு இரத்தம் வழியும் வெள்ளைக்காரனின் முகம், கீழே சிம்பாப்வேயில் ‘கருப்பு இன வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவி விவசாயி’ என தடித்த எழுத்தில் பொறிக்கப்பட்டிருந்தது. சிம்பாப்வே பிரச்சினை பற்றிய பிரிட்டிஷ் பத்திரிகைகளின் செய்தியறிக்கைகள் ஓரளவு காலனிய ஆட்சிக்காலத்தை நினைவுபடுத்தியது. அப்போது சுதந்திரப் போராளிகளால் வெள்ளையின அதிகாரிகள் கொல்லப்பட்டபோது அதனைப் பயங்கரவாதமென்றும், இனவாதப் படுகொலைகள் என்றும் பத்திரிகைகள் சித்தரித்தன. அதேநேரம் வெள்ளை அதிகாரிகளால் .கருப்பினப் பொதுமக்கள் கொல்லப்பட்ட சம்பவங்களை திட்டமிட்ட முறையில் மூடிமறைத்தன, ‘அரசு சாராத சுதந்திர’ ஊடகங்கள்.' இவையெல்லாம் காலனித்துவக் கால கட்டம் இன்னமும் தொடர்கிறதா என ஐயமுற வைக்கின்றன.

ஐரோப்பியர் காலனியக் காலங்களில் சில நாடுகளை நிரந்தரமாகக் குடியேறவென தேர்ந்தெடுத்தனர். அவற்றில் ‘தென்னாபிரிக்கா’, ‘சிம்பாப்வே’ ஆகியன முக்கியமானவை. 19-ஆம் நூற்றாண்டில் தென்னாப்பிரிக்காவில் ஏற்கெனவே தனது அதிகாரத்தை நிலைநிறுத்தி விட்ட பிரிட்டிஷ் காலனித்துவப் படைகள் வடக்கு நோக்கி முன்னேறின. துப்பாக்கியேந்திய பலமான பிரிட்டிஷ் படைகளுடன் மோத முடியாத, அம்பு-வில் போன்ற புராதன போர்க் கருவிகளை பயன்படுத்திய கருப்பர்களின் படைகள் தோல்வியுற்றுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சரணடைந்தன. தோற்றவர்களின் நிலங்களை வென்றவர்கள் அபகரித்துக் கொண்டார்கள். தாய் நாடான பிரிட்டனிலிருந்து 'விவசாயிகள்' வந்து குடியேறினர். இவ்வாறு வெள்ளையின ஆதிக்கத்தின் கீழ் வந்த நிலங்களை இணைத்து 'ரொடீஷியா' என்ற நாடு உருவாக்கப்பட்டது.

தென்னாப்பிரிக்காவிலிருந்து படையெடுப்பு நடத்தி வென்ற ஆங்கிலேயத் தளபதி 'சிசில் ரோட்ஸ்' ன் தலைமையில் இங்கு வெள்ளையாட்சி நடத்தப்பட்டது. இவனது பெயர் காரணமாகவே இந்நாட்டிற்கு 'ரொடீசியா' என்ற பெயரும் சூட்டப்பட்து. சோவியத் ஒன்றியம் லெனின் கிராட் என்று பெயர் வைத்தால் அதனை அரசியல் பிரச்சாரம் என்று கண்டித்த மேற்குலக புத்திஜீவிகளுக்கு, ரொடீசியா கண்ணில் படவில்லை. தற்கால அரசியலின் அடிப்படையில் சொன்னால்: ரோட்ஸ் ஒரு சர்வாதிகாரி, நிறவெறியன், இனப்படுகொலை செய்தவன், நாகரிக உலகம் ஏற்காத இனவாத ஆட்சி நடத்தியவன். இந்த இனவாதச் சர்வாதிகார ஆட்சி 1980 வரை நீடித்தது. உலகெங்கும் நடந்த, காலனியாதிக்க எதிர்ப்பு சுதந்திரப் போராட்டங்களால் உந்தப்பட்ட ரோடீசியாவின் படித்த கருப்பின இளைஞர்கள், ZANU-PF ஏன்ற பெயரில் நிறுவனமயமாகினார்கள். ரொபேட் முகாபே தலைமையில் நிறவெறி அரசுக்கெதிரான ஆயுதமேந்திய கிளர்ச்சி நடைபெற்றது. கொரில்லாப் போர்த் தந்திரங்கள் பாவிக்கப்பட்டன. இறுதியில் பிரிட்டிஷ் ரொடீசிய அரசுகள் நிபந்தனையடிப்படையிலான சுதந்திரம் கொடுக்க ஒப்புக்கொண்டன. அதாவது பதவியேற்கும் கருப்பின அரசாங்கம் வெள்ளையின விவசாயிகளை, முதலாளிகளை அவர்களின் போக்கில் விடவேண்டுமென்பதே முன்வைக்கப்பட்ட நிபந்தனையாகும். நீதித்துறையில் பிரிட்டிஷ் அரசு வகுத்திருந்த சட்டங்களே தொடர்ந்தும் பேணப்பட வேண்டும் (இந்தச் சட்டங்களும் வெள்ளையின முதலாளிகளுக்கு வேண்டிய சுதந்திரத்தை உறுதிப்படுத்தன.) என்பதும் நிபந்தனையாக இருந்தது. இவ்வடிப்படையிலேயே அபிவிருத்தி உதவிகளும் வழங்க பிரிட்டிஷ் நிர்வாகம் உடன்பட்டது. நிபந்தனைகளை ஏற்று, ரொடீசிய அரசிற்கெதிரான ஆயுதப் போராட்டத்தில் கணிசமான வெற்றியைப் பெற்றிருந்த ZANU-PF, 'லங்கஸ்டர்' ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது. இதையடுத்து ரொடீசியா, 'சிம்பாப்வே' என ஆப்பிரிக்கமயப்படுத்தப்பட்டது.

சுதந்திரத்தின் பின்னர் வந்த அரசாங்கம் இந்த ஒப்பந்த்திற்கேற்ப, அதாவது பிரிட்டிஷார் விருப்பத்திற்கிணங்க அமைக்கப்பட்டது. இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் மார்க்சியத்தை தனது கட்சியின் சித்தாந்தமாக அறிவித்த ZANU-PF அதை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. நாட்டில் அரசுத் துறைகள் மட்டுமே கருப்பினத்தவர் வசம் வந்தன. பொருளாதாரத்தில் வெள்ளையினத்தவரின் ஆதிக்கம் தொடர்ந்து நீடித்தது. தம்மை 'விவசாயிகள்' எனக் கூறிக்கொள்ளும் இவர்கள், உண்மையில் விவசாய முதலாளிகளாவர். நாட்டின் முக்கிய ஏற்றுமதிப் பொருட்களான புகையிலை, தேயிலை போன்றவற்றை நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலங்களில் உற்பத்தி செய்வதுடன், ஏற்றுமதி வர்த்தகத்தையும் தமது கைகளில் வைத்திருந்தனர். இவ்வகையில் இவர்கள் அனைவருமே செல்வந்தர்களாகவும் இருந்தனர். இதற்கு மாறாக, காலனித்துவ காலத்தில் நிலங்களைப் பறிகொடுத்த கருப்பின மக்கள் இன்று வரை ஏழைகளாக வெள்ளை முதலாளிகளுக்குச் சொந்தமான நிலங்களில் வேலை செய்து வாழும் தொழிலாளர்களாக இருந்து வருகின்றனர். காலத்தின் மாற்றத்திற்கேற்ப வெள்ளையின முதலாளிகள் தாம் 'நிற வேற்றுமை பார்க்காதவர்கள்', 'கருப்பினத் தொழிலாளர்களைச் சமத்துவமாக நடாத்துபவர்கள்' என்றெல்லாம் காட்டிக் கொள்கின்றனர். இவர்கள் சிம்பாப்வே என்ற புதிய நாட்டின் குடியுரிமையை ஏற்றுக்கொண்டவர்கள் மட்டுமல்ல, உள்ளூர் மொழிகளையும் சரளமாகப் பேசக் கூடியவர்கள். சில வெள்ளையினப் பிள்ளைகளுக்கு ஆப்பிரிக்கப் பெயர்களும் சூட்டப்பட்டுள்ளன.

எது எப்படியிருந்த போதிலும், எல்லாவற்றிற்கும் பின்னால் இருப்பது சொத்துரிமை என்பதை மறந்துவிடலாகாது. இவர்கள் அப்போது இனவாதிகளாக நிறவேற்றுமை காட்டியதும் சொத்துரிமையைப் பாதுகாக்கத்தான். இன்று சிம்பாப்வே தேச பக்தர்களாகக் காட்டிக் கொள்வதும் அதே நோக்கத்தோடுதான். அவர்களின் விவசாய உற்பத்தியில் ஏகபோகம், காலனிய ஸ்தாபனத்தை நிறுத்தும் பணி என்பனவற்றுக்காகத்தான் மேற்கத்திய தொடர்பூடகங்கள் வெள்ளையின விவசாயிகள் ஆதரவுப் பிரச்சாரம் செய்கின்றன. 'நாம் இந்த விவசாயிகளைக் கைவிட முடியாது. ஏனெனில் நாம்தான் அவர்களை அங்கு அனுப்பினோம்' என இதனை பிரிட்டிஷ் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் நேரடியாகவே சொன்னார். பிரிட்டனில் ஒருபுறம் மூன்றாம் உலக நாடுகளின் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அதே நேரம் சிம்பாப்வேயிலிருந்து வரும் 'வெள்ளை அகதி'களுக்கு வந்த உடனேயே வீடும், வேலைவாய்ப்பும், தேவையேற்படின் நிலமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கப்படுகின்றன. 'மனிதாபிமானமிக்க, இனவெறியற்ற, ஜனநாயக' பிரிட்டிஷ் அரசின் இரட்டை வேடமிது.

சிம்பாப்வேயில் மொத்த சனத்தொகையில் ஒரு வீதமான வெள்ளையினத்தவருக்கு 80 வீதமான நிலங்கள் சொந்தமாக இருக்கின்றன. அதே வேளை பெரும்பான்மை மக்கள் சொந்த நிலமின்றி இருப்பது எந்த வகையில் நியாயமென எந்தவொரு 'ஜனநாயகவாதி'யும் கேட்டதாகத் தெரியவில்லை. ஆண்டாண்டு காலம் அனுபவித்த பெரும் நிலப்பிரபுக்களான வெள்ளையர்கள், உள்ளூர் கருப்பின மக்களிடமிருந்து தமது மூதாதையர் பறித்த நிலங்களை நேர்மையாக அவர்களிடம் திருப்பிக் கொடுக்காதது ஏன்? என்றும் எந்தவொரு மனித உரிமைவாதியும் கேட்கவில்லை. ஆனால் சில புரட்சியாளர்கள் வெள்ளையினத்தவருக்குச் சொந்தமான நிலங்களைத் திடீரென முற்றுகையிட்டுப் பலவந்தமாகப் பறித்து, அவற்றை நிலமற்ற கருப்பின விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்தபோது மட்டும் 'ஜனநாயகம், மனித உரிமைகள்' என்று மேற்கில் சிலர் சாமியாடத் தொடங்கியுள்ளனர். இதனால்தான் மனித உரிமைகள் என்ற பெயரில் மேற்கத்திய அரசியல் ஆதிக்கம் பரப்பப்படுவதாக ஆப்பிரிக்காவில் சிலர் விமர்சிக்கின்றனர்.

முகாபேயின் அரசாங்கம் ஊழல்வாதிகளால் நிரம்பி வழிவதும், தமக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் பதவிகள் கொடுப்பதும் உண்மைதான். சரிந்துவரும் செல்வாக்கை மீளப்பெறுவதற்காகத்தான் முகாபே நிலச் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்ததும் மறுப்பதற்கில்லை. இருப்பினும் தனியாக நின்று ஏகாதிபத்தியத்துடன் மோதும் துணிச்சலைப் பாராட்ட வேண்டும். கடந்த பதினைந்து ஆண்டுகளாக உலக வங்கியோ அல்லது வேறெந்தச் சர்வதேச நிதிநிறுவனமோ சிம்பாப்வேக்கு நிதியுதவி வழங்குவதில்லை. தென்னாப்பிரிக்காவையும், லிபியாவையும் விட்டால் வேறு குறிப்பிடத்தக்க வர்த்தகக் கூட்டாளிகள் கிடையாது. இப்படி கடினமான நேரத்திலும் சிம்பாப்வே இன்றுவரை ஏகாதிபத்திய உத்திரவுகளுக்கு அடிபணியவில்லை. ஒரு ஆண்டு வெளிநாட்டுக் கடனுதவி கிடைக்காவிட்டால் பொருளாதாரம் ஸ்தம்பித்துவிடும் என்று நமது அரசாங்கங்கள் பூச்சாண்டி காட்டிக் கொண்டிருப்பது இங்கே நினைவுகூறத் தக்கது.

அமெரிக்க-ஐரோப்பிய நாடுகளின் நீங்காத அச்சமென்னவெனில், சிம்பாப்வேயின் 'புரட்சிகர நிலச் சீர்திருத்த அலை' பிற ஆப்பிரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளிலும் பரவலாம் என்பதே. தென்னாப்பிரிக்க குடியரசிலும், நமீபியாவிலும் பெரும்பான்மை விவசாய நிலங்கள், தேசியப் பொருளாதாரம் என்பன இன்னமும் வெள்ளையினத்தவரின் கைகளில் இருக்கின்றன. தென்னாப்பிரிக்க நிலமற்ற கருப்பின விவசாயிகள் சிம்பாப்வேயில் நடந்தது போல அங்கேயும் நிலச்சீர்திருத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென எதிர்பார்க்கின்றனர். தென்னாப்பிரிக்க வெள்ளையின விவசாயிகள் இனறும் கூட சட்டபூர்வமற்ற, ஆனால் அரசு தலையிடாத தனியான சுயாட்சிப் பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் மத்தியில் பாசிச அமைப்புகள் செல்வாக்கு செலுத்துவதுடன், ஆயுதபாணிகளாகவும் இருக்கின்றனர். வெளியில் சொல்லப்படாது பாதுகாக்கப்படும் இரகசியங்களில் ஒன்று; இந்த வெள்ளையினத் தீவிரவாதக்குழுக்கள் இரசாயன, உயிரியல் ஆயுதங்களையும் பதுக்கி வைத்திருப்பதுதான்.

இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினை போன்றதொரு சூழ்நிலை தெற்கு ஆப்பிரிக்க நாடுகளில் முன்னர் நிலவியது. 20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெள்ளையினக் குடியேறிகளால் தன்னிச்சையாக அறிவிக்கப்பட்ட தென்னாப்பிரிக்கா, ரொடீசியக் குடியரசுகளில் வெள்ளையர்கள் சிறுபான்மையாக இருந்தனர். அத்துடன் நாடு முழுவதும் பரவலாக பெருமளவு நிலங்களைக் கைப்பற்றி காலனிகளை அமைத்தும் இருந்தனர். இந்த வெள்ளைக் காலனிகளைச் சேர்ந்தோர் மட்டும் அனைத்து உரிமைகளையும் பெற்று முதல்தரப் பிரஜைகளாக இருந்தனர்.

அதேநேரம் பெரும்பான்மை கருப்பினத்தவர் இரண்டாந்தரப் பிரஜைகளாக பின்தங்கிய நிலையில் வைக்கப்பட்டனர். கல்வி, மருத்துவ வசதி என்பன கூட வெள்ளையினத்தவருக்கே வழங்கப்பட்டன. முன்னாள் ரொடீசியா பின்னர் சிம்பாப்வேயாக மாறி முகாபேயின் ZANU-PF ஆட்சிக்கு வந்த பின்னர்தான் கருப்பினத்தவரை முன்னேற்றும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப் பட்டன. நாடு முழுவதும் கட்டப்பட்ட மருத்துவமனைகள், பாடசாலைகள் என்பன சமுக முன்னேற்றத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகள். பிரிட்டன் முன்மொழிந்த 'லங்கஸ்டர்' சுதந்திர ஒப்பந்தம், சமுக அபிவிருத்திக்கு பணம் ஒதுக்குவதைக் குறைக்க விரும்பியதை இவ்விடத்தில் கூற வேண்டும்.

சிம்பாப்வேயின் பொருளாதார வீழ்ச்சிக்கு, முகாபேயின் நிலச்சீர்திருத்தக் கொள்கைதான் காரணம் என்றும் சொல்லப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுகின்றது. ஆனால் உலக வங்கி, சர்வதேச நாணய சபை போன்றவற்றின் பொருளாதாரத் திட்டங்கள் ஏற்கெனவே நாட்டைப் பாழ்படுத்தியிருந்தன. தொன்னூறுகளில் இந்த நிறுவனங்களின் தவறான முகாமைத்துவம் குறித்து முகாபே விமர்சித்தபோது பிரச்சினை கிளம்பியது. தொடரும் நில அபகரிப்பு காரணமாக பெருமளவு வெள்ளையின முதலாளிகள் தமது வர்த்தகச் செயற்பாடுகளை நிறுத்தி விட்டு, வேறு நாடுகளுக்குப் போய் தங்கி விட்டனர். சர்வதேச வர்த்தகம் வெள்ளையினத்தவர் ஆதிக்கத்தில் இருந்ததால் பொருளாதார வீழ்ச்சியேற்பட்டது. அவர்கள் வெளியேறிய பின்னர் சர்வதேச சமூகம் தொடர்பை முறித்துக் கொண்டது.

ஆனால் இவை எல்லாம் மேற்கத்திய தொடர்பூடகங்களால் மூடி மறைக்கப்பட்டு, எல்லாவற்றிற்கும் முகாபேயின் தவறான அரசியல்தான் காரணம் எனப் பிரச்சாரம் செய்யப்படுகின்றது. 'பயங்கரவாதத்திற்கெதிரான போர்' சிம்பாப்வே மீதும் தொடுக்கப்பட வேண்டுமென பிரிட்டன் எதிர்பார்க்கின்றது. சிம்பாப்வேயில் எந்தவித பொருளாதார-இராணுவ நலன்களும் இல்லாதபடியால் அமெரிக்கா இதைத் தட்டிக் கழித்தபடியுள்ளது. இருப்பினும் நிலைமை இப்படியே நீடிக்க பிரிட்டன் விடவில்லை. இராஜதந்திர, பொருளாதார அழுத்தங்களின் மூலம் உள்நாட்டுக் கிளர்ச்சிகள் தூண்டிவிடப்பட்டன. நவ காலனித்துவம் என்றால் என்ன ? என்பதற்கு சிம்பாப்வே ஒரு சிறந்த உதாரணம். வெள்ளையர்கள் வெளியேறி விட்டனர் தான்; ஆனால் அவர்களது மூலதனம் நம்மை இப்போதும் ஆண்டு கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 10. நைல் நதி: ஆப்பிரிக்காவின் நீளமான இரத்த ஆறு

இரோப்பிய நகரமொன்றின் சனநெருக்கமுள்ள மையப்பகுதி. பலர் கூடும் இடத்தில் நான்கு பக்கமும் கண்ணாடியிலான கூண்டு. அதற்குள்ளே ஒரு வானொலி நிலையம். வானொலி அறிவிப்பாளராக, தொழில்நுட்ப பணியாளராக சில வெள்ளை இளைஞர்கள். உறைய வைக்கும் குளிர்கால கிறிஸ்துமஸ் நாட்களில், ஒரு சிறிய கண்ணாடிக் கூண்டுக்குள் அந்த இளைஞர்கள் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்?

அவர்கள் ஒரு பிராந்திய வர்த்தக வானொலி சேவையை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். சூடானில் டார்பூர் மாநிலத்தில் போரினால் பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு உதவுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்ட விளம்பர நடவடிக்கை அது. அந்த நிகழ்ச்சி வேடிக்கை பார்க்க வரும் பொது மக்களின் அதீத ஆர்வம் காரணமாக மில்லியன் யூரோக்களை சேர்த்து விட்டிருந்தது. இதைத் தவிர டார்பூர் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுமாறு பல உதவி நிறுவனங்கள் கூட்டாக ஊடகங்களில் விளம்பரம் செய்து கொண்டிருந்தன. ஊடகக் கருத்துக் கணிப்பொன்று பெரும்பான்மை மக்கள் டார்பூர் பிரச்சினை குறித்து அதிக அக்கறைப்படுவதாக தெரிவித்தது. அப்போதுதான் அமெரிக்காவும், ஐ.நா. சபையும் டார்பூரில் இனப்படுகொலை நடப்பதாக அறிவித்திருந்தன. நாசி ஜெர்மனியில் யூத இனப்படுகொலை நடந்த பிறகு ஐ.நா. சபை மிகக் கவனமாக ஆராய்ந்த பின்னர் தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்படுகொலை அறிவிப்பு செய்வது வழக்கம். சூடான் மீது இனப் படுகொலை குற்றஞ்சாட்டுமளவிற்கு அங்கே என்ன நடக்கிறது?

நாள்தோறும் சின்னத்திரையில் காட்டப்படும் பிம்பங்கள் பொது மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவை. எங்கோ ஒரு ஆப்பிரிக்க நாட்டில் பட்டினியால் பரிதவிக்கும் மக்கள், கால்நடைகளாக இடம்பெயரும் மக்கள், முகாம்களுக்குள் அகதிகள் .. இவற்றை பின்னணியாகக் கொண்டு மனிதப் பேரவலம் பற்றி விவரிக்கும் செய்தியாளர்கள். தொலைக்காட்சி காமெராக்கள் பார்வையாளரின் மனதை நெகிழ வைக்கும் படங்களைப் பதிவு செய்யும்.

சூடானில் டார்பூர் போரில் கொல்லப்பட்டவர்கள் எத்தனை? 30 இலட்சம் என்கின்றன ஐ.நா. விற்கு அறிக்கை சமர்ப்பித்த நிறுவனங்கள். இல்லை, 2 இலட்சம் மட்டுமே என்று சொல்கின்றது சூடான் அரசு. இனப்படுகொலையில் ஈடுபட்ட துணைப்படைக்கு சூடான் அரசு உதவி வழங்கியது என்பது ஐ.நா.வின் குற்றச்சாட்டு. நாம் உதவி செய்யவில்லை, அவர்கள் சாதாரண கொள்ளைக்காரர்கள் என்று மறுக்கிறது சூடான் அரசு. டார்பூர் பிரச்சினையில் உலகம் இரண்டாகப் பிரிந்து நிற்கின்றது. அமெரிக்கா போன்ற பல மேற்குலக நாடுகள் அரசுக்கெதிரான போராளிக் குழுக்கள் வழங்கும் தகவல்களை நம்புகின்றன. அரபு-இசுலாமிய நாடுகள் சூடான் அரசுக்கு ஆதரவாக நிற்கின்றன.

சூடான் ஆப்பிரிக்காவின் மிகப்பெரிய தேசம். எகிப்துடனான வடக்கு எல்லை முதல் உகண்டா உடனான தெற்கு எல்லை வரை, லண்டனில் இருந்து மாஸ்கோ போகுமளவு தூரம். உலகின் நீளமான நைல் நதியின் பிறப்பிடம் இது. இயற்கை அன்னை வழங்கிய கொடையான நைல் நதியில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாதம் வெள்ளப்பெருக்கு ஏற்படும். வெள்ளம் வடிந்த பின்னர் தேங்கிவிடும் மணல் விவசாய விளைநிலமாக மாற்றப்படும். முரண்நகையாக நைல் நதியோர விவசாயத்தின் பலன்களை உள்நாட்டு மக்கள் அனுபவிப்பதில்லை. இங்கே பயிரிடப்படும் உணவுப்பொருட்களில் பெரும்பகுதி வளைகுடா அரபு நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. பணக்கார பாலைவன நாடுகள் உணவுக்காக அமெரிக்காவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கியிருப்பதை தவிர்க்க சூடானின் விளைநிலங்களை குத்தகைக்கு எடுத்துள்ளன.

115 மொழிகளைப் பேசும் பலவித கலாச்சாரம் கொண்டவர்களின் தாயகமாக இருந்த போதிலும், மூன்றில் இரண்டு பங்கு மக்கள் அரபு மொழியை தாய்மொழியாக கொண்டவர்கள். அரேபியர்களைப் பற்றி உங்களுக்கு தெரிந்த பொதுவான கட்டமைப்பில் இருந்து சூடானிய அரபுக்கள் மாறுபடுகின்றனர். அவர்கள் கருநிற மேனியராக ஆப்பிரிக்கர்களைப் போல தோற்றம் கொண்டவர்கள். மொழி, பண்பாடு, மதம் என்பன மட்டுமே அவர்களை அரபுக்கள் என அடையாளப்படுத்தும் காரணிகள். இதைப் பற்றி இன்னொரு தடவை டார்பூர் பிரச்சினையில் நாம் பார்க்கப் போகிறோம். இந்தியத் தமிழரை விட, ஈழத்தமிழர்கள் தீவிரமான தமிழ் தேசியவாதிகளாக இருப்பதை அவதானிக்கலாம். அதே போல பிற அரபுநாடுகளில் வாழும் இசுலாமிய-அரேபியரை விட சூடான் அரபுக்கள் மத்தியில் மதப்பற்றும், இனப்பற்றும் மேலோங்கி காணப்படுகின்றது. உண்மையில் நவீன மத அடிப்படைவாத அரசியல் கருத்துகள் யாவும், 19-ஆம் நூற்றாண்டில் மஹ்தி என்ற விடுதலைப் போராளியின் காலத்திலேயே நிறுவனமயப்படுத்தப் பட்டிருந்தன.

சூடானின் வடக்குப் பகுதி 8000 ஆண்டுகளுக்கு முன்னரே நாகரீகமடைந்த சமுதாயத்தைக் கொண்டிருந்தது. அன்று எகிப்தின் தெற்குப் பகுதியையும் (அஸ்வான்) சேர்த்துக் கொண்டு, 'நுபியர்களின் ராஜ்யம்' சீரும் சிறப்பும் பெற்று விளங்கியது. தமக்கு அருகில் இருந்த மகிமை பொருந்திய எகிப்தில் இருந்து மதத்தையும், கட்டடக் கலையையும் கடனாக பெற்றிருந்தனர். எகிப்தில் இருப்பதை விட நுபியாவில் அதிகளவு பிரமிட்கள் கட்டப்பட்டதாக அகழ்வாராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். நுபியப் பாலைவனத்தில் நிமிர்ந்து நிற்கும் காலத்தால் அழியாத பிரமிட்கள் அதற்கு சாட்சி. கி.மு. 1500 க்கு பின்னர் 'மெரோயே' அரசாட்சியில் ஐரோப்பாவிற்கும், ஆப்பிரிக்காவிற்கும் இடையிலான சர்வதேச வர்த்தகம் தேசப் பொருளாதாரத்தை வளர்த்தது. நுபிய வியாபாரிகள்தான் முதன் முதலாக ஒட்டகங்களை சுமை தூக்கும் வாகனமாக பயன்படுத்தினர். 'நுப்' என்றால் நுபிய மொழியில் தங்கம் என்று அர்த்தம். அன்று உலகம் முழுவதும் தங்கம் ஏற்றுமதி செய்து வந்ததால் பிற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டவரால் நுபியா என அழைக்கப்பட்டிருக்கலாம். பொறாமை கொண்ட எகிப்தியரால் அடிக்கடி படையெடுப்புக்கு உள்ளானாலும், கி.பி. 324-ஆம் ஆண்டு வரை தனது சுதந்திரத்தை காப்பாற்றிக் கொண்டது.

அப்போது கிழக்கே எத்தியோப்பியாவில் 'அக்சும்' என்ற கிறிஸ்தவ இராஜ்யம் தோன்றியிருந்தது. அக்சும் படையினரால் நுபியா போரில் தோற்கடிக்கப்பட்டது. வெற்றிகொள்ளப்பட்ட நுபிய மக்கள் கிறிஸ்தவர்களாக மதமாற்றம் செய்யப்பட்டனர். கிரேக்கத்தில் இருந்த கிறிஸ்தவ சக்கரவர்த்தியும், மதம் மாற்றும் பணிக்காக பாதிரியார்களை அனுப்பி வைத்தார். கி.பி. 700-ஆம் ஆண்டு வேறொரு மதம் கிழக்கே இருந்து வந்தது. இசுலாம் என் புதிய மதத்தை கொண்டு வந்த அரேபியர்கள், நுபியர்களையும் முசுலிம்களாக மாற்றினார்கள். அன்று வந்த அரேபிய ஆக்கிரமிப்பாளருக்கு ஒரு சாம்ராஜ்யம் நிறுவுவதை விட, மதக் கருத்துகளை பரப்புவதே முக்கியமானதாகப் பட்டது. நுபியாவில் 'சென்னர்' என்ற (கருப்பின) சுல்தான் ஆட்சி உருவானது. தேசங்கடந்த வியாபாரிகளிடம் வரி அறவிட்டு, அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கி, தனது பொருளாதாரச் சுதந்திரத்தை நிலைநாட்டிக் கொண்டது. 14-ஆம் நூற்றாண்டில் வடக்கே இருந்து படையெடுத்த 'மம்மலுக்' துருக்கி வீரர்கள், சுதந்திர சுல்தான் ஆட்சிக்கு முடிவு கட்டினர். 19-ஆம் நூற்றாண்டு வருவதற்குள் சூடான் முழுவதும் துருக்கியின் ஓட்டோமான் சாம்ராஜ்யத்துடன் இணைக்கப்பட்டது.

19-ம் நூற்றாண்டில் புதிய உலக வல்லரசொன்றின் பிரசன்னம் ஆப்பிரிக்காவில் தோன்றியது. பிரித்தானியாவிற்கும், ஓட்டோமான் துருக்கிக்கும் இடையில் அப்போது நட்புறவு ஏற்பட்டிருந்தது. குறிப்பாக எகிப்தில் தன்னாட்சி அதிகாரம் கொண்ட முகம்மது அலி பாஷாவின் படைகளுக்கு பிரிட்டிஷ் அதிகாரிகள் ஆலோசனை வழங்கி வந்தனர். சூடானில் நிலை கொண்டிருந்த துருக்கியப் படைகளுக்கு உள்ளூர் மக்கள் மத்தியில் நற்பெயர் ஏற்பட்டிருக்கவில்லை. 'நாகரீகமடையாத' தெற்கு சூடான் மக்கள், அடிமை வியாபாரிகளின் மனித வேட்டையால் அதிகளவு பாதிக்கப்பட்டனர். மொத்த சனத்தொகையில் 5% அடிமைகளாக்கப்பட்டனர். 'நாகரீகமடைந்த' வடக்கு சூடானை சேர்ந்த மக்கள், அதிக வரி கேட்டு கசக்கிப் பிழியப்பட்டனர். துருக்கி ஆக்கிரமிப்பு இராணுவம் வரி என்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயரில் மக்களைச் சுரண்டிக் கொழுத்துக் கொண்டிருந்தது. 1880-இல் இந்தக் கொடுமைகளுக்கு முடிவு கட்ட கிளர்ந்தெழுந்தார் மஹ்தி என்ற மாவீரன். துருக்கி ஊழல் பெருச்சாளிகளுக்கு எதிராக மக்களை அணிதிரட்டினார்.

அல் மஹ்தி அல் முந்தசார் (சரியான பாதையில் வழிநடத்த தெரிவானவர்), தன்னை இறைத்தூதர் முகம்மது நபியின் வழிதோன்றல் என அழைத்துக் கொண்டார். ஆட்சியில் இருந்த ஊழல் அதிகாரிகளுக்கு எதிரான விடுதலைப் போரை, அதாவது 'ஜிஹாத்' அறிவித்தார். சூடானின் மேற்குப் பகுதி மாநிலமான டார்பூரில் பல்லாயிரம் இளைஞர்கள் ஜிஹாத்திற்கு அணி திரண்டனர். துருக்கி ஆக்கிரமிப்பு படைக்கு பிரிட்டிஷ் இராணுவ உதவி கிடைத்த போதும், மஹ்தியின் போராளிகளை எதிர்த்து நிற்க முடியவில்லை. அப்போது லண்டனில் இராணியில் மாளிகையில் கூட மஹ்தியை பற்றி சிலாகிக்கும் அளவிற்கு, மஹ்தி பிரிட்டிஷாரின் வெறுப்புக்கு ஆளாகியிருந்தார். அன்றைய காலகட்டத்தில், 'மாக்ஸிம்' என்ற இயந்திர துப்பாக்கியை கண்டுபிடித்திருந்த ஒரு உலக வல்லரசான பிரிட்டனால் கூட, சில ஆயிரம் போராளிகளை வெல்ல முடியவில்லை. தலைநகர் கார்ட்டும் முற்றுகையிடப்பட்டு, பிரிட்டிஷ் படைகளுக்கு தலைமை தாங்கியவரும், கவர்னருமான மேஜர் ஜெனரல் சார்லஸ் கோர்டன் உட்பட ஆயிரக்கணக்கான அரசாங்க சார்பானவர்கள் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இருப்பினும் சூடானின் சுதந்திரம் அதிக காலம் நீடிக்கவில்லை. நெருப்புக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட மஹ்தி மரணமடைந்தவுடன் ஏற்பட்ட பதவிக்கான போட்டி பூசல் மஹ்தி இராணுவத்தை பலவீனமாக்கியது. அதே நேரம் பிரிட்டனுக்கு சூடான் இழக்க முடியாத பொக்கிஷமாகப்பட்டது. இது 1898-ஆம் ஆண்டு, சூயெஸ் கால்வாய் திறக்கப்பட்டு ஆசியாவிற்கான கப்பல் போக்குவரத்து நேரத்தை வெகுவாக குறைத்து விட்டிருந்தது. சூயெஸ் கால்வாய் அமைந்துள்ள செங்கடல் பிரதேசம் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்தது. அதே நேரம் ஆப்பிரிக்காவை ஐரோப்பிய வல்லரசுகள் தமக்குள் பங்கு போட்டிருந்தன. பிரான்ஸ் செனகல் முதல் சாட் வரை உரிமை கொண்டாடியது. பிரிட்டன் அவசர அவசரமாக சூடானை பிடிக்க பெரும் பிரயத்தனப்பட்டது. இம்முறை பிரிட்டிஷ் படைகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எகிப்தின் துருக்கிப் படைகளுடன் இணைந்து மஹ்தி இராணுவத்தை தோற்கடித்து சூடான் முழுவதையும் கைப்பற்றின. அன்றிலிருந்து சூடான் பிரிட்டிஷ் காலனியாகியது.

பிரிட்டிஷ் காலனியானவுடன் பருத்தி பயிரிடும் பெருந்தோட்டங்கள் உருவாக்கப்பட்டு, பருத்தி ஐரோப்பாவிற்கு ஏற்றுமதியானது. பிரிட்டிஷார் சூடானிலும் பிரித்தாளும் சூழ்ச்சியில் இறங்கினர். தெற்குப்பகுதி மாநிலங்களில் டிங்கா, நுவெர் போன்ற பழங்குடியின மக்கள் வாழ்கின்றனர். குடும்பம், குலம், குலத்தலைவன் இதற்கப்பால் அவர்களது சமூக நிறுவனம் விரிவடையவில்லை. 18-ஆம் நூற்றாண்டில்தான் அந்த மக்கள் வேற்றினத்தவரைப் (துருக்கியர்) பார்த்தார்கள். கால்நடை வளர்ப்பைத் தவிர வேறு பொருளாதார அபிவிருத்தி கிடையாது. குல தெய்வங்களை வழிபட்டு வந்த இவர்களை ஆங்கிலேயர்கள் கிறிஸ்தவமயப்படுத்த ஆரம்பித்தனர். மிஷனரிகள் ஆங்கில வழிக் கல்வி புகட்டின. கூடவே ஐரோப்பிய கலாச்சாரத்தையும் கற்பித்தன. அதே நேரம் இந்த பழங்குடியின மக்கள் அபிவிருத்தியடைந்த வடக்கு சூடானில் வேலை தேடிச் செல்வது தடை செய்யப்பட்டது. வடக்கு சூடானியர்கள் தென் பகுதி வருவதும் தடை செய்யப்பட்டது. வடக்கையும் தெற்கையும் ஆளரவமற்ற சூனியப்பகுதி ஒன்று பிரித்தது. பிரிட்டிஷார் இந்தப் பிரித்தாளும் கொள்கையை 1930-ஆம் ஆண்டு சட்டம் போட்டு நடைமுறைப்படுத்தினர்.

1956-ஆம் ஆண்டு, இரண்டாம் உலகப்போரில் பலவீனமடைந்த பிரிட்டன் சூடானுக்கு சுதந்திரம் வழங்கி விட்டு வெளியேறியது. போகும் போது ஆட்சிப் பொறுப்பை அரபு மொழி பேசும் பெரும்பான்மையினரின் கையில் ஒப்படைத்து விட்டுச் சென்றது. தேசியவாத, மதவாத சக்திகளின் பிடியில் இருந்த அரசியல் கட்சிகள், நாடு முழுவதும் அரபுமயமாக்கும் நடவடிக்கையில் இறங்கின. தெற்கு மாநிலங்களில் இருந்து கிறிஸ்தவ மிஷனரிகள் வெளியேற்றப்பட்டன. அந்த இடத்தில் மதம் பரப்புவதற்கு இசுலாமிய மிஷனரிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது. தெற்குப் பழங்குடியின மக்கள் இதனை எதிர்த்து கிளர்ச்சி செய்தனர். சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இராணுவம் சதிப்புரட்சி மூலம் ஆட்சியைக் கைப்பற்றியது. ஆனால் வறட்சி, உணவுப் பற்றாக்குறை ஆகியன மக்களைப் பாதித்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்கள், மாணவர்கள் வீதிகளில் இறங்கி அரசுக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர். இராணுவ ஆட்சியாளர்கள் மீண்டும் பாராளுமன்றத்தை இயங்க அனுமதித்த போதும் மக்கள் புரட்சி அடங்கவில்லை.

1969-ஆம் ஆண்டு மீண்டும் ஒரு இராணுவ சதிப்புரட்சி ஏற்பட்டது. இம்முறை ஆட்சியை பொறுப்பெடுத்த நிமேரிக்கு சூடான் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவு வழங்கியது. கம்யூனிஸ்ட் கட்சி மூலமாக சோவியத் யூனியனின் ஆதரவு கிடைத்தது. சில சோசலிச சீர்திருத்தங்கள் நடைமுறைக்கு வந்தன. நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. 1971-ஆம் ஆண்டு டார்பூர் பிராந்தியத்தில் முதன் முதலாக எண்ணெய் கண்டுபிடிக்கப்பட்டது. ஜனாதிபதியாக இருந்த நிமேரி ஒரு கம்யூனிஸ்டோ அல்லது சோசலிஸ்டோ அல்ல. தேவைக்கு யாரையும் பயன்படுத்தும் சந்தர்ப்பவாதி. நிமேரி லிபியாவுடனும், எகிப்துடனும் ஒரு பொருளாதார கூட்டமைப்பை ஏற்படுத்தும் திட்டங்களில் இறங்கினார். இது கம்யூனிஸ்ட் கட்சிக்கு எரிச்சலூட்டியது. முரண்பாடுகள் தீர்க்கமுடியாமல் போன கட்டத்தில் கம்யூனிஸ்ட்டுகள் வேட்டையாடப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர், அல்லது கொலை செய்யப்பட்டனர். தலைவர்கள் நாட்டை விட்டோடி வெளிநாடுகளில் புகலிடம் தேடினர். இதன் விளைவாக சோவியத் யூனியன் தனது உறவை துண்டித்துக் கொண்டது.

இந்த சந்தர்ப்பத்திற்காக காத்துக் கொண்டிருந்த அமெரிக்கா நிலைமையை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி இப்பிரச்சினையில் நுழைந்தது. சூடான் அரசுக்கு ஆயுத, நிதி உதவி வழங்கியது. நிபந்தனையாக தெற்குப் பகுதி கிளர்ச்சியாளருடன் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணும்படி வற்புறுத்தப்பட்டது. சர்வதேச அழுத்தத்தின்படி 'அடிஸ் அபெபா'வில் (எத்தியோப்பிய தலைநகர்) கைச்சாத்திட்ட சமாதான ஒப்பந்தம் சில ஆண்டுகள் அமலில் இருந்தது. கம்யூனிஸ்ட்டுகளை விரட்டி விட்டு மத்திய அரசில் வலதுசாரிகளோடு கூட்டுச் சேர்ந்திருந்த நிமேரி, இஸ்லாமிய ஷரியா சட்டத்தை அமல்படுத்தினார். சிறுபான்மையினங்களுக்கு இடையில் பூசல்களை ஏற்படுத்தும் நோக்கத்தோடு தெற்குப் பகுதியை மூன்று நிர்வாக அலகுகளாகப் பிரித்தார். நாடளாவிய ஷரியா சட்ட ஆட்சியை எதிர்த்து தென்பகுதி மாநிலங்கள் கிளர்ந்தெழுந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'பொர்' நகரில் இருந்த இராணுவ முகாம்களில் சிப்பாய்க் கலகம் மூண்டது. கிளர்ச்சியை அடக்க அனுப்பப்பட்ட கேணல் ஜோன் கறேங் கிளர்ச்சியாளருடன் சேர்ந்து கொண்டார். சூடான் மக்கள் விடுதலை இயக்கம் (SPLM) ஆரம்பிக்கப்பட்டது. தென் பகுதியில் டிங்கா இன மக்கள் பெரும்பான்மையாக வாழ்வதும், ஜோன் கறேங் ஒரு டிங்கா இனத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆப்பிரிக்காவில், எதுவும் எப்போதும் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப மாறும் குணவியல்பு கொண்டவை. SPLM ஆரம்ப காலங்களில் மார்க்சியம் பேசியது. அதற்கு காரணம், அமெரிக்கா மத்திய அரசை ஆதரித்தது மட்டுமல்ல. அயலில் இருந்த (கம்யூனிச) எத்தியோப்பியாவின் உதவி கிடைத்து வந்ததும்தான்.

தெற்கில் பிரச்சினை தீர்ந்த நேரம், வடக்கில் பிரச்சினை ஆரம்பமாகியது. சமாதான உடன்படிக்கை வடக்கில் இசுலாமிய கடும்போக்காளர்களை தீவிரப்படுத்தியது. 'தெற்குப் பயங்கரவாதிகளிடம் தேசத்தை அடமானம் வைத்து விட்டதாக' செய்த பிரச்சாரத்திற்கு ஆதரவு பெருகியது. மீண்டும் கார்ட்டூமில் சதிப்புரட்சி இடம்பெற்றது. பதவியில் இருந்த நிமேரி, எத்தியோப்பிய யூதர்களை இஸ்ரேலுக்கு செல்ல உதவியமை, ஐரோப்பிய அணுக்கழிவுகளைக் கொட்டுவதற்கு அனுமதித்தது போன்ற காரணங்களும் சதிப்புரட்சிக்கு மேலதிக மக்கள் ஆதரவைக் கொடுத்திருந்தன. 1989-இல், இராணுவத் தளபதி பஷீர் இசுலாமிய மத அடிப்படைவாதக் கட்சியான தேசிய இஸ்லாமிய முன்னணியுடன் (NIF) சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றினார். (பிரிட்டிஷ் கால) அரசியல் நிர்ணய சட்டம் ரத்து செய்யப்பட்டது. அதற்குப் பதிலாக முழுமையான இசுலாமிய சட்டத்தை அமல்படுத்தியது. கடும்போக்காளரான NIF தலைவர் ஹசன் அல் துரபி, பாரிஸ் சொர்போன் பல்கலைகழகத்தில் கற்ற விரிவுரையாளர். அரபு - இசுலாமிய காங்கிரஸின் ஸ்தாபகர்களில் ஒருவர்.

புதிய சூடானிய அரசாங்கத்தில், அமெரிக்க எதிர்ப்பு இசுலாமிய அடிப்படைவாதிகளின் ஆதிக்கம் நிலவுவதை அமெரிக்கா விரும்பவில்லை. உடனடியாக மத்திய அரசுடனான உறவைத் துண்டித்துக் கொண்டது. அதற்குப் பதிலாக தெற்கில் இருந்த கிளர்ச்சியாளருக்கு (SPLM) உதவி செய்தது. அதே காலகட்டத்தில் எத்தியோப்பியாவில் கம்யூனிச அரசு கவிழ்ந்திருந்தது. அதனால் SPLM-க்கு அமெரிக்காவின் உதவி ஒரு வரப்பிரசாதம். நான் சந்தித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னாள் SPLM போராளிகள் சிலர், யார் உதவி செய்தாலும் தமது நலன்களே முக்கியம் என்று நியாயப்படுத்தினர். அதே நேரம், தாம் தென் சூடானில் கிறிஸ்தவ மதத்தைப் பாதுகாக்க போராடுவதாக கூறுவது கூட மேற்குலகை கவரும் தந்திரம் மட்டுமே என ஒப்புக் கொண்டனர். இந்த முன்னாள் போராளிகள் கொடுத்த தகவல்களின் படி SPLM தலைவர்கள் எண்ணெய் கம்பெனிகளை அச்சுறுத்தி வாங்கும் கப்பப்பணத்தில் தம்மை வளப்படுத்திக் கொள்கின்றனர். மேற்குலக மக்கள், SPLM கிறிஸ்தவ சிறுபான்மையினரின் உரிமைக்காக இசுலாமிய பேரினவாத வடக்குடன் மோதிக் கொண்டிருப்பதாக கருதிக் கொண்டிருக்கிறார்கள். உண்மையில் போர் முழுக்க முழுக்க எண்ணெய் உற்பத்தியில் கிடைக்கும் வருமானத்தைப் பங்கு போடுவதற்காகவே நடக்கின்றது.

மேற்குலக நாடுகள் சூடான் அரசிற்கும், தென்பகுதி போராளிக் குழுக்களுக்கும் கொடுத்த அழுத்தம் காரணமாக நடந்த பேச்சுவார்த்தையின் நிமித்தம், 2002-ஆம் ஆண்டு ஒரு அமைதி உடன்படிக்கை எட்டப்பட்டது. 2005-ஆம் ஆண்டு அமலுக்கு வந்த Comprehensive Peace Agreement (CPA) தென் மாநிலங்களுக்கு 6 ஆண்டுகள் தன்னாட்சி அதிகாரம் வழங்கியது. தலைநகராக ஜூபாவை கொண்ட மாநில அரசு சொந்தமாக கொடி வைத்திருக்க முடியும். 2011-ஆம் ஆண்டு நடைபெறவுள்ள வாக்கெடுப்பின் மூலம் சூடானுடன் இணைந்திருப்பதா அல்லது சுதந்திரமாக பிரிந்து போவதா எனத் தீர்மானிக்கப்படும். மத்திய அரசிலும் மாற்றங்கள் கொண்டு வரப்பட்டு கிளர்ச்சித் தலைவர் ஜோன் கறேங் உப-ஜனாதிபதியானார். சமாதானத்தைக் கண்காணிக்க ஐ.நா. மன்றம் UNMIS என்ற சமாதானப் படையை அனுப்பி வைத்தது.

அமைதி உடன்படிக்கை ஏற்பட்ட பிறகு தென்பகுதி மக்களுக்கு மெல்ல மெல்ல மாயத்திரை விலகியது. அரசியல் சுதந்திரம், அதிகாரப் பரவலாக்கல் எல்லாம் சரிதான். ஆனால் பிரதேச அபிவிருத்திக்காக சர்வதேச சமூகம் வாக்களித்த நிதியுதவி எங்கே? இதுவரை சொற்பத்தொகை மட்டுமே வந்து சேர்ந்துள்ளது. அதை விட தெற்கிற்கு உரிமையான எண்ணெய் வருமானத்தில் ஒரு பகுதி இன்று வரை கிடைக்கவில்லை. சர்வதேச சமூகம் சண்டையிட்டுக் கொண்டிருந்த இரு பகுதியினரையும் சமாதானம் செய்து வைத்தவுடன் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியஸ்தம் முடிந்து விட்டதென்று ஒதுங்கி விட்டது. அவர்களுக்கு சூடானில் இன்னுமொரு வேலை பாக்கி இருந்தது. 2003-ஆம் ஆண்டு மேற்கு சூடானில் உள்ள டார்பூர் பிராந்தியத்தில் கிளர்ச்சி வெடித்தது. அது தென்பகுதி கிளர்ச்சியை விட அதிகளவில் சர்வதேச கவனத்தை ஈர்த்தது.

Fur இன மக்களின் உறைவிடம் எனப் பொருள்படும் டார்பூர், ஒரு மலைப்பிரதேசம். Fur இன மக்களில் ஒரு பகுதியினர் சொந்த மொழியும், ஒரு பகுதினர் அரபு மொழியும் பேசினாலும் இசுலாம் மதத்தை பின்பற்றும் கருப்பின மக்கள். டார்பூரில் இனப்படுகொலை நடப்பதாகத் தீர்மானங்களை நிறைவேற்றிய ஐ.நா. சபையும், அமெரிக்காவும், சர்வதேச நாடுகளும் பிரச்சினையின் பரிமாணங்களைப் புரிந்துகொள்ள முயற்சிக்கவில்லை. கருப்பின இனங்களை, அரேபிய இனம் அழித்து வருவதாகச் சுலபமாக கூறி விட்டுச் செல்கின்றனர். அதை நம்பி டார்பூர் சென்ற உதவி நிறுவன ஊழியர்களும், ஊடகவியலாளரும் வெளி உலகம் அறியாத உண்மைகளைக் கண்டுபிடித்தனர்.

தென் பகுதி மாநிலங்கள் சுதந்திரம் கோரிப் போராடியதன் காரணம், தெளிவாகத் தெரியும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகள். நகரமயமாக்கல், தொழிற்துறை அபிவிருத்தி எல்லாம் வடக்கே மட்டும் காணப்பட்டன. தெற்கு வேண்டுமென்றே புறக்கணிக்கப்பட்டது. தென்பகுதி ஆப்பிரிக்க பழங்குடியினரின் பின்தங்கிய நிலை காரணமாக வடக்கில் அவர்கள் தாழ்ந்தவர்களாக பார்க்கப்பட்டனர். தலைநகர் கார்ட்டூமில் வாழும் இரண்டு லட்சம் டிங்கா பழங்குடியினர் 'நாகரீகமடையாத மனிதக்குரங்குகள்', 'அடிமைகள்' என்றெல்லாம் அரபு பேசும் மக்களால் தூற்றப்படுகின்றனர். பெரும்பான்மை சமூகத்தில் இனவாதம் நன்றாக வேரூன்றியுள்ளது. இதே போன்ற பொருளாதார, கலாச்சார ஏற்றத்தாழ்வு டார்பூரிலும் நிலவுகின்றது. சூடானில் டார்பூரில்தான் முதன்முதலாக பெட்ரோல் கண்டுபிடிக்கப்பட்டது. இருப்பினும் வருவாய் முழுவதும் கார்ட்டூமில் தங்கிவிடுகின்றது. டார்பூரின் அபிவிருத்திக்காக அரசு பணம் செலவழிப்பதில்லை. தென்பகுதி SPLM இயக்கத்தின் ஆயுதப் போராட்டத்தை முன்மாதிரியாக கொண்டு டார்பூர் விடுதலை முன்னணி தொடங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையே ஜனாதிபதி பஷீரின் ஆலோசகர் அல் துரபி, தெற்கு சூடானில் அமைதி உடன்படிக்கை ஏற்பட்டதை எதிர்த்து வந்தார். இதனால் துரபியை வீட்டுக்காவலில் வைத்து விட்டார் பஷீர். பின் லாடனின் நெருங்கிய நண்பர் துரபி என்பது உலகறிந்த உண்மை. துரபியின் ஆதரவாளர்கள், அல் கைதாவுடன் சேர்ந்து அரசுக்கெதிரான ஆயுதப் போராட்டத்தை டார்பூரில் இருந்து ஆரம்பித்தனர். Justice and Equality Movement (JEM) என்ற இயக்கத்தை ஸ்தாபித்து, பிராந்திய போலீசு நிலையங்களைத் தாக்கி கைப்பற்றினர். ஒரு சில நாள் சண்டையிலேயே 550 போலீஸ்காரர்கள் கொல்லப்பட்டனர். பிற அரச நிறுவனங்களும் தாக்கப்பட்டன. அதே நேரம் எரித்திரியா ஆதரவைப் பெற்ற SLM (முன்னாள் டார்பூர் விடுதலை முன்னணி) அரசுக்கெதிரான போரில் இணைந்து கொண்டது. அரசு பதிலடியாக கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சு நடத்தி கிளர்ச்சியை அடக்கியது.

மத்திய அரசு ஆயுத, நிதியுதவியில் 'ஜன்ஜவீட்' என்ற துணைப்படை அமைக்கப்பட்டது. இந்த துணைப்படைதான் நேரடியாக இனப் படுகொலை குற்றச்சாட்டுக்கு ஆளானது. 'குதிரையில் வரும் பிசாசுகள்' என்ற பொருள்படும் ஜன்ஜவீட், கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவான கிராமங்களைத் தாக்குவதற்கு தடை எதுவும் இருக்கவில்லை. கண்ணில் பட்ட ஆண்கள் கொல்லப்பட்டனர், பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாகினர், குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்டன. சில இடங்களில் மொத்த கிராமமே பூண்டோடு அழிக்கப்பட்டது. மக்கள் அகதிகளாக அயல்நாடான சாட்டிற்கு இடம்பெயர்ந்தனர். சில நேரம் சாட் எல்லை கூட அவர்களுக்கு பாதுகாப்பானதாக இருக்கவில்லை. அரசாங்கம் கலாச்சார வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு ஜன்ஜவீட் எதிர்ப்புரட்சியாளரை உருவாக்கியுள்ளது.

கொல்பவர்களும் கொல்லப்படுபவர்களும் ஒரே இனத்தை சேர்ந்தவர்கள், ஒரே மதத்தைப் பின்பற்றுபவர்கள். ஆனால் அவர்களை இரு வேறு கலாச்சாரங்கள் பிரிக்கின்றன. ஒரு பகுதி (ஜன்ஜவீட்) அரபுக் கலாச்சாரத்தையும், மறு பகுதி (போராளிக் குழுக்கள்) புராதன ஆப்பிரிக்க கலாச்சாரத்தையும் பின்பற்றுகின்றனர். சில நேரம் இந்த வித்தியாசம் அவ்வளவு தெளிவாக தெரிவதில்லை. இதற்கிடையே JEM



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசுலாமிய அடிப்படைவாதப் போராட்டத்தை முன்னெடுக்கின்றது. அல் கைதாவுடன் தொடர்புள்ளது. ஆனால் அதைப் பற்றி சர்வதேச சமூகம் அதிக அக்கறை கொள்ளவில்லை. இனப்படுகொலையால் பாதிக்கப்பட்ட இனத்தின் பிரதிநிதியாக JEM காண்பிக்கப்படுகின்றது. JEM தலைவர்கள் தமக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்த சந்தோஷத்தில் கடும்போக்கு இசுலாமிய முகத்தை வெளிநாடுகளில் காட்டுவதில்லை.

2006-ஆம் ஆண்டு சர்வதேச அழுத்தம் காரணமாக டார்பூர் போராளிக் குழுக்களுக்கும், சூடான் அரசுக்குமிடையில் ஒரு சமாதான ஒப்பந்தம் போடப்பட்டது. அத்துடன் பிரச்சினை முடிந்தது என்று யாரும் நிம்மதிப் பெருமூச்சு விட முடியவில்லை. இம்முறை குட்டையைக் குழப்பியது சர்வதேச சமூகம் (மேற்கத்திய நாடுகள் என்று திருத்தி வாசிக்கவும்). சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் டார்பூர் போர்க்கால குற்றங்கள் விசாரணைக்கு கொண்டு வரப்பட்டன. அதன்படி சூடான் அதிபர் பஷீர் குற்றவாளியாகக் காணப்பட்டு, கைது செய்யுமாறு நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது. சூடான் அரசு சர்வதேச நீதிமன்றத்தை அங்கீகரிக்கவில்லை என்று அறிவித்தது. நீதிமன்றத்திற்கு சவால் விடுவது போல பஷீர் அரபு நாடுகளுக்கு விஜயம் செய்தார். சர்வதேச நீதிமன்ற விசாரணைகள் சூடானில் அமைதியைக் கெடுக்கும் என்று அரபு நாடுகளின் சங்கம் கருத்துத் தெரிவித்துள்ளது. அதே நேரம் தமது பங்காளி குற்றவாளி என உறுதிப்படுத்தப்பட்டு விட்டதால், தாம் இனிமேல் சமாதான ஒப்பந்தத்தை மதிக்க வேண்டிய அவசியம் இல்லை என்று கிளர்ச்சிக் குழுக்கள் அறிவித்துள்ளன.

உலக நாடுகளால் டார்பூர் யுத்தம் ஒரு இனப் படுகொலை என்று புரிந்து கொள்ளப்பட்டாலும், அது தண்ணீருக்காக நடந்த யுத்தம் என்றும் கருதப்படுகின்றது. மனித குலம் தோன்றிய காலத்தில் இருந்தே இயற்கை வளத்தைக் கைப்பற்றுவதற்கான போட்டியால் விளைந்த யுத்தங்கள் வரலாறு நெடுகிலும் காணக் கிடைக்கின்றன. டார்பூர் பிராந்தியத்தில் உள்ள நீர் நிலைகள், மக்கள் பெருக்கத்தினால் ஏற்பட்ட தேவையை பூர்த்தி செய்யக் கூடியதாக இல்லை. இதனால் கிணறுகள், குளங்களைக் கைப்பற்றுவதற்காக இனக்குழுக்களுக்கு இடையே அடிக்கடி தகராறு ஏற்படுவது வழமை. இதனால் 'ஒரு இனம் மற்ற இனத்தினை கொன்று குடியிருப்புக்களை எரித்து, நிலங்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபகரிக்கும் நடவடிக்கை', நவீன அரசியல் அகராதியின் படி இனப்பிரச்சினை என்று கூறப்படுகின்றது. டார்பூரில் அபரிமிதமான நிலத்தடி நீர் காணப்படுவதாகவும், இதை பாவனைக்கு கொண்டுவரும் வேளையில் இனங்களுக்கிடையிலான பூசல்கள் மறையும் என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே அமெரிக்காவுக்கும், சீனாவுக்கும் இடையிலான பனிப்போர் காரணமாகவும் சூடான் மக்கள் தொடர்ந்து இரத்தம் சிந்தி வருகின்றனர். மேற்குலக எதிரிகளின் பட்டியலில் முதன்மையான இடம் வகிக்கும் சூடான், சீனாவுடன் சிறந்த வர்த்தக உறவுகளைப் பேணி வருகின்றது. மேற்குலகம் பொருளாதார திட்டங்களுக்கு மனித உரிமைப் பிரச்சினையை நிபந்தனைகளாக விதிப்பதைப் போல சீனா நடந்து கொள்வதில்லை. சீனா உள்நாட்டு பிரச்சினையில் தலையிடாத போக்கை கடைப்பிடிக்கின்றமை சூடானிய அரசுக்கு அனுகூலமானது. சூடானில் உள்ள என்ணெய் கிணறுகள் யாவும் சீன நிறுவனங்களால் நிர்வகிக்கப்படுகின்றன.

அமெரிக்கா என்னதான் மனித உரிமைகளுக்காகப் பாடுபடுவதாக வெளி உலகிற்கு காட்டிக் கொண்டாலும், சூடான் எண்ணெய் வளத்தின் மீது கண் வைத்திருப்பதை மறைக்க முடியாது. நைல் நதியின் நீர்வளத்தை வர்த்தக நோக்கோடு பயன்படுத்தும் திட்டமும் உள்ளது. மனித உரிமை மீறல்களைக் காரணமாக காட்டி, சீனா சூடானுடனான இராஜதந்திர உறவை முறித்துக்கொள்ள வேண்டும் என அமெரிக்கா ஐ.நா. சபை மட்டத்தில் அழுத்தம் பிரயோகித்து வருகின்றது. ஆனால் இப்போதெல்லாம் சீனாவோ மனித உரிமை மாய்மாலங்களுக்கு ஏமாறும் வகையாகத் தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 11. லைபீரியா: ஐக்கிய அடிமைகளின் குடியரசு

'பானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே' என்று சொல்வார்கள். உள்நாட்டு யுத்தத்திலே மூழ்கிப் போயிருந்த மேற்கு ஆப்பிரிக்க நாடான லைபீரியாவின் மீதான அமெரிக்க படையெடுப்பு பற்றிய கதைகள் அடிபட்ட நேரத்தில் நடந்த (முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி) புஷ்ஷின் ஆப்பிரிக்க விஜயம் அமெரிக்காவின் வருங்காலத் திட்டங்களைக் கட்டியம் கூறியது. நீண்டகாலமாக புறக்கணிக்கப்பட்ட ஆப்பிரிக்கக் கண்டத்தை இறுதியில் அமெரிக்க அரசு 'கண்டுபிடித்து' விட்டது என்று பலர் நினைத்தார்கள்.

புஷ் விஜயம் செய்த நாடுகளின் பட்டியல் அமெரிக்க அரசின் உண்மையான நோக்கங்களை எடுத்துக் காட்டுகிறது. காம்பியா : புதிய எண்ணெய் வள நாடு, தென்னாப்பிரிக்கா : தென்பகுதி பிராந்திய வல்லரசு, நைஜீரியா : எண்ணெய் ஏற்றுமதி செய்யும் ஆப்பிரிக்க நாடுகளில் முதன்மையானது. இதைத் தவிர கொடூரமான உள்நாட்டு யுத்தத்தால் உலகச் செய்திகளில் முதலிடம் பெற்ற லைபீரியா பற்றிய அமெரிக்க நிலைப்பாடு குறித்தே பலர் அறிய ஆவலாயிருந்தனர்.

லைபீரியா, முழு ஆப்பிரிக்கக் கண்டத்திலேயே முதன்முதலாக (1847) சுதந்திரமடைந்த நாடு. இதே காலகட்டத்தில் பிற ஆப்பிரிக்க நாடுகள் ஐரோப்பியக் காலனிகளாகிக் கொண்டிருந்தன. யூதர்கள் இஸ்ரேலுக்குத் திரும்பியது போல 'தாயகம்' திரும்பிய அமெரிக்க - ஆப்பிரிக்க அடிமைகள் குடியேற்றப்பட்ட நாடுதான் லைபீரியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுதலை செய்யப்பட்ட 'அமெரிக்க அடிமைகளின் தாயகம்' என்ற பெருமைக்குரிய வரலாற்றைக் கொண்ட லைபீரியாவை, இன்னொரு கோணத்திலிருந்து பார்த்தால் அதுதான் ஆப்பிரிக்காவில் உருவான முதலாவது அமெரிக்க காலனி என்ற உண்மை தெளிவாகும்.

19-ஆம் நூற்றாண்டில் ஐக்கிய அமெரிக்க குடியரசை ஸ்தாபித்த வட மாநிலங்களுக்கும், தென் மாநிலங்களுக்கும் இடையில் போர் மூண்டது. அமெரிக்காவின் உள்நாட்டு யுத்தமென இது வரலாற்று பாடப்புத்தகங்களில் எழுதப்பட்டுள்ளது. இந்தப் போருக்கு பொருளாதார முரண்பாடுகளும் முக்கியக் காரணியாகும். புதிய அமெரிக்க குடியரசான வடமாநிலங்கள் முதலாளித்துவப் பொருளாதாரக் கொள்கையை வரித்துக் கொண்டன. இதற்கு மாறாக ஆப்பிரிக்க அடிமைகளின் உழைப்பில் தங்கியிருந்த தென் மாநிலங்களில் நிலவுடைமை சார்ந்த பொருளாதாரம் இருந்து வந்தது. தெற்கில் நிலவுடைமைப் பொருளாதாரத்தை அழித்து, அங்கே ஐக்கிய அமெரிக்க குடியரசை விஸ்தரிக்கும் நோக்கத்தோடுதான் அன்றைய ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனால் அடிமை முறை ஒழிக்கும் சட்டம் கொண்டு வரப்பட்டது.

தென்மாநிலங்கள் தம்மிடமிருந்த கருப்பின அடிமைகளை விடுதலை செய்து முதலாளித்துவப் பொருளாதாரத்தை ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை வந்தது. அப்போது இன்னொரு பிரச்சினை உருவானது. அமெரிக்க பிரஜைகளாகப் போகும் விடுதலை செய்யப்பட்ட கருப்பின அடிமைகள் வருங்கால அமெரிக்காவின் தீர்க்கமான அரசியல் சக்தியாக வருவதை பலர் விரும்பவில்லை. இதனைக் கருத்தில் கொண்ட முன்னாள் அடிமைகளின் எஜமானர்கள் 'அமெரிக்க காலனிய சங்கம்' என்ற ஒன்றை உருவாக்கினார்கள். 'விடுதலை செய்யப்பட்ட அடிமைகளை அவர்களது தாயகத்தில் குடியேற்றுவது' என்ற முற்போக்கானதாகக் காட்டிக்கொண்ட குறிக்கோளைக் கொண்ட அந்தச் சங்கம் அதற்கென மேற்கு ஆப்பிரிக்காவில் ஒரு பகுதி நிலத்தை வாங்கியது. அந்த நிலம்தான் லைபீரியா.

1822-இல் லைபீரியாவில் அமெரிக்காவிலிருந்து வந்த முன்னாள் அடிமைகளின் முதலாவது காலனி உருவாகியது. அமெரிக்க காலனிய சங்கத்தால் வாங்கப்பட்ட நிலம், யாருமே வாழாத சூனியப் பிரதேசமாக இருக்கவில்லை. அங்கு 16 வேறுபட்ட இன மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வந்தனர். இவர்களிலே இசுலாமியர்களான மான்டே மொழி பேசும் மக்கள் போர்த்துக்கீசருடன் வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தனர். லைபீரியா என்ற அமெரிக்க காலனி உருவான பிறகு, இன்றுவரை இந்தப் பூர்வீக இனமக்கள் அரசியல் பொருளாதார ரீதியாகப் புறக்கணிக்கப்பட்டு வந்துள்ளனர். மொத்தச் சனத்தொகையில் 15 வீதமான அமெரிக்க குடியேறிகளே ஆளும் வர்க்கமாகத் தொடர்கின்றனர்.

ஆரம்பத்திலிருந்தே புதிய குடியேறிகளை, பூர்வீக மக்கள் அவநம்பிக்கையுடன் நோக்கினர். புதிதாக குடியேறிய அந்நியர்கள் விநோதமான மொழியைப் (ஆங்கிலம்) பேசினர், விசித்திரமான மதத்தைப் (கிறிஸ்தவம்) பின்பற்றினர். மறுபக்கத்தில் அமெரிக்க குடியேறிகள் தம்மை மட்டும் நாகரீகமடைந்தவர்களாக கருதிக் கொண்டனர். பூர்வீக மக்களை 'நாகரீகமடையாத காட்டுவாசிகள்' என அழைத்தனர். பூர்வீக மக்களின் விருப்பங்களைப் புறக்கணித்து, தம் இஷ்டப்படி மொன்றோவியாவை (அமெரிக்க ஜனாதிபதி மொன்றோவின் பெயரால்) தலைநகராகக் கொண்ட லைபீரிய குடியரசை அமைத்தனர். புதிய தேசத்தின் அரசியல் நிர்ணயச் சட்டம் அமெரிக்காவில்தான் தயாரிக்கப்பட்டது. அமெரிக்கக் கொடியை போன்ற கொடி, தேசியக் கொடியாக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்று வரை எல்லாம் அமெரிக்காவில் இருந்துதான் இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன.

இன்றைய லைபீரியா ஆட்சியாளர்கள் அனைவரும் முன்னாள் அமெரிக்க அடிமைகளின் வழித்தோன்றல்கள். இன்றுவரை தமது தந்தையர் நாடான அமெரிக்காவுடன் சிறந்த நட்புறவுகளைப் பேணி வருகின்றனர். அமெரிக்க வர்த்தக ஸ்தாபனங்கள் லைபீரியாவின் கனிம, பொருள் வளங்களின் மீது ஏகபோக உரிமை பெற்றுள்ளன. உதாரணமாக ரப்பர் ஏற்றுமதிக்கு 'ஃபயர்ஸ்டோன்', 'குட்றிச்' ஆகிய பன்னாட்டு நிறுவனங்கள் 99 ஆண்டு காலத்திற்கு ஒப்பந்தம் போட்டுள்ளன. இதை விட பல எண்ணெய் தாங்கிக் கப்பல்கள் இளகிய சட்டங்களைக் கொண்ட லைபீரியாவில் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்த முக்கியத்துவம் காரணமாக லைபீரிய அரசியல் ஆட்டம் காணும்போதெல்லாம் அமெரிக்கா தலையிட்டு ஸ்திரப்படுத்தி வந்தது.

நீண்டகாலமாக பொருளாதார வளர்ச்சியானது பொதுமக்களின் வாழ்க்கை வசதிகளை அதிகரித்திருந்த போதும் எண்பதுகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட உலகப் பொருளாதாரப் பின்னடைவு, லைபீரியாவிலும் பல தாக்கங்களை உருவாக்கியது. ஏற்றுமதி குறைந்து வேலை வாய்ப்பின்மை அதிகரித்தது. அரிசி விலையுயர்வால் மக்கள் கலகம் செய்தனர். ஊழல் ஆட்சி, எதிர்க்கட்சிகளின் மீதான தடை இவற்றிற்கு மத்தியில் 'லைபீரிய தேசபக்த முன்னணி' என்ற ஆயுதமேந்திய குழு அரச படைகளுடன் சண்டையிட்டு பல பகுதிகளைக் கைப்பற்றியது. இந்த ஆயுதபாணிக் குழுவின் தலைவர் சார்ல்ஸ் டெய்லர், கடைசி நேரத்தில் தலைநகரில் தோன்றிய வேறு சில அரசியல் குழுக்களுடன் அரசாங்கத்தைப் பங்குபோட வேண்டியதாயிற்று.

பின்னர் நடந்த பொதுத்தேர்தலில், முன்னாள் போராளியான சார்ல்ஸ் டெய்லர் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். டெய்லரின் கட்சிக்கு அயல் நாடான சியாரா லியோனிலிருந்து உதவி கிடைத்து வந்தது. லிபியாவும் ஆதரவளித்தது. இன்று ஐக்கிய நாடுகள் சபையின் விசேட நீதிமன்றம் சியாரா லியோன் தொடர்புக்காக விசாரணை மேற்கொள்ள விரும்புகிறது. வைரக்கற்கள் ஏற்றுமதி செய்யும் சியாரா லியோனை முன்பு ஆண்ட போராளிக்குழு 'சட்டவிரோத' வைரக்கல் விற்பனையில் ஈடுபட்டு வந்தது. இதில் சார்ல்ஸ் டெய்லருக்கும் பங்கிருக்கலாம் என நம்பப்படுகின்றது. நீண்டகாலமாக சர்வதேச வைர வர்த்தகத்தில் ஈடுபட்டு வந்தன மேற்கத்திய நாடுகள். இலாபத்தில் பங்கு கேட்டு உள்ளூர் அரசியல் சக்திகள் உரிமை பாராட்ட விரும்பிய போதுதான் பிரச்சினை வந்தது.

அன்று சொந்த நாட்டின் வளத்திற்காக உரிமை பாராட்டியவர்கள் அனைவரும், பின்னர் சர்வதேச மட்டத்தில் போர்க் குற்றவாளிகளாகத் தூற்றப்பட்டனர். இன்று சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தினால் விசாரிக்கப்படும் சார்லஸ் டெய்லர், பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பாகவும் வேண்டப்படும் நபராகியுள்ளார். யுத்தம் நடந்த காலத்தில் டெய்லரின் கட்சியைச் சேர்ந்த போராளிகள் பல மனித உரிமை மீறல்களைச் செய்தது உண்மைதான். அப்பாவிப் பொதுமக்கள் படுகொலை, பாலியல் வல்லுறவுகள், எதிரிகளை அங்கவீனப்படுத்தியமை போன்ற பல குற்றச் செயல்கள் நடந்துள்ளன. ஆனால் இவற்றிற்கு டெய்லரின் குழு மட்டுமே பொறுப்பல்ல.

இன்று ஆட்சியில் இருக்கும் அரச படைகளும் இதுபோன்ற குற்றங்களை இழைத்துள்ளன. இன்று செய்தி ஊடகங்களால் நல்லவர்கள் போல காட்டப்படும் கிளர்ச்சியாளர்களும் மேற்கண்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல்களில் ஈடுபட்டுள்ளனர். டெய்லரை விரட்டும் முயற்சியிலிறங்கிய அமெரிக்கா கிளர்ச்சியாளருக்கு மறைமுக உதவி வழங்கியது. சமாதானம் நிலைநாட்டவென ஐ.நா. பாதுகாப்புச் சபையின் உத்தரவின்பேரில் வந்திறங்கியுள்ள பிராந்திய வல்லரசு நைஜீரியா தலைமையிலான சமாதானப் படைகளுக்கும் அமெரிக்கா பின்னணியிலுள்ளது. சமாதானப் படைக்கு மேலதிக நிதி வழங்குமாறு அமெரிக்காவை நைஜீரியா கேட்டதிலிருந்தே இது தெளிவாகும்.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷின் ஆப்பிரிக்க விஜயத்திற்கும், லைபீரிய பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதற்கும் உள்ள தொடர்பென்ன? இந்தத் திடீர் அக்கறைக்கு காரணம் எண்ணெய்தான்; வேறு என்ன? அமெரிக்காவின் மொத்த எண்ணெய் இறக்குமதியில் 18 வீதம் ஆப்பிரிக்க கண்டத்தில் இருந்து வருகின்றது. பெருமளவு நீண்டகால எண்ணெய் ஏற்றுமதி நாடுகளான நைஜீரியா, அங்கோலாவிலிருந்து வருகின்றது. காம்ரூன், சாட், சூடான் போன்ற இன்னபிற நாடுகளின் பெற்றோலிய உற்பத்தி வருங்காலத்தில் அதிகரிக்கப்படவிருக்கிறது. மேலும் ஆப்பிரிக்க எண்ணெய், வளைகுடா எண்ணெய் போலன்றி உயர்தரமானது. அதாவது அதிகமாக சுத்திகரிக்கப்பட வேண்டிய தேவையில்லை. இவற்றைவிட எண்ணெய் வள நாடுகளை சூழவிருக்கும் கினியா குடாக்கடலிலிருந்து, அட்லாண்டிக் சமுத்திரத்தினூடாக அமெரிக்கா நோக்கிய கப்பல் போக்குவரத்து இலகுவானது, மலிவானது. இவற்றையெல்லாம் வைத்துப் பார்த்தால் வருங்காலத்தில் ஆப்பிரிக்க எண்ணெய் உற்பத்தி அதிகரிக்கப்படும் சாத்தியக்கூறுகள் தென்படுகின்றன.

லைபீரியாவில் ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த பிள்ளைகள் அமெரிக்காவில் உயர்கல்வி கற்றுத் திரும்புவது சர்வசாதாரணம். போர்க் குற்றவாளி டெய்லரும் அவ்வாறான அமெரிக்கப் பட்டதாரிதான். இதைவிட 1997-ஆம் ஆண்டு சர்வதேச கண்காணிப்பாளர்கள் முன்னிலையில் நடந்த பொதுத் தேர்தலில் ஜனநாயகப் பூர்வமாக பெரும்பான்மை மக்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட ஜனாதிபதிதான் டெய்லர். பல தடவை தாம் சர்வாதிகாரிகளுக்கெதிராக செயற்படுவதாகத் தெரிவிக்கும் 'சர்வதேச சமூகம்' லைபீரியாவில் ஜனநாயகத்திற்கெதிராக செயற்பட்டது கவனிக்கத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 12. அங்கோலாவின் அலங்கோலம்: பனிப்போரின் பதிலிப் போர்

இங்கிலாந்து அரசவம்சத்தின் கவர்ச்சி நட்சத்திரமான டயானா, அங்கோலாவில் கண்ணிவெடி அகற்றும் தொண்டராகச் சென்ற போது தொலைக்காட்சிக் காமெராக்களும் பின்தொடர்ந்தன. ஆப்பிரிக்க கண்டத்தில் உள்நாட்டு யுத்தத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட அங்கோலாவை அப்போதுதான் பலர் 'கண்டுபிடித்தார்கள்'. சர்வதேச அரசியல் அறிவுள்ளவர்களுக்கு அங்கோலாவின் தசாப்த கால சூடான பனிப்போர் ஏற்கெனவே தெரிந்த விசயம்தான். அங்கோலாவின் உள்நாட்டுப் போரை இரண்டு கட்டங்களாகப் பிரிக்கலாம். ஒன்று, பனிப்போர் காலகட்டம். பதினைந்து ஆண்டுகளாக நடந்த யுத்தத்தில் இரு தரப்பாலும் வெல்ல முடியவில்லை. இரண்டு, உலகமயமாக்கல் காலகட்டம். இதில் அரச படைகள் இறுதியாக வெற்றியீட்டியுள்ளன. நவீனகால போரியல் வரலாறு குறித்து அறிய விரும்புவோருக்கு அங்கோலா போர் ஒரு நல்ல பாடம்.

16-ஆம் நூற்றாண்டில் போர்த்துகேயர் வரும் வரை, அங்கோலாவின் தலைநகர் லுவாண்டாவில் இருந்து வடக்கிலும், தெற்கிலும், கிழக்கிலுமாக மூன்று இராஜ்யங்கள் இருந்துள்ளன. ஒரு இராஜ்ஜியத்தை ஆண்ட 'நுகொலா (கிளுவஞ்சே)' என்ற மன்னனின் பெயரை போர்த்துகேயர் முழு நிலப்பரப்பிற்கும் வைத்து விட்டனர். காலனிய காலகட்டத்தில் ஐரோப்பியர்கள் காலனி நாடுகளுடன் இரண்டு வகையான உறவைக் கொண்டிருந்தனர். ஒன்று, வர்த்தக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையம் ஒன்றை நிறுவி வியாபாரம் செய்வது. இரண்டு, அந்தப் பிரதேசத்தை தமது நேரடியான ஆட்சியின் கீழ் கொண்டு வருவது. ஆரம்பத்தில் போர்த்துக்கேயர்கள், அங்கோலா மன்னனுடன் சமமான இராஜதந்திர உறவைப் பேணி வந்துள்ளனர். இந்த நல்லுறவு காரணமாக மன்னனும் கத்தோலிக்க மதத்தை தழுவி, தேவாலயம் கட்டவும் அனுமதி அளித்துள்ளான்.

பிரேசிலுக்கு தேவையான அடிமைகளை போர்த்துக்கேயர்கள் அங்கோலாவில் பிடித்து ஏற்றுமதி செய்து வந்தார்கள். மன்னர்களுடன் ஏற்பட்ட வியாபாரப் பிரச்சினையை தொடர்ந்து போர்த்துக்கேய இராணுவ நடவடிக்கைகள் அரசாட்சிக்கு முடிவு கட்டின. கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றியதுடன் நில்லாமல் கனிம வளங்களைத் தேடி நாட்டின் உள்பகுதிகளுக்கும் படையெடுத்துச் சென்று ஆக்கிரமித்தனர். இவ்வாறு போர்த்துகேய காலனிய காலகட்டம் ஆரம்பமாகியது. 19-ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ், ஜெர்மனி, பிரித்தானியா ஆகிய நாடுகளை அடக்கக்கூடிய அளவு பரந்த நிலப்பரப்பை தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தனர்.

19-ஆம் நூற்றாண்டில் அடிமை வியாபாரத்தின் மீது சர்வதேசத் தடை வந்தது. போர்த்துகல்லும் அதற்கு இணங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் அங்கோலாவை முழுமையான காலனியாக மாற்றும் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அங்கோலாவின் கருப்பர்களை 'நாகரீகப்படுத்துவதற்காக' கிறிஸ்தவ மதம் பரப்புபவர்களை அனுப்பி வைத்தார்கள். கத்தோலிக்க மிஷனரிகள் மட்டுமல்ல, புரட்டஸ்தாந்து மிஷனரிகளும் தாராளமாக ஆட்சேர்க்க அனுமதி வழங்கப்பட்டது. இரண்டு மதப்பிரிவுகளுக்கும் இடையில் ஒரேயொரு வித்தியாசம் மட்டுமே இருந்தது. கத்தோலிக்க மதத்தை தழுவுபவர்கள் போர்த்துக்கேய மொழியை சரளமாக கற்று மேலைத்தேய கலாச்சாரத்தை பின்பற்ற வேண்டும்.

போர்த்துக்கேயர்கள் ஆப்பிரிக்கர்களை 'நாகரீகப் படுத்திய' பின்னரும் அவர்களுக்கு சம உரிமை வழங்கவில்லை. சமூக மேல்தட்டில் வெள்ளையர்களும், அவர்களுக்கு கீழே கலப்பின "mestiços'-ம் உயர்ந்த அந்தஸ்தில் இருந்தனர். வெள்ளையின ஆணுக்கும், கருப்பினப் பெண்ணுக்கும் பிறந்த பிள்ளைகளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலப்பினத்தவர்கள் (mestiços). அன்றைய காலத்தில் ஒரு வெள்ளையினப் பெண் கருப்பின ஆணுடன் உறவு வைப்பது தடை செய்யப்பட்டிருந்தது. தடையை மீறி உறவு கொள்ளும் வெள்ளைப் பெண்ணை அவமானப்படுத்தி ஒதுக்கி வைப்பதுடன், கருப்பு ஆணைக் கொலை செய்தும் விடுவார்கள். போர்த்துகேய மொழி சரளமாகப் பேசத் தெரிந்த ஆப்பிரிக்க கருப்பர்கள் தமது அந்தஸ்தை உயர்த்த முடிந்தாலும், அவர்கள் மூன்றாவது தட்டிலேயே வைக்கப்பட்டனர். இதனால் இந்த மூன்றாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் assimilados என அழைக்கப்பட்டனர். போர்த்துக்கேய மொழி பேசும், மேலைத்தேய கல்வி கற்ற, கத்தோலிக்க assimilados பிற ஆப்பிரிக்கர்களை விட நாகரீகமடைந்தவர்களாக கருதப்பட்டனர்.

1910-ஆம் ஆண்டு அங்கோலா போர்த்துக்கல் நாட்டின் ஒரு பகுதியாகியது. 1932-இல் போர்த்துக்கல்லில் ஆட்சியைக் கைப்பற்றிய பாசிச சர்வாதிகாரி சலசார் காலத்தில், வெள்ளையர்கள் அங்கோலா சென்று குடியேறுமாறு ஊக்குவிக்கப்பட்டனர். அதற்கு முன்பு போர்த்துகல்லில் தண்டனை வழங்கப்பட்ட குற்றவாளிகளைப் பிடித்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள். அதாவது பிரிட்டிஷ் இந்தியாவில் அந்தமான் தீவைப் போல போர்த்துகல்லுக்கு அங்கோலா பயன்பட்டது. பிற்காலத்தில் திரவியம் தேட விரும்பும் போர்த்துகேய பிரஜைகள் அனைவருக்கும் அங்கோலா திறந்து விடப்பட்டது. பெருந்தோட்டங்களில் மேலாளராக, மாவட்ட வரி அறவிடுவோராக பணியாற்ற ஆயிரக்கணக்கான வெள்ளையினத்தவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது. பொருளாதார வளர்ச்சி காரணமாக புதிய தொழில் வாய்ப்புகள் பெருகின. எண்ணெய் அகழ்வு, வைரக்கல் பட்டறைகள் என்பன தொழிற்துறை வளர்ச்சி கண்டன. இதைத் தவிர தாயகத்தில் வாய்ப்பற்ற வெள்ளையின உழவர்கள் அங்கோலாவில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்திற்கு சொந்தக்காரனாக முடிந்தது. அங்கோலாவில் குடியேறிய வெள்ளையர்கள், மொத்த சனத்தொகையில் 6 சதவீதமாக மாறிவிட்டிருந்தனர். 1974-ஆம் ஆண்டு அங்கோலா சுதந்திரமடையும் வரை மூன்று இலட்சம் வெள்ளையினத்தவர்கள் வாழ்ந்து வந்தனர்.

அங்கோலாவின் வரலாற்றில் அசிமிலாடோஸ் (assimilados) உருவாக்கம் குறிப்பிடத்தக்கது. இவர்கள் தூய வெள்ளையரோ,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது கலப்பினமோ அல்ல. கருப்பினத்தவரில் இருந்து தோன்றிய மத்திய தர வர்க்கத்தை சேர்ந்தவர்கள். எமது சமூகத்தில் ஆங்கிலத்தை தாய்மொழியாகக் கருதும் 'தமிங்கிலர்கள்' என்றொரு பிரிவு உண்டல்லவா? அங்கோலாவின் அசிமிலாடோக்கள் அந்த வகையைச் சேர்ந்தவர்கள்தான். போர்த்துக்கேய மொழியைப் பேசுவதில் மட்டுமல்ல, கலாச்சாரத்தைப் பின்பற்றுவதிலும் பெருமை கொண்டவர்கள். தாம் இருக்க வேண்டிய இடம் ஐரோப்பா என்று நினைத்துக் கொள்பவர்கள். இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் பிள்ளைகளை போர்த்துக்கல்லிற்கு உயர்கல்விக்காக அனுப்பி வைப்பார்கள். பெற்றோர் தமது பிள்ளை போர்த்துக்கல்லில் படிப்பதாக ஊர் முழுக்க பெருமையடித்துக் கொண்டு திரிவார்கள்.

சனத்தொகையில் அசிமிலடோக்களின் தொகை முப்பதாயிரத்தை தாண்டி விட்டிருந்தாலும், என்னதான் போர்த்துகேய பண்பாட்டை வழுவுறாது பின்பற்றி வந்தாலும் வெள்ளையர்கள் அவர்களை சமமாக மதிக்கவில்லை. சிறந்த அரச பதவிகள் எல்லாம் ஒன்று வெள்ளையருக்கு அல்லது கலப்பினத்தவருக்கே ஒதுக்கப்பட்டன. அரசின் இனப்பாகுபாட்டுக் கொள்கை அசிமிலாடோக்கள் மத்தியில் விரக்தியை தோற்றுவித்தது. இளைஞர்கள் மத்தியில் தேசியவாதச் சிந்தனைகள் தோன்றின. அவர்களில் ஒருவர் அகொஸ்திஞோ நேட்டோ, போர்த்துக்கல்லில் மருத்துவப் பட்டம் பெற்ற கவிஞர். நேட்டோவும் அவரது தோழர்களும் போர்த்துக்கல் பல்கலைக் கழகங்களில் கல்வி கற்கும்போது மார்க்சிய அரசியலில் ஈடுபாடு காட்டினர். போர்த்துகேய கம்யூனிஸ்ட் கட்சி மட்டுமே ஆப்பிரிக்கர்களைச் சமமாக மதித்தது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம். மேலும் ஆப்பிரிக்கர்கள் தமது தாயகத்திற்கான தேசிய விடுதலைக்காக போராடுவது நியாயமானது என்று கம்யூனிஸ்ட்டுகள் ஏற்றுக்கொண்டிருந்தனர்.

அங்கோலா விடுதலைக்கான மக்கள் இயக்கம் என்ற MPLA (Movimento Popular de Libertação de Angola) ஸ்தாபிக்கப்பட்ட போது, சில வெள்ளையின கம்யூனிஸ்ட்டுகளும் காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டனர். இதன் காரணமாக அங்கோலா விடுதலைப் போராட்டம் ஒரு போதும் அனைத்து வெள்ளையினத்தவர்களுக்கும் எதிராகத் திரும்பவில்லை. இன்றும் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளையினத்தவர்கள் அங்கோலா பிரஜைகளாக வாழ்வதைக் காணலாம். மார்க்சிய-லெனினிய தத்துவத்தை வரித்துக் கொண்ட MPLA, நகர்ப்புற ஏழை மக்கள் மத்தியில் ஆதரவுத்தளத்தைக் கொண்டிருந்தது. இன்று MPLA மார்க்சிய சித்தாந்தத்தைக் கைகழுவி விட்டாலும், பொதுத் தேர்தல்களில் மாநகரச் சேரிகளில் MPLA-க்கு அதிக வாக்குகள் கிடைக்கின்றன.

ஒரு சாராரால் படித்த புத்திஜீவிகளின் இயக்கமாக MPLA கருதப்பட்டது. அங்கோலாவில் மேலும் இரண்டு இயக்கங்கள் விடுதலைப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்டன. அங்கோலா தேசிய விடுதலை முன்னணி (FNLA) என்றொரு கம்யூனிச விரோத, பழமைவாதக் கட்சியொன்று இருந்தது. இழந்த மன்னராட்சியை மீட்பது அவர்களது கொள்கை. அதாவது ஆண்ட பரம்பரைக் கனவுகளைக் கொண்ட வலதுசாரி தேசியவாதம் பேசியது. 1975-ஆம் ஆண்டு சுதந்திரம் கிடைத்த கையோடு MPLA க்கும், FNLA-க்கும் இடையில் அதிகாரத்திற்காக சண்டை மூண்டது. FNLA க்கு அயல்நாடான காங்கோ மற்றும் சி.ஐ.ஏ. ஆகியன உதவி செய்தன. இருப்பினும் ஒரு ஆண்டு கால யுத்தத்தின் இறுதியில் FNLA தோல்வி கண்டது. எஞ்சிய உறுப்பினர்கள் காங்கோவில் தஞ்சம் புகுந்தனர். மூன்றாவது இயக்கமான 'அனைத்து அங்கோலா சுதந்திரத்திற்குமான தேசிய கூட்டணி' (União Nacional para a Independência Total de Angola) UNITA பல தசாப்தங்களுக்கு நின்று பிடித்து சண்டையிட்டது. இது பற்றி பின்னர் விரிவாகப் பார்ப்போம்.

அங்கோலாவின் விடுதலைப் போராட்டம், 1960-ஆம் ஆண்டு விவசாயிகளின் எழுச்சியுடன் ஆரம்பமாகியது. காலனிய அரசு பருத்தி பயிரிடுமாறு விவசாயிகளைக் கட்டாயப்படுத்தியது. விவசாயிகள் இந்த உத்தரவுக்கு அடிபணிய மறுத்து கலகம் செய்தனர். அதே நேரம் இன்னொரு பக்கத்தில் கோப்பி தோட்ட முதலாளிகள் நிலங்களை அபகரித்துக் கொண்டிருந்தனர். இந்த நெருக்கடிகள் போதாதென்று அதிகரிக்கப்பட்ட வரி வேறு விவசாயிகளைச் சுரண்டிக் கொண்டிருந்தது. விவசாயிகளைக் கிளர்ந்தெழ வைக்க ஏதுவான காரணங்கள் அங்கே நிலவின. அங்கோலாவின் வட பகுதியெங்கும் புரட்சித்தீ பற்றியது. காலனிய அரசுக்கு முண்டு கொடுத்துக் கொண்டிருந்த இரண்டாயிரம் போர்த்துக்கேயர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளர்ச்சியாளர்களால் கொல்லப்பட்டனர். போர்த்துக்கேய இராணுவம் பதிலடி கொடுப்பது என்ற பெயரில் கிளர்ச்சியை ஈவிரக்கமின்றி நசுக்கியது. குறைந்தது இருபதாயிரம் கருப்பினத்தவர்கள் கொல்லப்பட்டனர். ஒரு இலட்சம் பேர் அகதிகளாக அயல்நாடுகளில் தஞ்சம் கோரினர்.

விவசாயிகள் எழுச்சி அடக்கப்பட்டாலும், விடுதலை இயக்கங்களுக்கு மக்கள் ஆதரவு பெருகியது. MPLA, FNLA, UNITA ஆகிய இயக்கங்கள் காலனிய அரசுக்கு எதிரான கெரில்லா போராட்டம் நடத்தின. காலனிய அரசினால் கெரில்லாக்களை எதிர்த்து போரிட முடியாமல் போனதால், புதிய தந்திரம் ஒன்றை நடைமுறைப் படுத்தியது. அங்கோலா முழுவதும் தடுப்பு முகாம்கள் அமைக்கப்பட்டு, மக்கள் அங்கே தங்கவைக்கப்பட்டனர். மக்கள் என்ற தண்ணீரையும், கெரில்லாக்கள் என்ற மீன்களையும் பிரிக்கும் வேலையில் போர்த்துக்கேயர் ஓரளவு வெற்றிபெற்றனர் எனலாம். 1975-ம் ஆண்டு, சுமார் 75000 போர்த்துகேய படையினரும், 20000 கெரில்லாக்களும் மீள முடியாத போர்ச் சகதிக்குள் சிக்கியிருந்தனர். அந்த ஆண்டு போர்த்துக்கல்லில் இடம்பெற்ற அரசியல் மாற்றம், போரில் திருப்புமுனையாக அமைந்தது.

போர்த்துகல்லில் இராணுவ இயந்திரம் சர்வாதிகாரி சலசாரின் அதிகாரத்தை கேள்விக்குட்படுத்தியது. இடதுசாரி இராணுவ அதிகாரிகள் புரட்சிக்கு தலைமை தாங்கினர். இளம் போர்வீரர்களை அரசியல்மயப்படுத்தினர். முகாம்களில் இருந்த படைகளை தலைநகர் லிஸ்பனை நோக்கி வழிநடத்திச் சென்றனர். ஒரு சில மணிநேரமே நீடித்த துப்பாக்கிச் சண்டையின் பின்னர், சலசார் நாட்டை விட்டு ஓடினான். மிகக் குறைந்த உயிரிழப்புகளுடன், போர்த்துக்கல்லில் சோஷலிச புரட்சி வென்றது. கம்யூனிஸ்ட்களும், சோஷலிஸ்ட்களும் லிஸ்பனில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றினர். புதிய இடதுசாரி அரசாங்கம் ஆப்பிரிக்க காலனிகளுக்கு சுதந்திரம் வழங்க முன்வந்தது. அங்கோலா விடுதலைக்காக போராடிய மூன்று இயக்கங்களும், போர்த்துகேய அரசும், 15 ஜனவரி 1975 அன்று, 'அல்கார்வே' என்ற இடத்தில் வைத்து, ஒரு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன. 11 நவம்பர் 1975 அன்று பூரண சுதந்திரம் வழங்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரப் பிரகடனம் செய்யப்பட்ட நேரம், MPLA, FNLA, UNITA ஆகிய மூன்றும் சேர்ந்து கூட்டு அரசாங்கம் அமைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இந்த மூன்று இயக்கங்களும் தாம் மட்டுமே ஆள வேண்டுமென விரும்பினார்கள். போர்த்துக்கேய கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுதலின் பேரில், சோவியத் யூனியன் MPLA க்கு ஆதரவளித்தது. தலைநகர் லுவான்டாவும், எண்ணெய் வளமுள்ள கரையோர பகுதிகளும் MPLA இன கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. அமெரிக்கா FNLA, UNITA வுக்கு ஆதரவளித்து வந்தாலும், ஒரு கட்டத்தில் உதவியை நிறுத்திக் கொண்டது. MPLA சந்தர்ப்பத்தை பயன்படுத்தி FNLA யை ஒழித்துக் கட்டியது. ஆனால் UNITA மட்டும் நிலைத்து நின்றது. எதிர்பாராவிதமாக தென் ஆப்பிரிக்காவின் ஆதரவு கிடைத்தது அதற்கு காரணம்.

அப்போது தென் ஆப்பிரிக்காவை வெள்ளை நிறவெறி அரசாங்கம் ஆட்சி செய்தது. பாசிச தென் ஆப்பிரிக்கா தனது எல்லையில் ஒரு சோவியத் சார்பு கம்யூனிச நாடு வருவதை விரும்பவில்லை. மறுபக்கத்தில் இந்த சந்தர்ப்பவாத கூட்டணியை MPLA தனக்கு சாதகமாக பயன்படுத்திக் கொண்டது. ஐரோப்பிய ஒன்றிய கூட்டத் தொடரில் UNITA வுக்கு தென் ஆப்பிரிக்க உதவி கிடைப்பதை அம்பலப்படுத்தியது. தென் ஆப்பிரிக்காவை சார்ந்து நிற்பது மனித விழுமியங்களுக்கு எதிரானதாக கருதப்பட்ட காலத்தில், அனைத்து ஆப்பிரிக்க நாடுகளும் MPLA அரசாங்கத்தை அங்கீகரித்ததில் வியப்பில்லை. இன்னொரு பக்கத்தில் UNITA-விற்கு சீனாவிடம் இருந்தும் உதவி கிடைத்து வந்தது. மாவோவின் 'மூன்றுலகத் தத்துவம்' நடைமுறையில் இருந்த காலம் அது. அமெரிக்க ஏகாதிபத்தியம், சோவியத் சமூக ஏகாதிபத்தியம் ஆகியன இரு வேறு உலகங்களாகவும், மிகுதியுள்ள நாடுகள் எல்லாம் மூன்றாவது உலகமாகவும் பார்த்த சித்தாந்தம் பின்னர் காலாவதியாகிப் போனது. அனேகமாக MPLA-க்கு சோவியத் நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியதால், அதற்குப் போட்டியாக சீனா UNITA-வுக்கு உதவியது.

அப்போதெல்லாம் MPLA இராணுவம் பலமானதாக இருக்கவில்லை. MPLA அரசின் நிர்க்கதியான நிலைமையை பயன்படுத்தி, தென் ஆப்பிரிக்கா அங்கோலா மீது படையெடுத்தது. அங்கோலாவின் தெற்கு எல்லையில் இருக்கும் நமீபியா, அப்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறவெறி தென் ஆப்பிரிக்காவினால் ஆக்கிரமிக்கப் பட்டிருந்தது. தென் ஆப்பிரிக்க படையெடுப்பை சமாளிக்க முடியாமல் MPLA இராணுவம் பின்வாங்கிக் கொண்டிருந்தது. தக்க தருணத்தில் பிடல் காஸ்ட்ரோ தலையிட்டு இருக்காவிட்டால், தென் ஆப்பிரிக்கா அங்கோலாவை ஆக்கிரமித்திருக்கும். காஸ்ட்ரோ தனிப்பட்ட முறையில் அன்றைய சோவியத் அதிபர் குருஷோவுடன் தொடர்பு கொண்டு, ஆயுதங்களை அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். MPLA அரசை தூக்கி நிறுத்துவதற்காக 250 கியூபா வீரர்கள் அனுப்பி வைக்கப்பட்டனர். கியூபா படையினர் சோவியத் ஆயுதங்களை கையாள்வது தொடர்பான பயிற்சி அளிப்பதிலும், இராணுவ ஆலோசனை வழங்குவதிலும் ஈடுபட்டனர்.

தென் ஆப்பிரிக்க ஆக்கிரமிப்புப் படைகளை கியூபர்கள் விரட்டியடித்த பிறகு அமெரிக்கா விழித்துக் கொண்டது. கியூபா படைகளை வெளியேற்றினால், நமீபியாவிற்கு சுதந்திரம் கிடைக்க வழிவகுப்பதாக இராஜதந்திர நகர்வை மேற்கொண்டது. அதே நேரம் அமெரிக்கா UNITA வுக்கு சாம்பியா ஊடாக ஆயுதங்களை வழங்கி வந்தது. பனிப்போர் உச்சக்கட்டத்தில் இருந்த காலம் அது. MPLA-வும், UNITA வும் சமபலத்துடன் போரிட்டு வந்தார்கள். போரில் யாரும் வெல்லமுடியாது என்ற எண்ணம் நிலவியது. MPLA கரையோர பிரதேசங்களில் பலமாக இருந்தது. உள் நாட்டுப் பகுதிகள் பல UNITA வின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்தன. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு காரணமாக இருந்த கோர்பசேவ் காலத்தில் கள நிலைமை வேகமாக மாறியது.

1991 மே முதலாம் திகதி, அமெரிக்கா, சோவியத், ஐ.நா., மேற்பார்வையின் கைச்சாத்தான சமாதான உடன்படிக்கை போரை முடிவுக்கு கொண்டுவருமென அனைவராலும் எதிர்பார்க்கப்பட்டது. பேச்சுவார்த்தையின் இறுதியில் பல தீர்மானங்கள் எட்டப்பட்டன. அனைத்து அந்நியத் துருப்புகளும் வெளியேற வேண்டும். UNITA போராளிகள் தேசிய இராணுவத்தில் சேர்க்கப்பட வேண்டும். ஆயுதங்கள் வாங்குவது நிறுத்தப்பட வேண்டும். பாராளுமன்றத்திற்கான பொதுத் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இவற்றை கண்காணிக்க Unavem என்ற ஐ.நா. சமாதானப்படை நிறுத்தப்படும். அதே ஆண்டு சோவியத் யூனியனும் மறைந்து போனதால், அமெரிக்கா உலகின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரேயொரு வல்லரசாக மாறி விட்டிருந்தது. ஒப்பந்தப் படி கியூப படைகளை வெளியேற்றிய MPLA அரசு, அமெரிக்கா பக்கம் சாயத் தொடங்கியது. ஏற்கனவே அங்கோலாவின் எண்ணெய் கிணறுகளை அமெரிக்க கம்பெனிகள் நிர்வகித்து வந்தன. அங்கோலா எண்ணெய் முழுவதும் இனி தனக்குத்தான் என்ற மகிழ்ச்சியில், அமெரிக்கா MPLA அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கியது. பகைவர்கள் நண்பர்களான இன்னொரு கதை இது.

இதற்கிடையே UNITA இயக்கம் சர்வதேச அரசியல் மாற்றங்களை கவனிக்காமல் தப்புக்கணக்கு போட்டது. UNITA போரை தற்காலிகமாக நிறுத்திக் கொள்வதாகவே கருதியது. தனது பலத்தில் கொண்ட அசாத்திய நம்பிக்கையினால் மட்டுமல்ல, அமெரிக்க செனட் சபையில் இருந்த நண்பர்களையும் கருத்தில் கொண்டு, அமெரிக்க ஆதரவு தொடரும் என்று கருதியது. இதற்கிடையே 1992 ம் ஆண்டு, பொதுத் தேர்தல் இடம்பெற்றது. சர்வதேச கண்காணிப்பின் கீழ் இடம்பெற்ற சர்வசன வாக்குப் பதிவு, எந்த வித அசம்பாவிதமும் இன்றி நடந்தேறியதாக சான்றிதழ் வழங்கப்பட்டது. நாடாளுமன்றத்தில் மொத்தம் 220 ஆசனங்களில், MPLA 129 ஆசனங்களை கைப்பற்றியது. எதிர்பார்த்த படி பெரும்பான்மை கிடைக்காத UNITA, இந்தத் தேர்தல் ஒரு மோசடி என்று பிரேரித்தது. தேர்தலை கண்காணித்த ஐ.நா. உயரதிகாரி UNITA வின் குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ளவில்லை. இதனால் அந்த உயரதிகாரி 'வைரக் கடத்தல்காரர்' என்று தூற்றப்பட்டார். உண்மையில் UNITA இயக்கத்தின் முக்கிய வருமானம் வைர விற்பனையால் கிடைத்து வந்தது. போரின் இறுதிக் காலங்கள், வைரச் சுரங்கங்களை யார் கட்டுப்படுத்துவது என்பதிலேயே கவனம் செலுத்தப்பட்டது.

பனிப்போர் காலத்தில், அமெரிக்க, சோவியத் எதிர் வல்லரசுகள் தமது பதிலிப் போர்களை மூன்றாம் உலக நாடுகளில் நடத்திக் கொண்டிருந்தன. சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்குப் பின்னர், அமெரிக்கா தலைமையிலான ஒரு துருவ உலக ஒழுங்கின் கீழ் பதிலிப் போர்கள் தேவையற்றுப் போயின. அங்கோலா அரசாங்கமே அமெரிக்காவின் கைகளுக்குள் வந்த பின்னர், UNITA என்ற போராளிக் குழுவிற்கு ஆதரவளிக்க வேண்டிய அவசியம் அங்கிருக்கவில்லை. ஆயினும் UNITA இந்த உண்மையை உணரவில்லை. அமெரிக்கா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதரவு நிலையானது என்ற இறுமாப்பில் யுத்தத்திற்கு தயார் படுத்தியது. மறு பக்கத்தில், MPLA அரசும் இறுதிப்போருக்கு தயாராகவே இருந்தது. தனக்கு சார்பான பொது மக்களுக்கும் ஆயுதங்களை வழங்கியது. தேர்தல் நடந்த அதே ஆண்டு, அக்டோபர் மாதம் மீண்டும் யுத்தம் வெடித்தது. இரகசியத் திட்டமொன்றின் படி, தலைநகர் லுவான்டாவில் UNITA ஆதரவாளர்கள் அனைவரும் ஒழித்துக் கட்டப்பட்டனர். போரினால் நாடு முழுவதும் சுடுகாடாக்கியது.

அங்கோலாவின் மத்தியில் அமைந்துள்ளது 'குய்த்தோ' நகரம். பொதுத் தேர்தலில் UNITA விற்கு ஆதரவாக இந்தப் பகுதியில் பெருமளவு வாக்குகள் கிடைத்தன. பொதுத் தேர்தலில் UNITA விற்கு வாக்களித்த அத்தனை பேரும் ஆதரவாளர்கள் என்று சொல்ல முடியாது. தசாப்த கால யுத்தத்தினால் மக்கள் வெகுவாக கலைத்து போயிருந்தனர். குய்த்தோ போன்ற UNITA கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழ்ந்த மக்கள், எப்படியாவது UNITA சமாதானமாகப் போனால் நல்லது என்ற எதிர்பார்ப்பில் வாக்களித்துள்ளனர். UNITA மக்களின் அபிலாஷைகளை மதிக்கத் தவறியதும், அதன் தோல்விக்கு ஒரு காரணமாகும். இறுதியாக நடந்த போரில் அரச படைகளின் கட்டுப்பாட்டில் இருந்த குய்த்தோ நகரை, UNITA போராளிகள் சுற்றி வளைத்தனர். 9 மாதங்களாக நான்கு சதுர மைல் நிலப்பரப்பிற்குள் முப்பதாயிரம் மக்கள் அடைபட்டுக் கிடந்தனர். கண்மூடித்தனமான ஷெல் வீச்சுக் காரணமாக ஆயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

போர்க் காலத்தில் ஐ.நா. சமாதானப் படையின் கைகள் கட்டப்பட்டிருந்ததை உணர முடிந்தது. ஐ.நா. அதிகாரிகள் கோரிய சர்வதேச உதவி கடைசி வரை கிட்டவில்லை. அமெரிக்கா உட்பட மேற்கத்திய நாடுகள், எப்படியாவது போரில் ஒருவர் வெல்லட்டும் என்று வாளாவிருந்து விட்டனர். UNITA சமாதானமாகப் போகாமல் முரண்டு பிடிக்கின்றது என்ற ஏமாற்றத்தால் விளைந்த ஓரவஞ்சனை காரணமாக இருக்கலாம். சர்வதேச நாடுகளின் மௌனம் அரசுக்கு சார்பாக அமைந்தது. UNITA தலைவர் சாவிம்பி, அரச படைகளின் திடீர் தாக்குதலில் கொல்லப்பட்ட பின்னர், போர் முடிவுக்கு வந்தது.

அடுத்த ஆறு மாதங்களில் எஞ்சிய போராளிகள் அனைவரும் சரணடைந்தனர். போர் முடிவதற்கு சில மாதங்களுக்கு முன்னர், UNITA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபதி ஒருவரும் அவரது ஆதரவாளர்களும், அரசுடன் சேர்ந்து கொண்டார்கள். 'புதிய UNITA' என்ற கட்சியை ஸ்தாபித்து, அரச இராணுவத்தின் துணைப்படையாக செயற்பட்டனர். UNITA வின் வீழ்ச்சிக்கு முன்னாள் தளபதியின் துரோகம் மட்டும் காரணமல்ல. யுத்தம் தொடங்கிய நேரம், UNITA கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் இயங்கிய சர்வதேச தொண்டர் ஸ்தாபனங்களை அரசு வெளியேற்றியிருந்தது. UNITA சில தொண்டர்களை வெளியேற விடாமல் பணயக் கைதிகளாக வைத்திருந்தும், நிலைமை அவர்களுக்கு சாதகமாக அமையவில்லை.

அங்கோலா யுத்தம் ஒரு வழியாக முடிவுற்று, சமாதானம் நிலவினாலும், மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் இன்னும் தீரவில்லை. அங்கோலா ஆப்பிரிக்காவின் மிகவும் வறிய நாடுகளில் ஒன்று. பல இடங்களில் கண்ணிவெடிகள் அகற்றப்படாததால், விவசாய உற்பத்திகள் பாதிக்கப்படுகின்றன. இதனால் உணவுப் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதைத் தவிர பல்லாயிரம் மக்கள் அங்கவீனர்களாக எஞ்சிய காலத்தை கழிக்க வேண்டிய பரிதாப நிலை. நாட்டில் ஒவ்வொரு குடும்பமும் எதோ ஒரு வகையில் போரினால் பாதிக்கப் பட்டுள்ளது. போரினால் ஏற்பட்ட ஆழமான வடுக்கள் காரணமாக, மக்கள் மத்தியில் சமாதானத்திற்கான ஏக்கம் அதிகரித்து வருகின்றது. இன்று அனைவரும் அரசை ஆதரிக்கிறார்கள் என்பது இதன் அர்த்தமல்ல. நீண்ட கால போரின் விளைவாக, அரசிற்கெதிரான எதிர்ப்பு மழுங்கிப் போயுள்ளது. இதனால் வறுமை கூட சகித்துக் கொள்ளப் பட வேண்டிய ஒன்றாகி விட்டது.

இன்று அங்கோலா அமெரிக்காவிற்கு எண்ணெய் ஏற்றுமதி செய்யும் நாடுகளில் ஒன்று. இதன் காரணமாக இரு நாடுகளிற்கும் இடையில் சிறந்த நட்புறவு நிலவுகின்றது. ஒரு காலத்தில் இருந்த சோஷலிசப் பொருளாதாரம் கைவிடப்பட்டு, முதலாளித்துவ மயமாகி விட்டது. MPLA தலைவர்கள் கூட எண்ணெய் விற்று கிடைத்த லாபத்தில் பணக்காரர்களாக வாழ்கின்றனர். இவையெல்லாம் அமெரிக்காவிற்கு உவப்பான செய்திகள் தான். இருப்பினும் அங்கோலாவின் அசைக்க முடியாத இராணுவ பலமும், காங்கோவில் அதன் சாகசங்களும் அமெரிக்காவின் கண்ணை உறுத்துகின்றது. இன்று உலகம் எவ்வளவோ மாறி விட்டது. மூன்றாம் உலக நாடுகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்குலகம் விதிக்கும் உத்தரவுகளுக்கு கட்டுப்பட்டு அடங்கிக் கிடந்த காலம் ஒன்றிருந்தது. ஆனால் இன்று அங்கோலா போன்ற சில நாடுகள் தேசிய அரசியல், பொருளாதாரத்தை தாமே தீர்மானிக்க வேண்டுமென விரும்புகின்றன. அங்கோலா நிலையான ஆட்சி, பலமான இராணுவம் போன்ற அரசியல் ஸ்திரத் தன்மையும், பெற்றோலியம், வைரம் போன்ற அதிக வருவாய் ஈட்டித் தரும் பொருளாதார வளங்களையும் ஒருங்கே கொண்டது. இவையெல்லாம் அங்கோலா மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த உதவுமா?

அங்கோலாவில் இன்னும் தீர்க்கப்படாத பிரச்சினைகள் ஏராளமாக உள்ளன. ஆரம்பத்தில் MPLA-க்கும், UNITA-விற்கும் இடையிலான போரில் சில இன வேற்றுமைகள் தொக்கி நின்றன. அசிமிலாடோஸ் என அழைக்கப்பட்ட போர்த்துகேய மயப்பட்ட கருப்பர்கள், கலப்பினத்தவர்கள், வெள்ளையினத்தவர்கள் எல்லோரும் UNITA-இற்கு ஆதரவளித்தனர். அதற்கு மாறாக உள்நாட்டில், பாரம்பரிய ஆப்பிரிக்க சமூக கட்டமைப்பை பேணி வரும் இனங்களின் வாழ்விடங்கள், UNITA-வின் ஆதரவுத் தளமாக இருந்தது. போருக்குப் பின்னான காலத்தில், அரசுடன் ஒத்துழைக்கும் முன்னாள் UNITA பிரமுகர்களுக்கு பதவிகள் வழங்கப்பட்டாலும், அவர்கள் பிரதிநிதித்துவப் படுத்திய மக்களின் குறைகள் இன்னும் தீர்க்கப்பட வில்லை. இன்று வரை அரசாங்கம், கண்ணிவெடி இன்னும் அகற்றப் படாமல் இருக்கும் பிரச்சினை குறித்து மட்டுமே பேசி வருகின்றது.

இதற்கிடையே கபிண்டா மாகாணத்தின் பிரச்சினை, சர்வதேச கவனத்தைப் பெறாவிட்டாலும், அதுவும் இன்னும் தீர்க்கப்பட வில்லை. அங்கோலாவின் பெரு நிலப்பரப்புடன் சேராமல், கொங்கோ எல்லையிலிருந்து சிறிது தொலைவில் இருக்கும் தனியான மாகாணம் கபிண்டா. சுருக்கமாக அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்துடன் ஒப்பிடலாம். அங்கோலாவிற்கு சொந்தமான 3000 சதுர மைல் நிலப்பரப்பு, பிராசவில்-கொங்கோவிற்கும், கின்சாசா கொங்கோவிற்கும் நடுவில் அமைந்துள்ளது. மாகாணம் சிறிதாக இருந்தாலும் அதன் மகாத்மியம் பெரிது. அங்கோலாவின் 70 வீதமான எண்ணெய் கபிண்டாவில் இருந்து அகழ்ந்து எடுக்கப்படுகின்றது. அதாவது அங்கோலாவின் பெருமளவு அந்நிய வருமானத்தை கபிண்டா வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FLEC என்ற ஒரு ஆயுதமேந்திய இயக்கம் கபிண்டாவின் விடுதலைக்காக போராடி வருகின்றது. 30 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடத்தியும், அங்கோலா அரசுக்கு தலைவலியை தவிர வேறெந்த தாக்கத்தையும் ஏற்படுத்தவில்லை. FLEC இன்று சிறு குழுக்களாக பிரிந்துள்ளதால், அவர்களது போராட்டம் இனியும் வெல்லுமா என்பது சந்தேகமே. கபிண்டாவில் அங்கோலா படையினர் பல்வேறு மனித உரிமை மீறல் குற்றங்களை புரிந்துள்ளதாக தெரியவந்துள்ளது. கபிண்டா விடுதலை இயக்கத்தினருக்கு உள்ள ஒரேயொரு சர்வதேச ஆதரவு, ஐ.நா.சபையின் 'பிரதிநிதித்துவப் படுத்தாத நாடுகளின் மன்றம்' (UNPO). எந்தவித அரசியல் அதிகாரமும் இல்லாத இந்த மன்றத்தில், திபெத், மேற்கு சஹாரா, போன்ற சுதந்திர தேசத்திற்காக போராடும் பல அமைப்புகள் அங்கம் வகிக்கின்றன.

FLEC தனது தேசியவாதத்திற்கு இன அடிப்படை இருப்பதாக கூறுகின்றது. காங்கோலிய இனத்தை சேர்ந்த 'பகொங்கோ' மக்களின் தாயகமாக கபிண்டாவை வரையறுக்கின்றனர். அங்கோலா அரசு இந்த தேசிய இனக் கருத்தியலை நிராகரிக்கின்றது. வட அங்கோலா மாகாணமான ஸயரிலும் பகொங்கோ இனத்தவர்கள் வாழ்வதை சுட்டிக் காட்டி, கபிண்டர்களின் போராட்டம் வெறும் பொருளாதாரக் காரணத்தை மட்டும் கொண்டுள்ளதாக பதிலளித்து வருகின்றது. கபிண்டா விடுதலை இயக்க தலைவர்களும் பெற்றோலிய வருமானத்தை பங்கிடுவதை தமது பிரதான கோரிக்கையாக முன்வைக்கின்றனர். செல்வத்தை சமமாகப் பங்கிடாவிட்டால் அங்கோலாவின் பிற பகுதிகளும் எதிர்காலத்தில் கொந்தளிக்க வாய்ப்புண்டு.

★★★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வேலையை வேகமாக முடிக்காததால்
வெட்டப்பட்ட கறுப்பின மக்களின் கைகளில்
ரப்பர் பால் வழியும் காங்கோ...

கறுப்புத்தோலை உரித்துஎடுக்கும்
சூடானின் கட்டித் தங்கங்கள்...

உலகுக்கே கோப்பியை ஏற்றுமதி செய்துவிட்டு
எலும்பும் தோலுமாய்
சாவை இறக்குமதி செய்யும் எத்தியோப்பியா...
இப்படி... ஆப்பிரிக்கத் துயரங்களுக்கு
காரணமான ஐரோப்பியச் சுரண்டல் இருட்டை
வெளுக்கிறது இந்நூல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org